மலர் - 04 இதழ் - 7 - டிசம்பர் 2025

தமிழணங்கு

(தமிழால் இணைவோம்)

இலக்கிய
சமய
பண்பாட்டுப்
பன்மொழி
மின்னிதழ்

நிறுவனர் & தலைமைப் பதிப்பாசிரியர் முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி

"கல்விக் கடவுள் மெக்காலேயா? சரசுவதியா?"
முனைவர் சிவ. இளங்கோ

காதல், வீரம், தோழமை பேசிய ஔவையார்
முனைவர் கோவிந்தசாமி ராஜகோபாலன்

Murukan and Veriyaatam
Akshayan

கோவண நாடகம்
இரா. கலைக்கோவன்

எம்பார் வைபவம்!
ஜனக்புரி சீனிவாசன்

கவிஞர் அதிரனின் அம்மாவின் பூனை
நெல்லை ெ. சோமசுந்தரி

ஊரெல்லாம் பேர் : தமிழக ஊர்ப் பெயர்கள்
மூ. பழநிச்சாமி

TAMILMAGAN's Gene Notes in Vengai Anchor
Dr. C. Rajeswari M.A., M.Phil., Ph.D

இன்னும் பல ...

[illegible]

தமிழர் இலக்கிய சமய பண்பாட்டு ஆய்விதழ்

தமிழணங்கு

(தமிழால் இணைவோம்)

மலர் - 04 இதழ் - 6
டிசம்பர் 2025

நிறுவனர் & தலைமைப் பதிப்பாசிரியர்
முனைவர் திருமதி செ. இராஜேஸ்வரி

பொறுப்பாசிரியர்
முனைவர் சந்திரிகா சுப்பிரமணியன்

ஆசிரியர் குழு
முனைவர் தேமொழி (அமெரிக்கா)
Dr. புதேரி தானப்பன் (டில்லி)

வடிவமைப்பு
அருணேஷ்
செயற்கை நுண்ணறிவு படங்கள்
முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி

Thamizhanangu
Printed and Published by :
E.Satish Rajkumar (Advocate)
3/422, Thiruvalluvar Street, Dinamani Nagar,
Madhurai, Tamil Nadu – 625 018.
Ph : +91 78711 23226, +91 70109 97639

கட்டுரைகள் அனுப்ப..
rajetamiljuly1@gmail.com

இவ்விதழில் இடம் பெற்றுள்ள கருத்துகள் அனைத்தும் கட்டுரையாளர்களின் கருத்துகளே ஆகும். அவற்றுக்கும் இதழாசிரியருக்கும் எந்தத் தொடர்பும் இல்லை
– இதழ் ஆசிரியர்

உள்ளடக்கம்

1. **“கல்விக் கடவுள் மெக்காலேயா? சரசுவதியா?"** 3
   முனைவர் சிவ. இளங்கோ
2. **நான்காம் தமிழ் சங்கம் தொடங்கிய இராமநாதபுர மன்னர் பாஸ்கர சேதுபதி** 10
3. **யார் தமிழர்...?’ கா.சு. பிள்ளை வகுத்த வரையறை... !** 11
4. **காதல், வீரம், தோழமை பேசிய ஔவையார்** 15
   முனைவர் கோவிந்தசாமி ராஜகோபாலன்,
5. **எழுத்துடன் கூடிய செம்பியன்கண்டியூர் கற்கோடாரி** 28
   டாக்டர் அண்ணாமலை சுகுமாரன்
6. **மகளிர் மாண்புகாத்த மாதரசி ஏமி கார்மைக்கல் அம்மையார்** 31
   பேரா. முனைவர் மோ. மைக்கேல் பாரடே,
7. **கோவண நாடகம்** 40
   மு. நளினி, இரா. கலைக்கோவன்
8. **எம்பார் வைபவம்!** 45
   ஜனக்புரி சீனிவாசன்
9. **கவிஞர் அதிரனின் அம்மாவின் பூனை** 47
   நெல்லை. G. சோமசுந்தரி
10. **புள்ளிவிவரங்களுக்குள்ளிருக்கும் புதிர்கள்** 51
    முனைவர் ச.அய்யம்பிள்ளை
11. ***Murukan and Veriyaatam*** 56
    Akshayan
12. **எட்டுத்தொகைப் பத்துப்பாட்டுத் தொகுப்பு வெண்பாக்கள் ஒரு விளக்கம்** 59
    முனைவர் மு. முத்துவேலு
13. **ஆசிரியத் தாழிசை** 65
    நெருப்பலையார். இராம இளங்கோவன்
14. **பாண்டியர்கள் இருண்ட காலத்தை நீக்கிய வேள்விக்குடி செப்பேடுகள்!** 68
    மணியன் கலியமூர்த்தி
15. **என்.சரவணன் நேர்காணல்** 76
16. ***Hindu lady* டாக்டர் ருக்மா** 89
    சுரேஷ்குமார்
17. **ஊரெல்லாம் பேர் : தமிழக ஊர்ப் பெயர்கள்** 91
    மு. பழநிச்சாமி
18. ***TAMILMAGAN’s Gene Notes in Vengai Anchor*** 109
    Dr. C. Rajeswari M.A., M.Phil., Ph.D

Date: Sun, 12 Oct 2025 20:47:35 -0500
Subject: காரைக்கால் அம்மையார் -பழநிச்சாமி அவர்கள் கட்டுரை.

தமிழணங்கு ஆசிரியர் அவர்களுக்கு, தமிழணங்கு அக்டோபர் 25ல் வெளிவந்துள்ள காரைக்கால் அம்மையார் பற்றிய கட்டுரை, கருத்தாழமிக்க ஆய்வுக் கட்டுரையாக அமைந்துள்ளது. மாறுபட்ட கண்ணோட்டத்துடன் சிந்தித்து வியப்பில் ஆழ்த்தியுள்ளார் - கட்டுரை ஆசிரியர். காரைக்கால் அம்மையார் பற்றிய ஆய்வுப்போக்கில் இது ஒரு மைல்கல். கட்டுரை ஆசிரியருக்கு நெஞ்சம் நிறைந்த பாராட்டுக்கள்.
V.G. Dev, Ph.D, FACMG Nashvil USA

“கல்விக் கடவுள் மெக்காலேயா? சரசுவதியா?"

முனைவர் சிவ. இளங்கோ
புதுச்சேரி

இந்தியாவெங்கும் நவராத்திரி விழா முடிவில் சரசுவதி பூசையும் சேர்த்துக் கொண்டாடப்படுகிறது. இந்நிகழ்வில் கல்விக்கான கடவுள் என்று குறிப்பிட்டு மக்கள் சரசுவதியை வணங்குகின்றனர். இப்படிப்பட்ட வழிபாடுகளில் முதன்மையான பங்கு வகிப்பவர்கள் பெண்களே. கல்விக்கடவுள் பெண் என்பதால், கல்வியைக் கற்பித்தலில், பெண்களுக்கு முன்னுரிமை தந்து, அவர்களின் சமூக மேம்பாட்டிற்குத் துணை நிற்க வேண்டியவர் சரசுவதியே. ஆண்களுக்கும் கல்வி உரிமை என்றாலும், பெண் கடவுள் கல்விக்குத் தலைமை ஏற்பதால், பெண்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டியது நியாயமே என்று எண்ணுவது இயல்புதானே! ஆனால் வரலாறு நமக்குக் கூறும் உண்மை என்ன?

1881 இல், இந்தியர்களின் எழுத்தறிவு 4.32% மட்டுமே. இதில் ஆண்கள் மட்டும் 8.10% விழுக்காடு. பெண்கள் வெறும் 0.35% தான். இதுவே 2011 இல், இந்தியர்களின் எழுத்தறிவு 74.04 %. இதில் ஆண்கள் 82.14 %. பெண்கள் 65.46%. அதாவது, கல்விக் கடவுளாக ஒரு பெண்ணே இருக்கும் நாட்டில், 1881 ஆம் ஆண்டு வரையில் ஒரு விழுக்காடு பெண்களுக்குக் கூடப் படிப்பறிவு இல்லை. நூறாண்டுகளுக்கு முன்பு ஒட்டுமொத்தமாகப் படித்த பெண்களே 4.32% விழுக்காடு தான்.

இவற்றையெல்லாம் கல்விக் கடவுள் சரசுவதி ஆய்வு செய்து சீர் செய்தாரா என்றால் இல்லை. ஆனால் பிரிட்டிஷ் இந்திய அரசாங்கம், 1835 ஆம் ஆண்டில் கொண்டு வந்த கல்விச் சீர்திருத்தங்களினால், அதற்கு 190 ஆண்டுகளுக்குப் பிறகு, இந்தியாவின் கல்வி வளர்ச்சி நிலை எழுபது, எண்பது விழுக்காடு என்ற நிலையைத் தொட்டு, தற்போது அதற்கு மேலும் உயர்ந்து வருகிறது.

இதற்குக் காரணம் யார்? மெக்காலே தான். சென்ற நூற்றாண்டில் அவர் நமக்கு ஒரு வில்லனாகத்தான் அறிமுகம் ஆனார். திறனறி கைப்பேசியும், புலனமும் (WhatsApp) வந்த காலத்தில், “இந்தியாவின் பாரம்பரியக் கல்வி முறையைச் சிதைத்து, வெள்ளைக்காரனுக்குப் பியூன், குமாஸ்தா வேலைகளைச் செய்ய ஆங்கிலத்தைக்

கற்பித்த கயவன் மெக்காலே" என்ற செய்திதான் எல்லா வலைப் பதிவுகளிலும் சுற்றிச் சுற்றி வந்தன. யாரிந்த மெக்காலே? என்ற தேடலும் அங்கிருந்து தொடங்கியது தான்.

மெக்காலே (Lord Thomas Babington Macaulay). பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பனியின் கவர்னர் ஜெனரலாக இருந்த வில்லியம் பெண்டிங்க்கின் சட்ட ஆலோசகராக 1834 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்டார். அதன்படி இங்கிலாந்தை விட்டுப் புறப்பட்டு இந்தியாவுக்கு வந்து, பிரிட்டிஷ் இந்திய கவர்னர் ஜெனரலின் ஆலோசகராகப் பொறுப்பேற்றுக் கொண்ட மெக்காலே, இங்கிலாந்து பாராளுமன்றத்தில் அந்தக் காலத்திலேயே (1825 ஆம் ஆண்டு வாக்கில்) நிறவேற்றுமைக்கு எதிராகக் குரல் எழுப்பியவர். இந்தியாவிற்குப் பணி நிமித்தமாக வந்தபோதும், அதே சமத்துவ நோக்கில் இங்கும் செயல் பட்டவர்.

அதுவரை இந்தியாவில் கல்வி என்றால், 1) வேதப் பாடசாலைகள், 2) இஸ்லாமிய மதராசா, 3) கிருத்துவ மிஷினரி ஆகியவை வழங்கிய கல்வி மட்டுமே இருந்தது. இந்த மூன்றும் வெறும் மதக்கல்வியை மட்டுமே கற்பித்தவை. "இதற்கு இங்கிலாந்து அரசு செலவு செய்வது, பொது மக்களுக்குப் போய்ச் சேரவில்லை. வெறும் மூடநம்பிக்கைகளை மட்டுமே வளர்க்கிறது" என்று சொன்னவர் மெக்காலே. அது மட்டுமா? முதன் முதலில், ஆங்கிலம், கணிதம், அறிவியல், சமூகவியல், தாய்மொழி என்கிற ஐந்து வகைப் பாடங்களை உள்ளடக்கிய பொதுக் கல்வியை இந்தியாவின் கல்வித் திட்டமாகக் கொண்டு வந்தவரும் மெக்காலே தான். பிரிட்டிஷ் அரசாங்கம், எல்லோருக்கும் கல்வி என்ற நிலையைக் கொண்டு வந்த உடனேயே, அனைவரும் போய்ப் படித்து விடவில்லை. 'சரசுவதி இருக்க நமக்கென்ன கவலை' என்று தான் இருந்தார்கள். ஆனால் பிரிட்டிஷ் இந்திய அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகளினால் கல்வி பரவலாக்கப்பட்ட பிறகே, அவரவர் தாய் மொழியிலும் கல்வி கற்கும் வாய்ப்புகள் உருவாக்கப்பட்டப் பிறகே, கல்வி நிலையங்கள் அவரவர் இருப்பிடம் அருகில் அமைந்த பிறகே, இந்தியர்கள் பள்ளிக்கூடம் போகவும், படிக்கவும் தொடங்கினார்கள். அதற்கு முன்பு?



வரலாற்றுக் காலத்திற்கு முன்பு, இனக்குழுக்கள், ஒரு சமூகமாக வளர்ச்சி நிலை பெற்ற காலத்தில், கல்விநிலை என்பது கேள்விக்குரிய ஒன்றுதான். அரசர்களும், பேரரசர்களும் உருவாகாத காலகட்டத்தில் பல இனக்குழுத் தலைவர்கள், குறுநில மன்னர்கள், சிற்றரசர்கள் ஆகியோரின் ஆட்சிக்கு உட்பட்ட பகுதியாகத் தான் இந்தியப் பகுதிகள் இருந்திருக்கின்றன. இதில் முதன்முதலாகச் சிந்து வெளிப்

பகுதியில் இருந்து புலம்பெயர்ந்த மக்கள், குறிப்பாகச் சமணர்களின் பரவல் இந்தியா முழுமையும் கல்விமுறை ஏற்பட வழிவகுத்தது. இனக்குழுக்களாக இருந்து வந்த சமுதாயம், முழுவதும் வேட்டைச் சமூகமாக அறியப்பட்ட காலத்தில், வேட்டைத் தொழிலை விடுத்து, அறம் சார்ந்த பணிகளில் ஈடுபட வேண்டும் என்ற ஒரு சமுதாயச் சிந்தனை, சமயச் சிந்தனையாக, சமணம் மூலமாகப் பரவியது. இந்தியாவின் மிகப் பழமையான சமயமாக அறியப்படும் சமணம், மக்கள் சேவையில் தன்னலமற்றுத் தன்னை ஈடுபடுத்திக் கொண்டதால் அதற்கு ஒரு சமுதாய மதிப்பு ஏற்பட்டது. அந்த மதிப்பை நிலைநிறுத்திக் கொள்ளும் விதத்தில் சமணர்கள் தாங்கள் செல்லும் இடங்களில் எல்லாம் பள்ளிகளை உருவாக்கினார்கள். அவை சமணப் பள்ளிகள் என்றே அறியப்படுகின்றன.

முதன்முதலாக இந்தியாவில் பள்ளி அதாவது கற்பிக்கும் முறையைக் கொண்டு வந்தது சமணர்களே. அவர்கள் தென்னாட்டுக்கு வந்த காலம் மிகவும் சர்ச்சைக்குரிய ஒன்றாக இன்றுவரை கருதப்படுகிறது. பொதுவாகச் சமணத்தின் 24ஆவது தீர்த்தங்கரரான மகாவீரர் காலத்திலிருந்து சமண சமயம் பரவியதாகப் பலரும் குறிப்பிடுகின்றனர். ஆனால் அதற்கும் 200 ஆண்டுகளுக்கு முன்பாக, இருபத்து மூன்றாம் தீர்த்தங்கரரான பார்சுவநாதர் காலத்திலிருந்தே சமணம், அமைப்பாக உருவாகி விடடது. அவருக்கும் முன்பாக முதலாவது தீர்த்தங்கரரான ஆதிநாதர் முதல் பார்சுவநாதர் வரையான காலத்தின் சமயக் கருத்துக்கள் ஒரு கோட்பாடாக உருவாகி, ஒரு சமயமாக இந்தியா முழுமையும் பரவி இருந்திருக்க வேண்டும். அப்படித் தமிழ்நாட்டிலும் சங்க காலத்துக்கு முன்பிருந்தே இப்படிப்பட்ட சமயக் கோட்பாடுகள், குறிப்பாக அறம் சார்ந்த கோட்பாடுகள் பரவியிருந்திருக்கக் கூடும்.

வடபுலத்திலிருந்து வந்த அவர்களைத்தான் ஆரியர் என்று புறநானூறு உள்ளிட்ட சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. வைதிகம் உள் நுழையும் முன்பு வடபுலத்திலிருந்து வந்தவர்களை ஆரியர் என்று உயர்வாக அழைக்கும் போக்கு தமிழ்ச் சமூகத்தில் இருந்தது. கல்வி கற்பிக்கும் முறையினாலும், மருத்துவம் செய்து வந்ததாலும், பிற பொதுச் சேவைகளாலும் சமணர்களுடைய சமுதாயத் தகுதி உயர்வாகக் கருதப்பட்டது. அந்த அடிப்படையில் சமணர்கள் தங்கள் சமயச் சிந்தனைகளையும், சமயத்தையும் பரப்பும் வழியைக் கொண்டிருந்தனர். இதே சமகாலத்தில் பௌத்தர்களும் தங்கள் கல்வி முதலிய சேவைகளால் இந்தியா முழுதும் பரவி இருந்தனர். தமிழகம் வந்த சமணர்கள், ஆசீவகர்கள், பௌத்தர்கள் தமிழகத்திலேயே தங்கி, தமிழ் மொழியைக் கற்று, புலமையும், பாடல் புனையும் திறமையும் பெற்று, தமிழர்களாகவே வாழ்ந்ததுடன், தமிழ் இலக்கியங்களுக்குப் பெரும் பங்களிப்பையும் செய்திருக்கின்றனர்.

சமணம், பவுத்தம் வருகைக்கு முந்தைய தமிழர்களின் கல்வி அறிவுக்குச்சான்றாகவும் சில தொல்லியல் தரவுகள் கிடைத்திருக்கின்றன. இதற்குப் பின்பான காலத்தில் இந்தியாவில் வெளியில் இருந்து புதிய ஆரியர்கள் உள் நுழைந்த பின்பு அது சமணத்திற்குப் பெரிய கேள்விக்குறியாக இருந்தது. சமணர்கள், அந்தணர்களாக, பார்ப்பனர்களாக, அறவோர்களாக சமுதாயத்தில் பெற்றிருந்த செல்வாக்கு, வெளியில்

இருந்து வந்த ஆரியர்களை ஆச்சரியப்பட வைத்தது. அந்த வழியில் அவர்களும் சமூகத் தகுதியை உயர்த்திக் கொள்ளப் பெரும்பாடு பட்டனர். அதற்காக வெளியில் இருந்து வந்த ஆரியர்கள் கொல்லாமை, புலால் உண்ணாமை, கள்ளுண்ணாமை போன்ற ஒழுக்கம் சார்ந்த அற நிலைகளுக்கு மாற வேண்டியதாயிற்று. ஆனால் ஒழுக்க நெறிகளில் வெற்றி பெற முடியாத ஒரு நிலையில், சமணத்தை அழிப்பதுதான் வைதீகத்தின் முதல் வேலையாக இருந்தது. அதன்படி சமண சமயம் பரவிய பகுதிகளில் இருக்கின்ற மன்னர்களை அடுத்து, அவர்களை இரந்து, தங்கள் நிலையை உயர்த்திக் கொள்ள வைதிகர்கள் பெரிதும் முனைந்தனர். களப்பிரர் காலத்திலும் செல்வாக்குப் பெற்றிருந்த சமண, பவுத்த சமயங்கள் பல்லவர் காலத்தில் தேவையற்றதாகி விட்டன. கி.மு. ஐந்தாம் நூற்றாண்டிற்குப் பிறகு பல்லவர்கள் வைதிகத்தைத் தழுவிய நிலையில் சமண, பௌத்த, ஆசீவகத்திற்கு எதிரான நிலை தமிழ்நாட்டில் வலுப்பெறத் தொடங்கியது.

வாழ்க்கை நிலையற்றது, ஆசை கூடாது, புலனடக்கம், பற்றற்ற வாழ்க்கை, துறவு நிலையின் உயர்வு முதலான சமண, பௌத்த, ஆசீவகச் சமயக் கொள்கைகள் பேரரசு உருவாக்கத்திற்குப் பயன்படாத நடைமுறையாக இருந்தமையால், அதிகார வர்க்கத்தினரால் திட்டமிட்டே அப்புறப் படுத்தப்பட்டன. மக்களைச் சுரண்டும் தத்துவமான வைதீகத்தை மன்னர்கள் ஆதரிக்கத் தொடங்கினர். இனக்குழுக்களாக இருந்து வேட்டைச் சமுதாயமாக மாறி வந்த தமிழ் மன்னர்களுக்கு அறக் கட்டுப்பாடுகளைப் பின்பற்றுவதில் தயக்கம் இருந்தது. வீரம் என்றால் போர், வேட்டை என்று இருந்த மரபில், வைதிகத்தின் மூலமாக எப்படியும் வாழ்கின்ற ஒரு நிலைக்காக, அவர்கள் சமணம், பௌத்தத்தை விடுத்து வைதிகத்தைப் பின்பற்றத் தொடங்கினர். இதனால் சமண - வைதீக எதிர்ப்பு என்பது சமணம், பௌத்தம், ஆசீவகம் ஆகிய மூன்று சமயங்களுக்குமான எதிர்ப்பாகப் பரவியது.

இதன் தொடர்ச்சியாக சைவ, வைணவ சமயங்கள் குறித்த புதிய பண்பாட்டு அடையாளங்கள் முன்னிலைப்படுத்தப் பட்டன. கல்வி பயிலும் மாணவர்களுக்குக் கலாசாலையில் வேதங்கள், வேதாந்தங்கள், சாத்திரங்கள் கற்பிக்கப் பட்டன. சமஸ்கிருதக் கல்வி பிராமணர்களின் ஏகபோக உரிமையாக இருந்தது. அவற்றில் கற்றுத் தேறிய பிராமணர்கள் அரச குடும்பத்தினருக்குக் கல்வி கற்பித்து வந்தனர். பல்லவர் காலத்தில் வேதப் படிப்புக்காகக் கடிகைகள் என்று அழைக்கப்படும் கல்விச் சாலைகள் பல உருவாக்கப்பட்டு, காலப்போக்கில் பௌத்தக் கல்வி முறைகள் அப்புறப்படுத்தப் பட்டன. வேதக் கல்வியும், கலை தொடர்பான பயிற்சிகளும் கடிகைகளில் முக்கிய இடத்தைப் பெற்றன. பௌத்த சமயக் கல்வியைக் கற்பிக்கும் கடிகைகள், சமண சமயக் கல்வியைக் கற்பிக்கும் பள்ளிகள், வேத பாடங்களைக் கற்பிக்கும் பிற்காலக் கடிகைகள் என்ற முறையில் தமிழகத்தின் கல்வி முறை அமைந்திருந்தது.

பல்லவர் ஆட்சிக் காலத்தில் வடமொழிக் கல்வி பெற்றவர்கள் மேலும் உயர்நிலைக் கல்வி பெறுவதற்குப் புதியதாக உயர்தர வடமொழிக் கல்லூரிகள் நிறுவப்பட்டன. அதில்சாதாரணகுடும்பத்தைச்சேர்ந்தவர்கள்கல்விகற்கவாய்ப்புஅளிக்கப்படவில்லை. சங்க காலத்தில் இருந்த சமண, பௌத்தக் கல்வி முறைக்கு முற்றிலும் மாறுபட்ட

கல்விமுறையே பல்லவர் காலத்தில் இருந்தது. வேதபாடங்கள் மட்டுமல்லாமல் மருத்துவம் முதலானவற்றைக் கற்பிக்கும் இடமாகவும் கடிகைகள் செயல்பட்டன. வேத பாடசாலைகள் ஒருபுறம் வளர்ந்து வரும் நிலையில், மறுபுறம் சமணப் பள்ளிகளை ஒடுக்கும் வேலையையும் பல்லவர்கள் மேற்கொண்டனர். இதனால் அறம் சார்ந்த அறிவுத் தளத்தில் நின்று போதிக்கக்கூடிய சமணம், பௌத்தம் ஆகியவை கொண்டு வந்த கல்வி முறை தமிழகத்தில் முற்றிலுமாக அழித்தொழிக்கப் பட்டு வைதிக வழியிலான கல்வி முறை பல்லவர் காலத்தில் ஓங்கத் தொடங்கியது. அதன் பின்னர் வந்த பிற்காலச் சோழர் காலத்திலும், விஜய நகர மன்னர்கள், நாயக்கர்கள் ஆட்சிக் காலத்திலும் இந்த முறையே தமிழ்நாட்டில் பின்பற்றப்பட்டு வந்தது.

இந்த நிலை ஆங்கிலேயர்கள் ஆட்சிக் காலத்தில்தான் மாற்றம் பெற்றது. அதற்காகப் புதிய கல்வித் திட்டம் அப்போது இங்கிலாந்தின் கல்வியாளரான மெக்காலேவின் முறையில் இந்தியாவில் மாற்றி அமைக்கப்பட்டது. அதே நேரம் அது மிகப் பெரிய எதிர்ப்பையும் சந்தித்தது. இங்கிருக்கும் வைதிகப் பிராமணர்கள் மெக்காலே கல்வி முறையையும், அவர் கொண்டுவந்த பயிற்சி மொழியையும் மிக வன்மையாக எதிர்த்தனர். இதனால் மெக்காலே, இந்து சனாதன வாதிகளுடன் மூன்று கட்டமாகப் பேச்சுவார்த்தை நடத்தினார். முதல் கட்டத்தில் இந்தியர்கள் அனைவருக்கும் (அனைத்துச் சாதியினர், மகளிர்) கல்வி கொடுக்க வேண்டும் என்று மெக்காலே கூறினார். ஆனால் அதைச் சனாதன வாதிகள் முழுமையாக மறுத்தனர். கல்வி என்பது பார்ப்பனர்கள் மற்றும் மேல் சாதி மக்களுக்கு மட்டுமே என்று அவர்கள் தங்கள் வாதத்தை வைத்தனர்.

இரண்டாவது கட்டமாக எத்தகைய கல்வி என்ற பிரச்சினையில் கணிதத்தையும், அறிவியலையும் சேர்க்க வேண்டுமென்று மெக்காலே கூறியதற்கும் சனாதன வாதிகள் எதிர்ப்புத் தெரிவித்தனர். வேத, புராண, இதிகாசங்களைக் கற்பித்தால் போதும் என்பது அவர்களுடைய வாதம். மூன்றாவது கட்டமாகப் பயிற்று மொழி எந்த மொழியில் இருக்க வேண்டும் என்ற விவாதத்தில் மெக்காலே அரேபியம், சமஸ்கிருதத்தை விடுத்து ஆங்கில மொழியைத் தெரிவு செய்தார். ஆனால் வைதிகர்களின் தேர்வு சமஸ்கிருத மொழியும், அது உயர் வகுப்பினர்க்கு மட்டுமே கற்றுத் தர வேண்டும் என்பதாகவும் இருந்தது. இவற்றிற்கெல்லாம் ஒத்துக் கொள்ளாத மெக்காலே, இந்திய நவீனக் கல்விமுறையை இந்தியர்கள் அனைவருக்கும் விரிவாக்கினார். இந்தியர்களின் கல்விக்காக மெக்காலே எவ்வளவு போராடியுள்ளார் என்பது அவரது அறிக்கை வழியாக வரலாற்றிலும் பதிவாகியிருக்கிறது *(English Education Act, 1835 - Macaulay's Minute upon Indian Education - google search).*

மெக்காலேயின் கல்விக் கொள்கையை பிரிட்டிஷ் இந்திய அரசாங்கம் செயல்படுத்துவதற்கு முன்பாகவே, இந்தியாவில் நிலவிய பழமையான வழக்காறுகளும், மனுதர்ம வழி வந்த காட்டுமிராண்டித் தனமான செயல்பாடுகளும் இந்திய மக்களால் மக்கள் மீது சுமத்தப்படுவதை ஆங்கிலேயர் அறிந்து, உணர்ந்து மனுதர்மம் வழி வழக்காறுகளை நிராகரிக்கும் நடைமுறைகளை, 1773 ஆம் ஆண்டு முதல் நிறைவேற்றத் தொடங்கினார்கள்.

அதன்படி சத்திரியர்களுக்கு மட்டுமே இருந்த சொத்துரிமையை (நிலவுரிமை) அனைத்து வர்ணத்தவருக்கும் கிடைக்கும் படி 1795 ஆம் ஆண்டில் வழிவகை செய்தார்கள். பெண் குழந்தை பிறந்தால் கொலை செய்வதைத் தடுக்கும் உத்தரவை 1804 ஆம் ஆண்டில் முன்மொழிந்தனர். 1843 ஆம் ஆண்டில் கொத்தடிமை ஒழிப்பு முறையைக் (Abolition of Slavery, 1843) கொண்டு வந்தனர். சூத்திரர்கள் பிராமணப் பெண்ணைக் கெடுத்தால் கொலைத் தண்டனையும், பிராமணர்கள் சூத்திர பெண்களைக் கெடுத்தால் தண்டனை இல்லை என்ற அநீதியையும் மாற்றினார்கள். குற்றமிழைக்கும் பிராமணர்களுக்கும் தண்டனை தரும் அரசாணையை 1859 ஆம் ஆண்டு கொண்டு வந்தனர் (Civil Procedure Code, 1859, Indian Penal Code, 1860, Criminal Procedure Code, 1898). சூத்திரப் பெண்கள் மணமுடித்த அன்றே ஒரு வாரம் கோயிலில் பணி செய்ய அனுப்பப்பட்டு, அப் பெண்கள் பார்ப்பனர்களால் முறைகேடு செய்யப்பட்டு வந்த வழக்காறை 1819 ஆம் ஆண்டில் பிரிட்டிஷார் முடிவுக்குக் கொண்டு வந்தனர்.

சூத்திரர்களுக்குப் பிறக்கும் முதல் ஆண் குழந்தையைக் கங்கையில் தள்ளிக் கொல்லப்பட்டு வந்த நிலையை 1835 ஆம் ஆண்டு சட்டத்தின் மூலம் பிரிட்டிஷார் தடுத்தனர் (Press and Education Reforms, 1835). கணவன் இழந்தால் மனைவி உடன்கட்டை ஏறும் தடைச் சட்டம், இந்து மனுதர்மத் தடைச் சட்டமாக 1829 ஆம் ஆண்டு (Abolition of Sati, 1829) நிறைவேறியது. விதவை மறுமணச் சட்டம் 1956 ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்டது (Widow Remarriage Act, 1856). குழந்தை மணத் தடுப்புச் சட்டத்தால், 12 வயதுக்குக் கீழுள்ள பெண் குழந்தைகள் காப்பாற்றப்பட்டனர் (Child Marriage and Abuse - Age of Consent Act, 1891). இந்து சமய விழாக்களில் தீ மிதிப்பதைத் தடை செய்யும் சட்டம், பிரிட்டிஷார் ஆண்ட ஒவ்வொரு மாகாணத்திலும் ஒவ்வொரு காலகட்டத்தில் கொண்டு வரப்பட்டது. சில இடங்களில் அது நீக்கவும் பட்டது. இந்தக் காலகட்டத்தில்தான், சூத்திரர்கள், பெண்கள் உட்பட அனைவருக்குமான கல்வி என்ற திட்டத்தை 1835 ஆம் ஆண்டில் மெக்காலே கொண்டு வந்தார். அது பிரிட்டிஷ் அரசாங்கத்தால் ஏற்கப்பட்டாலும், மெக்காலேவைக் குறை சொல்லியும், வேதக் கல்வி முறையை உயர்த்திப் பேசியும் பார்ப்பனர்கள் மனுதர்ம ஆட்சிக்காகப் போராடியே வந்தனர்.

இப்படிப்பட்ட வேதக் கல்வி முறையைத்தான் மகாத்மா காந்தி அவர்கள் லண்டன் வட்டமேசை மாநாட்டில் பேசும்போது இந்தியாவின் பழைய கல்வி முறை ஒரு அழகான மரம்போல் இருந்தது என்று கூறினார். மேலும் அந்த மரம் இப்போது அழிந்துவிட்டது என்றும், ஆனால் ஆங்கிலேயர்கள் இங்கிலாந்தில் அந்த முறையைப் பின்பற்றுகிறார்கள் என்றும் கூறினார். அதை ஏற்காத ஆங்கிலேயர்கள், காந்தியடிகளிடம் “உங்கள் பேச்சை நிரூபியுங்கள் அல்லது மன்னிப்புக் கேளுங்கள்” என்றனர். அதற்குச் சற்று அவகாசம் கேட்டார் காந்தியடிகள். ஆனால் இறுதிவரை அவரால் அதை நிரூபிக்க முடியவில்லை.

காந்தியடிகளின் சீடரான தரம்பால் என்பவர் பின்னாட்களில் இதற்காகப் பெரும் சிரமம் எடுத்து இது பற்றி ஒரு நூல் எழுதினார். "அழகிய மரம் - பதினெட்டாம்

நூற்றாண்டில் இந்தியக் கல்வி" என்ற தலைப்பிலான அந்த நூலில் அவர் பிரிட்டிஷ் இந்தியாவில் மெக்காலே வருகைக்கு முன்பாக இந்தியக் கல்விமுறை சீராக இருந்தது என்று குறிப்பிட்டுள்ளார். 19 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்திய நாடு கல்வியில் உயர்ந்த நிலையில் இருந்ததாகவும் கூறியுள்ள அவர், மேலும் இந்தக் கல்வி முறை எந்தவிதச் சாதி, மத வேறுபாடு இன்றிச் செயல்பட்டு வந்ததாகவும் எழுதியுள்ளார். பல ஆண்டுகளாக இருந்து வந்த பாரம்பரிய முறைகள் பற்றி ஆங்கிலேயர் எழுதிய விமர்சனங்களையும் தொகுத்து ஐரோப்பியர்களுக்குத் தெரியாத மருத்துவ முறைகள் குறித்தும் அவர் சுட்டிக்காட்டி இருந்தார். அவரது நூலில் அவர் கூறிய அத்தனை செய்திகளுக்கும் ஆங்கிலேயர்கள் இந்தியாவிற்கு வந்த பிறகு அவர்கள் எடுத்த புள்ளி விவரங்களையே அவர் மேற்கோள் காட்டியிருந்தார். அவர் குறிப்பிட்ட பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிரிட்டிஷ் கல்வி முறை தான் இங்கு இருந்தது. அதற்கு முன்பான காலகட்டத்தைப் பற்றி தரம்பால் அந்த நூலில் குறிப்பிடவில்லை. அது அவருக்கும் தெரியும்; காந்திக்கும் தெரியும்; அவர்கள் குறிப்பிடும் காலத்தில் இருந்தது வேதக் கல்வி முறைதான் என்று. அது சாதி அடிப்படையில் ஆனது; சனாதனத்தின் வழிவந்தது; வைதீகக் கடவுள்களால் காப்பாற்றப்பட்டு வந்தது. ஆனால் எந்தக் கடவுளாலும் தன் பக்தர்களின் மண்டையைத் திறந்து கல்வியை உள்ளே திணிக்க முடியவில்லை. அந்த வருணாசிரம முறைக் கல்வியைத்தான் தரம்பாலும் அழகிய மரமாகக் கண்டார். காந்தியடிகளின் சீடராயிற்றே!

காந்தியடிகள் குறிப்பிட்ட 'அழகான மரம்' என்பது இந்தியாவின் பூர்விகக் கல்விமுறை. அழிந்து போக வேண்டிய, வருணாசிரமம் சார்ந்த கல்வியை 'அழகான மரம்' என்று குறிப்பிட்டதற்காக அண்ணல் அம்பேத்கரும் காந்தியடிகளை விமர்சனம் செய்தார். பண்டிதர் அயோத்திதாசர் அம்மரத்தை இருண்ட இந்தியாவாகக் கண்டார். அதற்குக் கடவுள், வேதம், மதம், சாதி என்னும் நான்கு கிளைகள் இருப்பதையும் கூறினார். இன்னமும் புரையோடிப் போயிருக்கும் அந்த அழகான (!) மரத்தைத் தான் பிரிட்டிஷார் அழித்து விட்டதாகக் காந்தி சொன்னதைத் தான் பிரிட்டிஷார் உண்மையென நிரூபிக்கச் சொன்னார்கள். ஆனால் அதை நிரூபிக்கக் காந்தியடிகளாலும் முடியவில்லை. அவருடைய சீடராலும் (தரம்பால்) முடியவில்லை. பிரிட்டிஷ் ஆட்சியின் கல்விச் சாதனைகளையே இந்தியாவின் பழைய கல்வி முறைக்குச் சான்றாகக் காட்டும் திறமை மகா ஆத்மாக்களுக்கே அமையும்!

இறுதியாக ஒன்று. சரசுவதி பூசை கொண்டாட வேண்டாம் என்று சொல்லவில்லை. அந்தப் பூசையிலும், கொலுவிலும் மெக்காலே உருவத்தையும் வைத்து வணங்குங்கள். அதுதான் கல்விக்கு அளிக்கும் உண்மையான நன்றிக் கடனாக இருக்கும்.

நான்காம் தமிழ் சங்கம் தொடங்கிய இராமநாதபுர மன்னர் பாஸ்கர சேதுபதி

இராமனுதபுரம் பாஸ்கர ஸேதுபதி மஹாராஜா

சுவாமி விவேகானந்தரால் கலியுகத்து ராஜ ரிஷி என்று பட்டம் பிறந்த தினம் இன்று !!

தமிழ்,ஆங்கிலம் மொழிகளோடு இசை மற்றும் விளையாட்டு என தன் திறமைகளை வளர்த்துக்கொண்ட மன்னர் நம் நாட்டின் கலாச்சாரத்தின் மீது ஆழ்ந்த பற்றும் நம்பிக்கையும் கொண்டிருந்தார்.

தனது இருபத்தொன்றாவது வயதில் சமஸ்தானப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பாஸ்கரசேதுபதிக்கு இந்திய அரசு `மகாராஜா' என்று பட்டம் கொடுத்து கௌரவப்படுத்தியது.

திருவாவடுதுறை மடத்துக்கு(இரண்டாயிரம் ஏக்கர்) நிலங்களை தானமாக வழங்கினார். சிகாகோ மாநாட்டில் பங்கேற்க மன்னர் பாஸ்கர சேதுபதிக்கே அழைப்பு வந்திருந்தது.

மதுரை வந்திருந்தபோது விவேகானந்தரின் உரையைக் கேட்ட மன்னர், விவேகானந்தரை சிகாகோ மாநாட்டுக்கு அனுப்ப முடிவு செய்தார். மன்னர் பாஸ்கர சேதுபதியின் இந்த முடிவு விவேகானந்தருக்கு மட்டுமின்றி, இந்தியாவுக்கே பெருமை சேர்த்துக் கொடுத்தது.

பாஸ்கர சேதுபதி மன்னர் மதுரையில் நான்காம் தமிழ்ச்சங்கம் தொடங்கக் காரணமாக இருந்தார். *1901* ல் தொடங்கப்பட்ட இச்சங்கத்தில் உ.வே. சாமிநாத ஐயர், இரா.இராகவ ஐயங்கார், பரிதிமாற்கலைஞர், பின்னாத்தூர் நாராயணசாமி போன்றோர் இச்சங்கத்தில் அங்கம் வகித்தனர். இச்சங்கம் மூலம் சிறந்த புலவர்களுக்கும், இலக்கியங்களுக்கும் பரிசுகள் வழங்கினார்.

நன்றி: *Paraakrama Paandian*

யார் தமிழர் ...?' கா.சு. பிள்ளை வகுத்த வரையறை... !

பல்வேறு வகையாகப் பிரிந்து நிற்கும் தமிழர் யாவரையும் ஒற்றுமைப்படுத்தற்குரிய சிறந்த கருவி தமிழ்மொழிப் பற்று ஒன்றேயாகும்" என்றவர் கா.சு.பிள்ளை. அவரது பிறந்த தினம் இன்று.

பொதிகை மலை; பொருநை நதி; பொன்னான நெல் விளையும் புண்ணிய பூமி போன்றவற்றை ஒருங்கே கொண்ட திருநெல்வேலியில் காந்திமதிநாதப் பிள்ளை - மீனாட்சியம்மை தம்பதிக்கு மகனாகப் பிறந்தவர் கா.சுப்பிரமணியப் பிள்ளை. இவருடைய, தந்தை சென்னைப் பல்கலைக்கழகத்தில் முதன் முதலாக பி.ஏ. பட்டம் பெற்று, 'பி.ஏ. பிள்ளை' என்று அழைக்கப்பட்டவர். அவருடைய வாரிசாக உருவான கா.சு.பிள்ளை, தன்னுடைய ஆரம்பக் கல்வியை நெல்லையில் உள்ள திண்ணைப் பள்ளிக்கூடத்தில் கற்றார்.

இவர் படித்த காலத்தில், தங்கிய இடத்தில் மணியடித்துச் சிவ பூஜை செய்துவந்ததால், இவருக்குப் பூஜைப் பிள்ளை என்ற பெயரும் உண்டு. 1902-ம் ஆண்டு அரசின் நடுத்தரத் தேர்வில் மாநிலத்திலேயே முதலிடம் பெற்றதால், மற்ற வகுப்புகளுக்கானகட்டணத்தை

அரசே ஏற்றுக் கொண்டது. மதுரை தமிழ்ச்சங்கம் நடத்திய தேர்விலும் சென்னைப் பல்கலைக்கழகத் தேர்விலும் மாநில அளவில் இவர் முதலிடம் பெற்றார். சென்னைப் பல்கலைக்கழகத் தேர்வில் முதலிடம் பெற்றபோதுதான், 'பவல்மூர்கெட்' என்ற ஆங்கிலப் பெரியார் அமைத்த தமிழாராய்ச்சி நிறுவனப் பரிசைப் பெற்றார்.

''சுப்பிரமணியனுக்குப் பாடப்புத்தகமே தேவையில்லை!''

மாநிலக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக இருந்த உ.வே.சா., ''சுப்பிரமணியனுக்குப் பாடப்புத்தகமே தேவையில்லை'' என்று ஏனைய மாணவர்களிடம் தன் மாணவன் கா.சு.பிள்ளையைப் பற்றிப் புகழ்ந்துரைப்பாராம். காரணம், கா.சு.பிள்ளை 1,000 பக்கங்கள் கொண்ட புத்தகத்தைக் கூட சில மணி நேரங்களில் படித்து முடித்து விடுவாராம். எதையும் ஒரு தடவை படித்து விட்டால், அதை நன்றாக ஞாபகம் வைத்துக் கொள்வாராம். அதனால்தான் அவர், Photographic Mind என்று அழைக்கப்பட்டார். தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் எம்.ஏ. பட்டம் பெற்றதுடன், 'கலைப் பேரறிஞர்' என்ற சிறப்புப் பட்டத்தையும் பெற்றார். பின்னர் சட்டக் கல்லூரியில் சேர்ந்து சட்டம் படித்தார். 'எம்.எல்' பட்டம் பெற்ற முதல் தமிழறிஞர் கா.சு.பிள்ளை என்பதால், தன் தந்தையைப்போலவே இவரும், 'எம்.எல். பிள்ளை' என்று பலராலும் அழைக்கப்பட்டார்.

1920-ம் ஆண்டு கொல்கத்தா பல்கலைக்கழகம் நடத்திய அகில இந்திய அளவிலான கட்டுரைப் போட்டியில் கலந்து கொண்டு, 'குற்றவியலின் நெறிமுறைகள்' என்ற கட்டுரையை அளித்தார். அவரது கட்டுரைக்கு ரூ.16,000 பரிசு கிடைத்தது. அத்துடன், 'தாகூர் சட்ட விரிவுரையாளர்' என்ற விருதும் கிடைத்தது. சென்னை சட்டக் கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றினார். பிற்காலத்தில் உயர் நீதிமன்றத்தில் பெரும் பதவி பெற வாய்ப்பு இருந்தும் அதை ஏற்க மறுத்தார் கா.சு.பிள்ளை. அதற்குக் காரணம், அவர் சார்ந்திருந்த நீதிக்கட்சி மீதான பித்து என்று அவர் மீது நன்மதிப்பு வைத்த அறிஞர்கள் பலரும் அங்கலாய்த்தனர். இதனால் கா.சு.பிள்ளை தன்னுடைய வாழ்வில் வளர்ச்சி அடையாமல் போனாலும் தமிழ்மொழி மீது மிகுந்த பற்று கொண்டிருந்தார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசியராகப் பணியாற்றிய கா.சு.பிள்ளை, தமிழ் மீது பற்று கொண்டிருந்த பல மாணவர்களின் ஆர்வத்தைப் புரிந்து கொண்டு அவர்களைத் தமிழ்ச் சான்றோர்களாக்கினார்.

தமிழர் என்பவர் எவர்?

1937-ம் ஆண்டு திருச்சியில் நடைபெற்ற சென்னை மாகாண மூன்றாவது தமிழர் மாநாட்டில் கலந்து கொண்டு கா.சு.பிள்ளை ஆற்றிய உரை, தமிழக அரசியலில் நிலையான மொழிக் கொள்கையை வகுத்திடக் காரணமாக இருந்தது. நெல்லையைச் சேர்ந்த நாயகம் பிள்ளையின் மகள் பிரமு அம்மாளை

திருமணம் செய்து கொண்டார். ‘செந்தமிழ்ச்செல்வி’ என்ற இதழில் பல கட்டுரைகளை எழுதினார். ‘மணிமாலை’ என்னும் மாத இதழை வெளியிட்டார். அதில், தமிழ், சமயம், அறிவியல், மருத்துவம், கலை போன்ற ஒன்பது வகைகளில் இவரே பல கட்டுரைகளை எழுதினார். தமிழ், இலக்கியம், வரலாறு, சமயம் முதலியவற்றை வெளிப்படுத்தும் வண்ணம் கா.சு.பிள்ளையின் எழுத்துக்கள் இருந்தன. தமிழர் என்பவர் எவர் என்பதற்கு, “தமிழைத் தாய்மொழியாக உடையவர்; தமிழ்நாட்டில் பிறந்தும் தமிழைத் தாய்மொழி எனக் கருதாதவர் தமிழர் ஆகார். தமிழ்நாட்டில் பிறவாதிருந்தும் தமிழைத் தாய்மொழி போல் போற்றுபவரைத் தமிழர் என்பது இழுக்காகாது. தமிழ் நாகரிகத்தை உயர்ந்தது எனக் கருதுபவரும் தமிழர்” என வரைமுறை செய்துள்ளார் கா.சு.பிள்ளை.

கா.சு.பிள்ளையின் நூல்கள்!

‘அறிவு விளக்க வாசகம்’, ‘திருஞானசம்பந்தர் தேவார இயற்கைப் பொருளழகு’, ‘இறையனார்அகப்பொருள்’, ‘பழந்தமிழர் நாகரிகம்’, ‘மொழிநூல் கொள்கையும் தமிழ் மொழியமைப்பும்’ போன்ற நூல்கள் இவருடைய ஆராய்ச்சித் திறன் மிக்கவை. ஒவ்வொரு தமிழனும் மகிழத்தக்க வகையில், ‘உலக நன்மையே ஒருவன் வாழ்வு’ என்கிற ஒரு சிறிய நூலை எழுதினார்.

சமுதாய நலன் சார்ந்த ‘தமிழர் சமயம்’!

‘தமிழர் சமயம்’ என்ற நூலில் இடம்பெற்றுள்ள கருத்துகள் புரட்சியும் தெளிவும் பெற்று விளங்குகிறது. அதில், “தமிழர் சமயம் நிலைபெற வேண்டுமாயின் தமிழ்மொழி பேணப்பட வேண்டும்; தமிழ்மொழி நன்கு பேணப்படுவதற்கு அதனைத் தாய்மொழியாக உடைய தமிழர்கள் முன்னேற்றம் அடைய வேண்டும். தமிழர்களின் பொருளாதார நிலை சிறப்படைய வேண்டும். அது சிறப்பதற்குத் தமிழ் அருட்செல்வர்களாய் இருப்பவர்களும், சொல்லாற்றல்

உடையவர்களும் சமுதாயத்தில் உள்ள ஏழை மக்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தினால் வருந்தாதபடி, அவரவர்க்கு உரிய தொழிலும் உணவும் அளித்தற்கேற்ப வாயில்களை வகுக்க வேண்டும்'' என சமுதாய நலன் சார்ந்த கருத்தை எடுத்தியம்பியுள்ளார். சென்னை மாகாண தமிழ்ச் சங்கத் தலைவராக கா.சு.பிள்ளை இருந்தபோதுதான் தனித்தமிழ் வித்வான் தேர்வு நடைமுறைப்படுத்தப்பட்டது.

தாய்மொழிக்கு முக்கியத்துவம்!

காலப்போக்கில் தமிழைப் புதிய கலைக்கண் கொண்டு ஆராயவில்லை என்றால், உலகில் தமிழனுக்கு இடமே இல்லாமல் போய்விடும். இந்தப் புதிய முறையில் ஆராய்ந்தால்தான், நமது பழைய இலக்கண ஆசிரியர்களுடைய பெருமையும், அறிவின் நுட்பமும் புலப்படும்'' என்னும் மொழியியல் சிந்தனையுடன் விளங்கிய கா.சு.பிள்ளை, ''தமிழ், புதிய படைப்புச் சிந்தனைகளுக்கு வடிகாலாய் அமைய வல்ல சொல்லமைப்பும் சொல்லாக்க வளமும் உடையது'' என்பதை தமது ஆய்வின் மூலம் உணர்த்தினார்.

திருநெல்வேலியில் சைவ சித்தாந்த சங்கம் ஒன்றை நிறுவி அதன் தலைவராக இருந்தார். இவருடைய நாற்பெருங்குரவர்களின் வரலாற்று ஆராய்ச்சி நூல்கள் இந்தச் சங்கம் மூலம் வெளிவந்தன. நெல்லையப்பர் கோயிலில் தர்மகர்த்தாவாக இருந்து இறைப் பணிகள் செய்தார். 'சைவ சித்தாந்தத்தின் இயற்கைத் தத்துவம்', 'இந்து சமயங்களின் சுருக்க வரலாறு' போன்ற நூல்களை ஆங்கிலத்தில் எழுதினார்.

கலப்புத் திருமணம்; கைம்பெண் மறுமணம்; ஆண்களைப்போலவே பெண்களுக்கும் சொத்தில் சம உரிமை; தமிழ்நாட்டில் தமிழ்மொழி ஒன்றே கட்டாயப் பயிற்றுமொழி; தமிழிலேயே கடவுள் வழிபாடு; தமிழிலேயே சமயச் சடங்குகள் போன்றவற்றை வலியுறுத்தினார். கோயில்களிலும் மடங்களிலும் முடங்கிக் கிடக்கும் பொருட்களை ஏழைகளின் கல்வி நலனுக்குப் பயன்படுத்த வேண்டும் என்று அறிவுறுத்தினார். 'பல்கலைப் புலவர்', 'பைந்தமிழ்க் காசு' எனப் புகழ்ப்பெற்ற கா.சு.பிள்ளை, தனது வாழ்நாள் முழுவதும் தமிழுக்காகவே தொண்டாற்றினார். தமிழின் கருவூலமாகவும், சைவத்தின் திருவுருவமாகவும் விளங்கிய கா.சு.பிள்ளை 1945-ம் ஆண்டு ஏப்ரல் 30-ம் தேதி மறைந்தார்.

கா.சு.பிள்ளையின் தமிழ்த் தொண்டு தமிழ் மொழி உள்ளவரை என்றும் மறையாது!

காதல், வீரம், தோழமை பேசிய ஒளவையார்



முனைவர் கோவிந்தசாமி ராஜகோபாலன்,
மேனாள் தமிழாசிரியர், டில்லி பல்கலைக்கழகம், டில்லி

ஈராயிரத்து இருநூறு ஆண்டுகளுக்கும் மேலான இலக்கிய-இலக்கண வரலாறு கொண்டது நம் அன்னைத் தமிழ்மொழி. இதன் நெடும்பரப்பில் எண்ணிறந்த கவிஞர்/புலவர் பெருமக்கள் தம் பாட்டுத்திறத்தாலே தமிழ் வையத்தைப் பாலித்திட வைத்துள்-ளனர். ஆயின் அவர்களுள் ஒரு சிலரே மக்கள் மனங்களிலே அரியாசனம் பெற்றுள்-ளனர். கம்பன், வள்ளுவர், இளங்கோ என்ற ஒரு மூன்று தமிழ்க்கவிஞர்களை மட்டுமே ஒரு முப்பெரும் கவிஞர்களாக, முத்திரைக்கவிஞர்களாக வரிசைப்படுத்துகிறார் மகாகவி சுப்பிரமணிய பாரதியார். இக் கவிஞர்களுக்கு நிகர் உலகில் எவரும் யாங்-கணுமே பிறந்ததிலை எனவும் இறும்பூது எய்துகிறார் அவர் *(1976:46)*. இந்த முன்னைக் கவிஞர் மூவருக்கும் ஒத்த நிலையில் வைத்து எண்ணத்தக்க ஒரே ஒரு பெண்பாற் கவிஞர்/புலவர் உளர் எனில், அவர் 'ஒளவையார்' மட்டுமே ஆவர்.

ஒளவையார்: சொற்பொருள் விளக்கம்

ஒளவை என்னும் சொல், 'ஆர்' எனும் மதிப்பு தரு விகுதி கூட்டப்பெற்று 'ஒளவையார்' என ஆகிறது. ஒளவையா? அவ்வையா? அப் பெண்கவிஞர் பெயரை எழுதுவதில் ஒரு குழப்பம். அவர் பெயர், 'அவ்வை' என எழுதப்பட்டதே முதல் வழக்கு/முன்னை வழக்கு.' இதுவே பின்னர் 'ஒளவை' எனத் திரிபு கண்டது என்கிறார் மு.வ. *(1977:27)*. இவர்தம் கருத்திற்கு ஊற்றுக்களமாக இருப்பது, உரையாசிரியர்கள் இளம்பூரணரும் நச்சினார்க்-கினியரும்*1* எழுத்ததிகார நூற்பா ஒன்றுக்கு முன்மொழிந்திருக்கும் பொழிப்புரை ஆகும்.

> அகரத்து இம்பர் யகரப் புள்ளியும்
> ஐயென் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும் (தொ.கா. *56*)

என்ற நூற்பாவிற்கு உரை வரையும்போது இளம்பூரணர் *(2010:29)*, "அகரத்தின் பின்னர் இகரமேயன்றி யகரமாகிய புள்ளியும், ஐ எனப்பட்ட நெட்டெழுத்தாம் வடிவு-பெறத் தோன்றும். எ-டு: ஐவனம், அய்வனம் என வரும். 'மெய்பெறத் தோன்றும்' என்றதனான், அகரத்தின் பின்னர் உகரமேயன்றி, வகரப் புள்ளியும் ஒளகாரம் போல வருமெனக் கொள்க. எ-டு: ஒளவை – அவ்வை எனக் கண்டு கொள்க" என விளக்கம் நல்குகிறார்.

‘அவ்வை’ எனும் சொல் ‘தாய்’, ‘கிழவி’, ‘தவப்பெண்’ எனப் பல பொருள்கள் பயப்பது என விளக்கம் அளிக்கிறது தமிழ் லெக்சிகன் (1982:150). இதே அகராதி, ‘ஔவை’ என்பதற்கும் மேற்சொன்ன பொருள்விளக்கங்களையே ‘mother,’ ‘matron,’ ‘old woman’ என ஆங்கிலத்தில் குறிப்பிடுகிறது (மேலது, ப. 632). ஆக, ‘அவ்வை’ என்பதும், ‘ஔவை’ என்பதும் ஒரே பொருள்கள் குறிக்கும் இருவேறு எழுத்து வழக்குகள் என்பது தெளிவு. ‘அவ்வை’ எனும் சொல் ‘அம்மை’ என்ற சொல்லின் திரிபு என்கிறார் மு.வ. (மு.நூ.) இச் சொல், மூலத் திராவிடமொழிச் சொல்லாகப் புலப்படுகிறது. இது தெலுங்கு & கோண்டி (Gondi) மொழிகளில் ‘அவ்வா’ எனவும், கன்னடம் & கொடகு (Kodagu) மொழிகளில் ‘அவ்வே’ எனவும் வழங்கப்படுகிறது. தெலுங்கு மொழியில் இது பாட்டியை அதாவது அம்மாவின் அம்மாவைக் குறிக்கிறது. காலங்காலமாகத் தமிழ் மக்கள் ஔவையைப் ‘பாட்டி’ என்ற உறவுமுறைப் பெயரோடு குறிப்பிடுவது அறியத்-தகுந்தது. ஆக, தாய், அம்மா, கிழவி என்ற பெயர்ச்சொற்களினும் ‘அம்மை’’ (Reverent lady) எனப் பொருள்படும் ‘பாட்டி’ என்ற சொல்லே ஔவைக்குப் பெரிதும் பொருந்தும் சொல் எனலாம். ஆயின், இதில் நெருடலும் உண்டு. காரணம், எட்டுத்தொகை நூல்களில் இடம்பெற்றிருக்கும் அவர்தம் காமம் சார்ந்த காதல் உணர்வுகள் அவரைப் ‘பாட்டி’யாக அடையாளம் காட்டவில்லை; காதல் உணர்ச்சி மிக்க ஒரு ‘மங்கை’யாகவே அவரை மதிப்பிடத் தோன்றுகிறது. வீரம், போர் மறம், அரசாட்சி போற்றும் அவர்தம் புறக்கவிதைகள் அவரை ஒரு வீர மங்கையாக, அரசியலில் விவேகம் பேசும் ஒரு ‘நங்கை’யாக அடையாளம் காட்டுகின்றன.

தமிழ் இலக்கிய உலகில் ‘ஔவையார்’ எனும் பெயரில் சங்க காலம் முதற்கொண்டு கி.பி. 19ஆம் நூற்றாண்டு வரை எண்ணிறந்த பாட்டுகள் காணப்படு-கின்றன. இப் பெயரில் தமிழில் இலக்கியம் படைத்தோர் 9 பேருக்கும் மேல் இருக்-கலாம் என்கிறார் தாயம்மாள் அறவாணன் (2015:174). சங்க காலம் முதற்கொண்டு ஆங்கிலேயர் ஆட்சிக்காலம் வரை ஔவையார் பெயரில் எண்ணிறந்த பாட்டுகள், மூன்று கால கட்டங்களில் வெளியாகி உள்ளன.

- முதலாவது காலகட்டம்: சங்கக் காலம் – காதல் வீரம் குறித்த பாட்டுகள்.
- இரண்டாவது காலகட்டம்: இடைக்காலம் – பல்வேறு பேசு பொருள்கள் குறித்த தனிப்பாடல்கள்.
- மூன்றாவது காலகட்டம்: நவீன காலம் அதாவது 1800/1900 ஆம் நூற்றாண்டு – ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி என்ற நீதி நூல்கள் .

முதலாவது காலகட்டமாகிய சங்க காலத்தில், ஔவையார் பெயரில் பதிவாகியிருக்கும் கவிதைகளின் பேசுபொருள்களை இக் கட்டுரை வெளிக்கொணர முயல்கிறது. சங்கப் பாக்கள் அளிக்கும் தரவுகள் அடிப்படையில், ஔவையார் கொங்கு மண்டலத்தைச் சார்ந்தவர்; தகடூர் என்ற இன்றைய தருமபுரியை ஒட்டிய ஏதோ ஓர் ஊரில் வாழ்ந்தவர்; தகடூரை ஆண்ட அதியமான் நெடுமான் அஞ்சி என்ற குறுநில மன்னனோடு நெருங்கிய தோழமை கொண்டிருந்தவர்; காதல் உணர்ச்சியும், வீர எழுச்சியும் ஒருங்கே வாய்த்-திருந்த ஒரு பெருங்கவிஞர்; நேர்படப் பேசியவர் என்றவாறான ஒரு பிம்பம் வெளிப்படுகிறது.

சங்க காலத்து ஔவையார்

சங்க காலத்து ஔவையார், தமிழ் கூறு நல்லுலகை ஈர்த்த ஒரு நட்சத்திரப் பெண் கவிஞர். இதில் சந்தேகம் இல்லை. கபிலர், பரணர் என்ற பெரும்புலவர்களை அடுத்துச் சங்க காலத்தில் பெருவாரியான கவிதைகளைப் படைத்த பெண்பாற் கவிஞர் ஔவை-யார் மட்டுமே ஆவர். அவர் பெயரில் காணப்படும் சங்கக் கவிதைகள் மொத்தம் 59.2 அவற்றுள் அகத்திணைக்கு உரியவை 26; புறத்திணைக்கு உரியவை 33.

பிரிவு பற்றிப் பேசிய ஔவையார்

அகத்திணைகள் ஐந்து. அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பன. இவற்றுள் பாலைத்திணையை 'நடுநாயகம்' என்பர். அகத்திணை ஐந்து இல்லை; அவை இரண்டேதாம் என்பர் ஒரு சிலர். அவையாவன: குறிஞ்சியும் அது தவிர்ந்த பிற திணைகளும். குறிஞ்சித்திணை மட்டுமே கூடலும் கூடல் நிமித்தமும் பற்றிப் பேசு-கிறது. பிற எல்லாம் பிரிதலும் பிரிதலும் நிமித்தமும் பற்றிப் பேசுபவை. கூடலைப் பேசும் அகக் கவிதைகளைவிடப் பிரிதலைப் பேசும் அகக்கவிதைகள்தாம் மிகுதி. காம உணர்ச்சி, பிரிவுத்துயரம், தனிமை, ஏக்கம், இயலாமை, கழிவிரக்கம் இப்படி பலதரப்-பட்ட உணர்ச்சிகளுக்கு இடமளிப்பவை பாலைத்திணைக் கவிதைகள். 'உள்ளுறை,' 'இறைச்சி' என்ற தமிழ்க்கவிதை எடுத்துரைப்பு உத்திகள் பிரிவுக்கவிதைகளில்தாம் பெரிதும் இடம்பெறுகின்றன.

அனைத்து உயிரினங்களிடமும் காணப்படும் ஓர் அடிப்படை உள்ளுணர்வு (Basic Instinct) 'காமம்.' காமம் குறித்து ஆண்கள் வெளிப்படையாகப் பேசலாம். ஆனால் பெண்கள் பேசக்கூடாது என்பது எழுதப்படாத சமூக நியதி. இதை மறுதலிக்கும் விதத்தில் காமத்தை, குறிப்பாகக் காதலனின்/கணவனின் பிரிவுத்துயரத்தைப் பல அகத்திணைக் கவிதைகளில் வெளிப்படையாகப் பேசியவர் ஔவையார். அகநானூற்-றிலும் குறுந்தொகையிலும் இடம்பெற்றிருக்கும் அவர்தம் இரு கவிதைகளே இதற்குச் சான்று. தலைமகன் ஒருவன் களவுக்காலத்தில் ஏதோ போர் காரணமாகவோ அல்லது பொருள் தேடல் காரணமாகவோ காதலியைப் பிரிகிறான். அவன் குறிப்பிட்ட காலத்திற்குள் திரும்பி வரவில்லை. காலம் கடக்கிறது. பிரிவு தலைவியைப் பெரிதும் வாட்டுகிறது. தனிமைத் துயரம் தாங்காது தவிக்கிறாள் அவள். அவளின் முலைகளுக்கு இடையே பசலை படர்கிறது. அவளை அவன் கைவிட்டுவிட்டான் என ஊரார் கிசுகிசுக்கின்றனர். இதனால் நெஞ்சம் கலங்குகிறாள் தலைமகள். நாணமும் அவளைக் கைவிடுகிறது. உடலாலும் உள்ளத்தாலும் நொந்து நொடிந்திருக்கும் தலைவி தன் தோழியிடம் கையறு நிலையில் புலம்புகிறாள்.

புலம்புனிறு தீர்ந்த புதுவரல் அற்சிரம்
நலங்கவர் பசலை நலியவும் நந்துயர்
அறியார் கொல்லோ தாமே அறியினும்
நம்மனத் தன்ன மென்மை இன்மையின்
நம்முடை உலகம் உள்ளார் கொல்லோ

யாங்கென உணர்கோ யானே வீங்குபு
தலைவரம் பறியாத் தகைவரல் வாடையொடு
முலையிடைத் தோன்றிய நோய்வளர் இளமுளை
அசைவுடை நெஞ்சத் துயவுத்திரள் நீடி
ஊரோர் எடுத்த அம்பல் அஞ்சினை
ஆராக் காதல் அவிர்தளிர் பரப்பிப்
புலவர் புகழ்ந்த நாணில் பெருமரம்
நிலவரை எல்லாம் நிழற்றி
அலரம்பு ஊழ்ப்பவும் வாரா தோரே *(அ.நா. 273)*

“வாடைக் காற்றானது நாளுக்கு நாள் கூடிக்கொண்டே போவது போலவே, என் முலைகளுக்கிடையே தோன்றிய பசலை நோயும் நாளும் பெருகிப் படர்ந்துகொண்டே இருக்கிறது. ஊரார் தூற்றும் அம்பல் என்னும் முளையானது கிளை பரப்பி இப்போது மரமாக வளர்ந்துள்ளது. காதல் என்னும் ஒளியினையுடைய தளிர்களைப் பரப்பிக் கொண்டதாகப் புலவர்கள் புகழ்ந்துரைத்த நாணமும் இல்லாது போன ஒரு பெருமர-மாகவும் அது ஆகிவிட்டது. நிலத்தின் எல்லை எங்கணுமே கவிழ்ந்து நிழல் பரப்பி, அலராகிய அரும்புகளைத் தோன்றச் செய்தும் விட்டது பசலைநோய். இந்த இக்-கட்டான சூழ்நிலையிலும் அவர் வரவில்லையே! நம் துயர் அவர் அறியாமல் இருக்கி-றாரா? அல்லது அறிந்தும் வாராமல் இருக்கிறாரா? நம் மனத்தின் மென்மை அவரிடம் இல்லையே! நாம் கையற்றுக் கலங்கியிருக்கும் உலகத்தை அவர் கொஞ்சமும் நினை-யாதிருக்கிறாரே! அய்யோ நான் என்னவென்று உணர்ந்து ஆற்றியிருப்பேன்?”

இவ்வாறு வாடைக் காலத்தில் பெண்களிடமும் காம உணர்வு தலைதூக்கி இருக்கும் என்பதை வெளிப்படையாகப் பதிவுசெய்திருக்கிறார் ஔவையார். தலை-மகனைத் தழுவப் பெறாததனால் தலைவியின் காமநோய் நாளுக்கு நாள் வளர்கிறது. முலைகளுக்கு இடையே பசலை நோய் படர்கிறது. இது ஒருபுறம் கிடக்க, தலைமகன் அவளை விட்டுப் பிரிந்துவிட்டான் என ஊரார் கிசுகிசுக்கின்றனர். இது முன்னே முளையாக இருந்தது, இப்போது கிளைகள் பல பரப்பி நிழல் தரும் ஒரு பெருமரமாக வளர்ந்திருக்கிறது என்ற உருவகப்படுத்துகிறார் ஔவையார்.

பெண்ணியவாதி ஔவையார்

பொருள் தேடல் காரணமாகத் தலைமகன் தன் மனைவியை விட்டுப் பிரிந்து சென்-றிருக்கிறான். காலம் கடக்கிறது. தனிமைத்துயரில் தவிக்கிறாள் தலைமகள். அவளின் காம நோய் தீவிரம் அடைகிறது. இது தெரியாது தென்றல் வேறு அவளைப் பாடாய்ப் படுத்துகிறது. தாங்காது தவிக்கிறாள் அவள். இது அறியாது, ஊர் மக்கள் இயல்பாக உறங்கிக் கொண்டிருக்கின்றனர். காதல் நோயில் தனியே தவிக்கும் தலைமகளுக்கு ஊர் மேல் எரிச்சல். தாளமுடியாத காமத்தீயில் தகிக்கும் அவளின் நிலையை மிகத்துல்லியமாகச் சித்திரிக்கிறார் ஔவையார்.

முட்டு வேன்கொல் தாக்கு வேன்கொல்
ஓரேன் யானுமோர் பெற்றி மேலிட்டு

ஆஅ ஒல்லெனக் கூவு வேன்கொல்
அலமர லசைவளி அலைப்பவென்
உயவுநோய் அறியாது துஞ்சும் ஊர்க்கே *(கு.தொ. 28)*

சங்க காலத்தில் இத்தகைய கூக்குரலை வேறு எந்தப் பெண்பாற் புலவரும் எழுப்பவில்லை என்பது குறிப்பிடத்தகுந்தது. காமத்தைப் பக்தி மொழியில் பேசிய ஆண்டாளும்கூட இவருக்குப் பின்னேதான். இரவு நேரத்தில் தலைமகன் பிரிவால் தனியே இருக்கும் திருமணமான பெண் தன் மனத்தில் ஊற்றெடுக்கும் காமத்தைத் தாங்க இயலாமல் "சுவற்றில் முட்டுவேனோ, அதைக் கையால் தாக்குவேனோ, அல்லது உரத்த குரலெடுத்து ஆ! ஓ! எனக் கூவுவேனோ! என் செய்வேனோ தெரியவில்-லையே!" எனத் தன் காதல்மனத்தின் தகிப்பை வெளிப்படுத்தியிருப்பது ஒரு தனிப்-பட்ட பெண்ணின் மொழியாகத் தெரியவில்லை. பாதிக்கப்பட்ட ஒட்டுமொத்த பெண் இனம் எதிர்கொள்ளும் தனிமையின் கூக்குரலாகவே புலப்படுகிறது. இந்த வகையில் 'ஔவையார்தான் முதல் தமிழ்ப்பெண்ணியவாதி' எனலாம்.

அதியமான் நெடுமான் அஞ்சி – ஔவையார் தோழமை

கடை ஏழு வள்ளல்களுள் ஒருவன் அதியமான் நெடுமான் அஞ்சி. இவன் தகடூர் என்னும் நிலப்பகுதியை ஆண்டவன். சங்க காலத்தில் தகடூர் கொங்கு மண்டலத்தில் இடம்பெற்றிருந்தது. தற்போதைய தருமபுரி என்னும் நகரமே அக் காலத்தில் தகடூர் என வழங்கப்பெற்றது.

குறுநில மன்னன் அதியமான் நெடுமான் அஞ்சிக்கும் பெண்பாற் கவிஞர் ஔவையாருக்கும் இடையே மிக நெருங்கிய தோழமை உறவு இருந்தது. மன்னர்களுக்கும் புலவர்களுக்கும் இடையே காலந்தோறும் நட்புறவு இருந்து வருகிறது. பாரி–கபிலர்; கோப்பெருஞ்சோழன்–பிசிராந்தையார் நட்பு சங்க காலத்தில் மிகவும் பேசப்பட்ட ஒன்று. இவர்களின் நட்பைவிடத் தனித்துவமானது நெடுமான் அஞ்சி–ஔவையார்தம் தோழமை. ஓர் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையேயான அவர்கள்தம் நட்பு மிகவும் உணர்வுவயப்பட்டது; தோழன்–தோழி அல்லது தந்தை–மகள் என்ற உறவுமுறைகளில் அமைந்தது. ஔவையாரின் கவிதைச்சொற்களைக் கட்டுடைத்து மறுவாசிப்பு செய்யும்போது இந்த உறவுநிலைகள் புலப்படுகின்றன.

அதியமானுக்காகவே வாழ்ந்த ஒரு புலவர் ஔவையார் மட்டுமே. அதிய-மானுக்கும் தொண்டைமானுக்கும் இடையே நிகழவிருந்த போரைத் தூதுவராகச் சென்று போர் நிகழாது பல உயிர்களைக் காத்தவர் ஔவையார் (பு.நா. 95).

வீரம் குறித்த சொல்லாடல்

சங்க காலத்தை 'வீரயுகக் காலம்' (கி.மு. 3000–கி.பி. 300) என்பர். நிலம் பொருட்டு மன்னர்களிடையே ஓயாமல் போர் நிகழ்ந்தகாலம் சங்ககாலம். "புறத்தில் நிலத்தைத் துய்ப்பதும், அகத்தில் பெண்ணுடலைத் துய்ப்பதும் ஆணுக்கானதாக முதன்மைப்-படுத்தப்பட்ட சங்க மரபில், புறத்திணைப் பாடல்கள் தனித்துவமானவை.

இனக்குழு வாழ்க்கை சிதிலமடைந்து, வேந்தர்கள் உருவான காலகட்டத்தில் தமிழக நிலப்பரப்பு, போர்களின் மூலம் விரிவடைந்துகொண்டிருந்தது. குறுநில மன்னர்களின் ஆளுகைக்-குட்பட்ட நிலமும் குடியும் சிதைக்கப்பட்ட நிலையில் வீரம் போற்றப்பட்டது. ஆணுக்கான புழங்குவெளி, புறத்தில் என்ற நிலையில், வீரத்தை முன்னிறுத்திய பேச்சினை உருவாக்கச் சங்கப் புறப்பாடல்கள் பெரிதும் பயன்பட்டுள்ளன'' (முருகேச பாண்டியன் 2016: 79–80). அரிசில் கிழார், உறையூர் ஏணிச்சேரி, முடமோசியார், கபிலர், கழாத்தலையார், கோவூர்கிழார், பரணர், பெருஞ்சித்திரனார், மாங்குடி மருதனார் என எண்ணற்ற ஆண்பாற் கவிஞர்கள் அக் காலத்து மன்னர்களின் வீரம், போர்மறம் குறித்து, உண்மையில் புளகாங்கிம் கொண்டு ஏகத்துக்கும் புகழ்ந்து கவிதை யாத்துள்ளனர். ஆண் இனம் வல்லாற்றல் கொண்டது; வலிமை பாராட்டுவது. இந்த வகையில், ஆண்பாற் கவிஞர்கள் போர்மறம் குறித்துப் பாட்டுகள் கட்டியதில் வியப்பொன்றும் இல்லை. இனம் இனத்தோடுதானே சேரும். ஆயின், மெல்லியல்பு கொண்ட பெண்களும்கூட நீரையும் நிலத்தையும், மக்களையும் வீட்டுவிலங்கு-களையும் அழித்தொழிக்கும் போர் என்னும் பொல்லாவினையைப் போற்றிப் புகழ்ந்-திருப்பது புரிந்துகொள்ள முடியாததாக இருக்கிறது.

அள்ளூர் நன்முல்லையார், ஒக்கூர் மாசாத்தியார், காக்கை பாடினியார், காவற்-பெண்டு, குறமகள் இளவெயினியார், தாயங்கண்ணியார், நக்கண்ணையார், நெட்டி-மையார், பாரி மகளிர், பூதப்பாண்டியன் பெருங்கோப்பெண்டு, பெருங்கோழி நாய்கன் மகள் நக்கண்ணையார், பேய்மகள் இளவெயினியார், பொன்முடியார், மாறோக்கத்து நப்பசலையார், மாற்பித்தியார், வெண்ணி குயத்தியார், வெறிபாடிய காமக் கண்ணி-யார் உள்ளிட்ட ஒரு பெரிய பெண்கள்பட்டாளமே வீரத்தையும் போர்மறத்தையும் போற்றிப் பாட்டுகள் இயற்றியிருக்கின்றது. உலகில் வேறெந்த மொழியிலேனும் போர் குறித்து இந்த அளவிற்குப் பெண்பாற் கவிஞர்கள் சொல்லாடல் நிகழ்த்தி இருக்கின்-றனரா என்பது தெரியவில்லை. இது ஆய்தற்குரியது.

புறம் பாடிய பெண்பாற்கவிஞர் கூட்டத்தில், ஔவையார் ஒரு தனித்த பெருங்-கவிஞர்; ஒரு பேராளுமை. ஆண்கவிஞர்களுக்கு நிகரான போர்மறம் பேசியவர். அவர் பெயரில் வெளியான புறக்கவிதைகள் ஒரு பெண்ணின் எழுத்தாக இருக்கலாம். ஆனால் 'அவற்றில் ஒலித்திருப்பது என்னமோ ஆண்குரலே' எனலாம். குறிப்பாக, அதியமான் நெடுமான் அஞ்சியின் போர்த்திறம் குறித்துப் பேசும்போது, அவர் எழுத்து-களில் வீரம் பீடுநடை போடுகிறது.

அக் காலத்தில் மன்னர்களிடையே மண்ணுக்காகப் பெரும்பூசல் இருந்தது. போர் நிகழ்த்துவதே அவர்களின் வாழ்வாக இருந்தது. நெடுமான் அஞ்சிக்கும் பகை மன்னர் பல பேர் இருந்தனர். அவர்களிடம் அச்சத்தை ஏற்படுத்திப் போரைத் தடுப்பது ஔவை-யாரின் நோக்கமாக இருந்தது. ஒப்பாரும் மிக்காரும் இல்லாத ஒரு பெரும்வீரனாக அதியமானைக் கண்ட ஔவையார், அவனின் வீரத்தை விவேகமுடன் பகைமன்னர் முன்னே பறைசாற்றுகிறார்.

களம்புகல் ஓம்புமின் தெவ்விர் போரெதிர்ந்து
எம்முளுள் உளனொரு பொருநன் வைகல்

எண்தேர் செய்யும் தச்சன்
திங்கள் வலித்த காலன் னோனே (பு.நா. 87)

"பகைவர்களே! போர்க்களம் சேர்வதைப் போற்றுங்கள். எதிர்த்துப் போரிடும் ஆற்றல் உள்ளவன் ஒருவன் எம்முள்ளும் ஒருவன் இருக்கின்றான். அவன் எத்தகையவன் எனில், ஒரு நாள் பொழுதில் எட்டுத்தேர்கள் உருவாக்கும் தச்சன், ஒரு மாதம் கூடி உரு-வாக்கிய தேர்க்காலைப் போன்ற அழகும் வலிமையும் கொண்ட தோள்களையுடை-யவன் அவன்!" என அதியமானின் பெருமிதம் பேசுகிறார் ஔவையார். வேறொரு புறநானூற்றுக் கவிதையிலேயும் (பு.நா. 90) அஞ்சியின் வீரம் பற்றிக் கிளக்கும் போது அவர் சொல்கிறார்: "மான் கூட்டத்தை ஒற்றையாக இருந்து தாக்கி அழிக்கும் மறப்புலி போன்றவன் அவன். காரிருளைக் கிழித்து மேல் எழுந்து வரும் சூரியன் போன்றவன் அவன். ஆற்றல் மிக்க காளை போன்றவன் அவன். வீராதி வீரர்களுக்குத் தலைவன் அவன். அவன் போர்க்களம் புகுந்தால் அவனை எதிர்க்கவல்லவர் எவருமில்லை." இச் சொற்கள் அதியமானின் வீரத்தை மெச்சிப் புகழ்வது ஒரு நிலை. எதிரி மன்னர்களை அச்சமூட்டி அதியமானுக்குப் பணிய வைப்பது மற்றொரு நிலை. இது ஔவையார் கவிதைகளில் காணப்படும் ஓர் எடுத்துரைப்பு உத்தி.

மாவீரம் செறிந்த கோமான் அதியமான் நெடுமான் அஞ்சி, அவனுக்கு ஒரு நாள் நீண்ட ஆயுளைத் தரும் அரும் நெல்லிக்கனி ஒன்று கிடைக்கிறது. அதைத் தான் உண்ணாமல், தான் பெரிதும் நேசிக்கும் ஔவையாருக்கு ஈத்துவக்கிறான். அவனின் தன்னலமற்ற ஈகைப்பண்பைப் பாராட்டும் ஔவையார், அவனைப் "பால்புரை பிறைநுதற் றொருவன் போல / மன்னுக பெரும நீயே" (பு.நா. 91) என வாழ்த்துகிறார். இந்த அடிகளிலிருந்து சில செய்திகள் நமக்குப் புலனாகின்றன. சாதல் நீங்க அதிய-மான் தனக்கு நெல்லிக்கனியை அளித்ததால், அதே நிலையில் அவனும் சிவபெருமான் போல என்றைக்கும் நிலைத்து வாழ வேண்டும் என வாழ்த்துகிறார் ஔவையார். பிறைநுதல் ஒருவன் எனக் குறிப்பிடப்பட்டதன்வழிச் சிவபெருமான் குறித்த புராணச் செய்திகள் சங்க காலத்திலேயே தமிழ்ச்சமூகத்தில் பரவியிருந்தன என்பதும் தெரிய வருகிறது. ஔவையார் ஒரு சிவ வழிபாட்டாளாராக இருந்திருப்பார் என்ற குறிப்பும் புலப்படுகிறது.

போர்வீரனின் வீரமரணம்

காதலையும் வீரத்தையும் மனிதனின் இரு கண்களாகச் சித்திரிக்கின்றன சங்க இலக்-கியங்கள். நாட்டின் மண்ணைக் காக்க ஆண்பிள்ளைகளைப் பெற்றெடுப்பதே தலையாய கடன் எனத் தாய்மார்கள்

வீரம் பேசினர். இதனாலே போலும் பெண்-பிள்ளைகள் பற்றிய சித்திரிப்பு சங்க இலக்கியங்களில் காணப்படவில்லை. போர்க்-களத்தில் பகைவர்களோடு போராடி மடிகிறான் ஒரு வீரன். அவன் புறமுதுகிட்டு மாண்டு போனான் என யாரோ பொய்ச்சேதி பரப்புகின்றனர். போர்க்களத்திற்கு பதை-பதைப்போடு உடனே விரைகிறாள் அவன் தாய். வீழ்ந்திருக்கும் வீரனின் உடலைப் புரட்டிப் பார்க்கிறாள். அவன் தன் மார்பிலே விழுப்புண் ஏற்றே வீரமரணம் அடைந்-திருக்கிறான் என்ற உண்மை தெளிவாகிறது அவளுக்கு. அதற்காக உண்மையிலே அகம் மகிழ்கிறாள். வற்றிய அவள் முலைகளிலே அவளையும் அறியாமல் பாலூறிச் சுரக்கிறது (பு.நா. 295).

"போர்க்களத்தில் 'வீர மரணம்' என்ற வீரப்புனைவு மூலம் பெண் பெருமைப்-பட்டுக் கொள்ளலாம் என்பது புறம் சித்திரிக்க விழையும் குடும்ப உறவில் முக்கியமான செய்தி. மேலாதிக்கம் அல்லது நிலம் காரணமாக நடைபெறும் குருதி சிந்தும் அரசியலில் ஆணுடல்கள் தேவைப்படுகின்றன. பெற்ற குழந்தையின்மீது பாசம் வைத்திருக்கும் பெண்ணின் இயல்பைச் சிதைத்துவிட்டுப் புதிய வகைப்பட்ட பேச்சுகளைப் புறப்பாடல்கள் உருவாக்கிட விழைந்துள்ளன. இறந்த மகனுக்காக அழுது புலம்புவதைவிட, அவனின் வீரத்தினுக்காக மகிழ்வது மேலானது என்ற கருத்தியல் பெண் கவிஞர்களின் கவிதைகளிலும் வெளிப்பட்டுள்ளது" என மறுவாசிப்பு செய்திருக்கும் ந. முருகேச பாண்டியனின் கருத்துரை (மு.நூ., ப. 52) குறிப்பிடத்தக்கது.

வாழ்வின் இலக்கணம்

"தேடிச் சோறுநிதந் தின்று, பல சின்னஞ் சிறுகதைகள் பேசி, மனம் வாடித் துன்பமிகு உழன்று, பிறர் வாடப் பலசெயல்கள் செய்து, நரை கூடிக் கிழப்பருவம் எய்தி, கொடுங் கூற்றுக் கிரையெனப் பின்மாயும் வேடிக்கை மனித"ராய் (பாரதியார் 1976:131) பெரும்-பாலான மக்கள் மாண்டு மடிகின்றனர். ஆயின் ஒரு சிலரே அலையடிக்கும் கடலாக, அரவணைக்கும் தென்றலாக என்றும் இந்த நிலவுலகில் நற்பெயரோடு நிலை-பெறுகின்றனர். பொன்னையும் பொருளையும் சேர்த்து வைத்து, மண்ணையும் பெண்-ணையும் ஆண்டு அனுபவித்து மாண்டு மடிவது வாழ்க்கையாகாது. 'பிறக்கின்ற போதே இறக்கின்ற தேதி இருக்கின்றது என்பது நிஜம்.' அதனால் உயிரோடு இருக்கின்ற போதே, யாரும் தம்மிடம் இருக்கின்ற பொருளைத் தேவைப்படுவோர்க்குத் தானம் கொடுத்துப் பயன்மரமாய் வாழ வேண்டும். இதுவே வாழ்க்கையின் இலக்கணம். இது ஔவை கூறியது.

ஓயாமல் போர் செய்யும் வீரயுகக் காலத்தில், போர்க்களம் தவிர மன்னர்கள் எங்கும் வேறோரிடத்தில் சந்திப்பது வழக்கமில்லை. ஆயின் விதிவிலக்காக ஒரு முறை சேரமான் மாரிவெண்கோ, பாண்டியன் கானப்பேர் தந்த உக்கிரப் பெருவழுதி, சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி என்ற மூவேந்தரும் ஓரிடத்தில் வேதியர் வளர்க்கும் வேள்வி காண ஒருங்கே கூடுகின்றனர். அவர்களை ஓரிடத்தில் ஒருங்கே கண்ட ஔவையார் பெரிதும் அகம் மகிழ்கிறார். நிறைந்த மனத்துடன் அவர்கள் என்றும் அப்படியே ஒரு தாய் வயிற்றுப்பிள்ளைகளாய் இருக்கவேண்டும் என விரும்புகிறார். அந்தச் சூழ்நிலையில் அவர் 'பாடிய பாட்டு' (இசைத்த கவிதை) மிகவும் மனங்கொளத்-தக்கதாய், வாழ்வின்

இலக்கணத்தை வரையறை செய்வதாய், பார்ப்பார்க்கு அளிக்க வேண்டிய தானம் பற்றிப் பேசுவதாய் இருக்கிறது.

நாகத் தன்ன பாகார் மண்டிலம்
தமவே ஆயினும் தம்மொடு செல்ல
வேற்றோர் ஆயினும் நோற்றோர்க்கு ஒழியும்
ஏற்ற பார்ப்பார்க்கு ஈர்ங்கை நிறையப்
பூவும் பொன்னும் புனல்படச் சொரிந்து
பாசிழை மகளிர் பொலங்கலத் தேந்திய
நாரரி தேறல் மாந்தி மகிழ்சிறந்து
இரவலர்க்கு அருங்கலம் அருகாது வீசி
வாழ்தல் வேண்டுமிவண் வரைந்த வைகல்
வாழச் செய்த நல்வினை அல்லது
ஆழுங் காலைப் புணைபிறி தில்லை
ஒன்றுபுரிந் தடங்கிய இருபிறப் பாளர்
முத்தீப் புரையக் காண்தக இருந்த
கொற்ற வெண்குடைக் கொடித்தேர் வேந்திர்
யானறி அளவையோ இதுவே வானத்து
வயங்கித் தோன்றும் மீனினும் இம்மெனப்
பரந்தியங்கு மாமழை உறையினும்
உயர்ந்துமேந் தோன்றிப் பொலிகநும் நாளே *(பு.நா. 367)*

“வேந்தர்களே! எப்பேர்பட்ட வலிமை மிக்க மன்னனாயினும் வையக வாழ்வு முடிந்து வானுலகம் செல்லும் நாளில், அவன் நிலத்தை உடன் கொண்டு போக முடியாது. அது துறக்கம் போலவே அவனுக்கு இனிமையை நல்கியிருந்தாலும் பின்னர் ஒரு நாளில் அவனினும் வலிமை மிக்க பிறருக்கு, அவர்கள் அயலவர்களாகவே இருந்தாலும் சொந்தமாகும். அதனால், உயிரோடு இருக்கும் காலத்தில் ஈரக்கையுடன் இரந்து நிற்கும் பார்ப்பார்க்கு, பூவையுடன் பொன்னையும் நீருடன் வார்த்துத் தருக. பெண்கள் பொற்கலத்திலே ஏந்தித் தரும் கள்ளை உண்டு மகிழ்ந்து, வரும் இரவலர்க்கு அருங்-கலம் குறையாது வழங்கி வாழ்க! ஆராய்ந்து பார்க்கில், இவ் உலகில் உயிரோடு இருக்கும் காலம் வரையும் புகழுடம்புடன் இங்கு நிலைத்து வாழச் செய்யும் நல்வினை-கள் அல்லாமல் நாம் இந்த மண்ணை விட்டுப் போகும் நாளில் நமக்குப் புணையாவது வேறு எதுவும் இல்லை. தன் மனத்தை அடக்கி வென்ற இருபிறப்பாளர் வளர்க்கும் முத்தீயைக் கண்டவராக இங்கிருக்கும் கொற்ற வெண்குடைக் கொடித்தேர் வேந்தரே! யான் அறிந்தவரைவாழ்வின்இலக்கணம்இதுவேயாகும். வானத்து மீனினும், மேகங்களிலிருந்து வீழும் மாமழையின் துளிகளினும் நெடுநாள் நும் வாழ்நாள் பொலிகவே!”

இந்தக் கவிதைவழிப் பல செய்திகள் நமக்குத் தெரியவருகின்றன.

1. *சங்க காலத்திலேயே வேதம் நன்கு அறிந்த பார்ப்பார் இருந்தனர்.*

2. இருபிறப்பாளர் எனக் குறிப்பிடப்பட்ட பார்ப்பாரால் வேள்வித்தீ (யாகம்) நடத்தப்பட்டது.
3. தமிழ் மன்னர்கள் தீவளர்க்கும் யாகச்சடங்கில் பங்கேற்றனர்.
4. பார்ப்பார் ஏழ்மையில் இருந்துள்ளனர். எனினும் உள்ளங்கையில் நீரைச் சொரிந்து அவர்களுக்கு பூவையும் பொன்னையும் தாரை வார்த்துக் கொடுக்கப் பட்டுள்ளது.
5. சொர்க்கம் பற்றிய நம்பிக்கை இருந்துள்ளது.

ஆடவர் முதன்மை

தற்காலத்தில் மட்டுமில்லாமல் சங்க காலத்திலும் சமூகம் ஆணின் மேலாதிக்கத்தின் கீழே செயல்பட்டிருக்கிறது. ஆண்தலைமையை ஏற்றுக் கொண்டாடி இருக்கிறது. இது ஔவையாரின் கவிதை ஒன்றில் வெளிப்பட்டிருக்கிறது.

நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே (பு.நா. 187)

"ஆடவர் நல்லவராக விளங்கும் இடத்தில் நிலமும் நன்முறையில் விளங்கும் என்ற ஔவையாரின் கருத்து ஆண் பற்றிய மதிப்பீட்டை உருவாக்குகிறது. வன்முறையும் ஆதிக்கமும் மிக்க அரசியலை முன்னெடுத்துச் செல்லும் ஆண்களில் உலகம் பற்றிய ஔவையாரின் மதிப்பீடு இன்றைய காலகட்டத்துக்கும் பொருத்தமாக உள்ளது" (முருகேசபாண்டியன், மு.நூ., ப. 56). இங்கு 'ஆடவர்' என்ற சொல் எண்ணத்தக்கது. வெறுமனே ஆண்களைக் குறிக்கும் சொல்லில்லை. மாட்சிமை பொருந்திய ஆட்சி-யாளர்களாகிய மன்னர்களைக் குறிக்கும் சொல் ஆகும்.

கையறுநிலைப்பா

எதிரி மன்னன் ஒருவன், வீரத்தால் அன்றி நயவஞ்சகத்தால் அதியமான் அஞ்சியைக் கொல்கிறான். இது அறிந்து ஔவையார் கொண்ட பெருந்துயரம் சொல்லில் சொல்லமுடியாதது. நெஞ்சம் துடித்து அப்போது அவர் பாடிய இரங்கற்பா/கையறு-நிலைப்பா வரலாற்றுச் சிறப்பு வாய்ந்து. இதற்கு ஈடு-இணையாக வேறொன்றைச் சொல்லுதற்கில்லை.

சிறியகள் பெறினே எமக்கீயும் மன்னே
பெரியகள் பெறினே
யாம்பாடத் தான்மகிழ்ந் துண்ணு மன்னே
சிறுசோற் றானும் நனிபல கலத்தன் மன்னே
பெருஞ்சோற் றானும் நனிபல கலத்தன் மன்னே
என்பொடு தடிபடு வழியெல்லாம் எமக்கீயும் மன்னே
அம்பொடு வேல்நுழை வழியெல்லாம் தானிற்கும் மன்னே
நரந்தம் நாறும் தன்கையால்
புலவுநாறும் என்தலை தைவரு மன்னே

அருந்தலை இரும்பாணர் அகன்மண்டைத் துளையுரீஇ
இரப்போர் கையுளும் போகிப்
புரப்போர் புன்கண் பாவை சோர
அஞ்சொல் நுண்தேர்ச்சிப் புலவர் நாவில்
சென்றுவீழ்ந் தன்று அவன்
அருநிறத்து இயங்கிய வேலே
ஆசாகு எந்தை யாண்டுளன் கொல்லோ
இனிப் பாடுநரும் இல்லை பாடுநர்க்கொன்று ஈகுநரும் இல்லை
பனித்துறைப் பகன்றை நறைக்கொள் மாமலர்
சூடாது வைகியாங்குப் பிறர்க்கு ஒன்று
ஈயாது வீயும் உயிர்தவப் பலவே'' (பு.நா. 235)

''கள் குறைவாக இருந்தால் முதலில் எங்களுக்குத் தந்து விடுவான். அது நிறைய இருந்தால் நாங்களும் அவனும் ஒன்றாகக் குடித்து மகிழ்வோம். அப்போது நாங்கள் பாடுவதைக் குடித்துக்கொண்டே கேட்டு மகிழ்வான். பெரிய அளவுக்குச் சோறு இருந்தால் மிகப் பலரோடு அமர்ந்து விருந்து அயர்வான். எலும்போடு கூடிய ஊன் இறைச்சி உணவை எங்களுக்குத் தந்துவிட்டு, அவன் அம்பும் வேலும் விளையாடும் போர்க்களத்தில் நின்று, வீரம் விளைத்திருப்பான். நரந்த மலர் மணம் வீசும் தன்-னுடைய திருக்கையால் புலால் நாற்றம் வீசும் எங்கள் தலையைத் தடவிக் கொடுப்பான் எந்தை. பாடி வரும் பாணர்கூட்டம் பதைபதைக்க அவர் உண்கலம் உடைந்து சிதற, கையேந்தி வருவோர் கைகளையும் துளைத்துக்கொண்டு, பாணரை நம்பியிருக்கும், பசியால் வாடும் சுற்றத்தார் கண்ணொளி மழுங்கிச் சோர்ந்துவிழ, அழகிய சொற்களை ஆய்ந்து பாடவல்ல புலவர் நாவிலும் சென்று தைத்தது, அதியமான் நெடுமான் அஞ்சி-யின் மார்பில் தைத்த வேல். எங்கள் உயிர்த்துணையாகிய எம் தலைவன் எங்கிருக்-கிறானோ? இனி உலகில் பாடிப் பரிசில் பெற வருவாரும் இல்லை. வருவோர்க்குத் தருவாரும் இல்லை. குளிர்ந்த நீர்நிலையில் பூத்த, தேன் நிறைந்த அழகிய பெரிய பகன்றைப் பூ எவராலும் சூடப்படாது வீணே வாடி வதங்கி அழிவதைப் போல, பிறர்க்கு உதவாது, ஒன்றும் தாராது மடியும் உயிர்களும் உலகில் நிறையவே இருக்-கின்றனவே!''

ஒருவர்க்கு உதவாது, ஒன்றும் தாராது வாழ்கிற பலர் உலகில் இருக்கையில், எல்லோர்க்கும் எப்போதும் உதவி வாழும் வள்ளல் அதியமான் நெடுமான் அஞ்சி இறந்துவிட்டானே என்று ஔவையார் வருந்திப் பாடிய இக் கையறுநிலைப்பாவில் இடம்பெற்றிருக்கும் பல தொடர்கள் கற்போர் கவனத்தை ஈர்க்கின்றன. முரண் தொடர்களாக இடம்பெற்றிருக்கும் சிறியகள்–பெரியகள், சிறுசோறு–பெருஞ்சோறு, இரப்போர்–புரப்போர், நரந்தம்–புலால் நாற்றம் என்ற தொடர்கள் அதியமானின் சிறப்பினை விளக்கிடும் மொழியாக வெளிப்பட்டுள்ளன. இம் மொழியமைப்பு பெண்பாற் புலவரான ஔவையாரிடம் மட்டுமே காணப்படுகிறது என்கிறார் முருகேச-பாண்டியன் *(2016:91)*. மேலும் 'இந்தக் கவிதையில் ஏழு தொடர்கள் 'மன்னே' என முடிவதும் குறிப்பிடத்தகுந்தது. அவை அசைச்சொற்களாயினும் கற்போர் உள்ளங்-களைக்

கலங்க வைப்பனவாக உள்ளன. இந்த எடுத்துரைப்பு உத்தி வேறு எந்தப் புலவர் கவிதையிலும் காண முடியாதது.

நரந்தம் நாறும் தன்கையால்
புலவு நாறும் என்தலை தைவரும் மன்னே

என ஔவையார் அதியமானைப் பற்றிக் குறிப்பிட்டுள்ள அடிகள் உடல்மொழி சார்ந்தவை. பொதுவாக ஆண்புலவர்கள் இனக்குழுத் தலைவர் அல்லது குறுநில மன்னருடன் ஆன உறவு, நட்பு பற்றி விவரிப்பது வழக்கம். மன்னன் புலவரின் தலையைத் தடவிக்கொடுத்தான் என்ற விவரிப்பு பெண்பாற் புலவரால் மட்டுமே விவரிக்கக்கூடியதாகும். இவ்வகையில் ஔவையின் இக் கவிதை தனித்துவமானது' (முருகேசபாண்டியன் 2016:92). இதில் இடம்பெற்றிருக்கும் 'எந்தை' என்ற சொல் 'எம் தந்தை' (Our Father) என்ற நேரடிப்பொருளையும், 'தானைத் தலைவன்' (Lord) என்ற குறிப்புப்பொருளையும் நல்குவதாக இருக்கிறது. ஆக, எவ்வகையிலேனும் அதியமா-னோடு ஔவையார் கொண்டிருந்த உறவு உணர்ச்சிவயப்பட்டது என்பது வெளிப்-படை.

முடிபுகளாகச் சில கருத்துகளை இங்கே நாம் நினைவு கூரலாம். சங்க காலத்து ஔவையார் வழமையான ஒரு பெண்கவிஞர் இல்லை; தமிழ்க் கவிதையுலகம் கண்ட முதல் பெண்ணியவாதி. ஆண்கவிஞர்கள் பேசாப் பொருளைத் துணிவுடன் பேசியவர்; போர்காரணமாகவோ அல்லது பொருள்தேடல் காரணமாகவோ தலைவன் மேற்கொண்ட பிரிவால் நொந்து தவித்த காதலியர்தம் நோக்காட்டை, ஊற்றெடுத்த பாலுணர்வு ஏக்கத்தைத் தயக்கமின்றிப் பலரறியப் பொதுவெளியில் கதைத்தவர்; அதியமான் அஞ்சி என்னும் தகடூர் மன்னனுடன் நெருக்கமான தோழமை கொண்டிருந்தவர்; தலைவன்-குடிமகள் அல்லது தந்தை-மகள் உறவுமுறை போற்றியவர்; கள்ளும் கறிச்சோறும் உண்டு களித்தவர்; பகை மன்னனால் அதிகமான் வஞ்சித்துக் கொல்லப்பட்டபோது தாளமுடியாத துக்கத்தில் தவித்தவர்; ஆகச் சிறந்த ஒரு கையறுநிலைக் கவிதையைப் பாடியவர். ஆக, ஔவையார் என்னும் ஒரு பெயரில் சங்க காலத்தில் பல குரல்கள் ஒலித்திருக்கின்றன.

சான்றெண் விளக்கங்கள்

1. *"அகரத்தின் பின் இகரமே யன்றி யகரமாகிய புள்ளி வந்தாலும், ஐயெனப்பட்ட நெட்டெழுத்தின் வடிவு பெறத் தோன்றும். எ-டு: ஐவனம் அய்வனம் என வரும். மெய் பெற என்றதனான் அகரத்தின் பின்னர் உகரமே யன்றி வகரப்புள்ளியும் ஔகாரம் போல வருமென்று கொள்க. ஔவை அவ்வை என வரும்" என விளக்கம் நல்குகிறார் நச்சினார்க்கினியர்.*
2. *(நச்சினார்க்கினியர் உரை, தொல்காப்பியம் - எழுத்ததிகாரம், பாகம் 1, மதுரை தமிழ் இலக்கிய மின்தொகுப்புத் திட்டம், ப. 82)*
3. *அகத்திணைக் கவிதைகளுள் தலைவி கூற்றாக வெளிப்பட்ட கவிதைகளே மிகுதி. அவை மொத்தம் 16. தோழி கூற்று 4; பரத்தை கூற்று 2, தலைவன் கூற்று 2, செவிலி கூற்று 1, கண்டோர் கூற்று 1.*

4. இவற்றுள் பாலை பற்றிய கவிதைகள் 9; குறிஞ்சி பற்றிய கவிதைகள் 4; முல்லை பற்றிய கவிதைகள் 5. மருதம் பற்றிய கவிதைகள் 4. நெய்தல் பற்றிய கவிதைகள்.
5. அகநானூறு (4 கவிதைகள்): 11, 147, 273, 303; குறுந்தொகை (15 கவிதைகள்): 15, 23, 28, 29, 39, 43, 80, 91, 99, 102, 158, 183, 200, 364, 388; நற்றிணை (7 கவிதைகள்): 129, 187, 295, 371, 381, 390, 394.
6. புறநானூறு (33 கவிதைகள்): 87-104, 140, 187, 206, 231, 232, 235, 269, 286, 290, 295, 311, 315, 367, 390, 392.
7. பாடாண் திணைக் கவிதைகள் (12): 91, 92, 95-97, 101-103, 140, 367, 390, 392; வாகைத்திணைக் கவிதைகள் (7): 93, 94, 98-100, 104, 315; தும்பைத்திணைக் கவிதைகள் (6): 87-90, 295, 311; வெட்சித்திணைக் கவிதைகள் (2): 269; கரந்தைத்திணைக் கவிதைகள் (2): 286, 290; பொதுவியல் கவிதைகள் (4): 187, 231, 232, 235.

பார்வை நூல்கள்

1. அறவாணன், முனைவர் தாயம்மாள். 2015. அவ்வையார் படைப்புக் களஞ்சியம். சென்னை: தமிழ்க் கோட்டம்.
2. பாரதியார், சுப்பிரமணிய(ன்). 1976. பாரதியார் கவிதைகள். சென்னை: பூம்புகார் பிரசுரம்.
3. முருகேசபாண்டியன், ந. 2016. மறுவாசிப்பில் செவ்வியல் இலக்கியப் படைப்புகள். சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.
4. வரதராசன், மு. 1977. மொழிநூல். சென்னை: திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.
5. இளம்பூரணர் (உ.ஆ.). 2010. தொல்காப்பியம் (எழுத்து-சொல்-பொருள்): மூலமும் உரையும். சென்னை: சாரதா பதிப்பகம்.
6. நச்சினார்க்கினியர் (உ.ஆ.). 1944. தொல்காப்பியம்: எழுத்ததிகாரம். சென்னை: திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.
7. ---------------------- 1982. Tamil Lexicon, Vol. I, Part I. Chennai: University of Madras.
8. பிள்ளை, வையாபுரி (தொ.ஆ.). 1967 (2ஆம் பதி.) சங்க இலக்கியம். சென்னை: பாரி நிலையம்.

9. கோவிந்தசாமி இராசகோபால், மேனாள் தமிழ்ப்பேராசிரியர், இந்திய மொழிகள் மற்றும் இலக்கியவியல் துறை, தில்லிப் பல்கலைக்கழகம், தில்லி–110 007

எழுத்துடன் கூடிய செம்பியன்கண்டியூர் கற்கோடாரி

டாக்டர் அண்ணாமலை சுகுமாரன்
சித்தரியல் ஆய்வாளர், புதுவை

கீழடியில் கிடைத்தவற்றில் கரிம ஆய்வுசெய்ததில் பெற்ற 2600 ஆண்டுகள் பழமை வாய்ந்த கரி மம் கிடைத்த அதே அடுக்கில் கிடைத்த பானை ஓட்டில் கிடைத்த எழுத்துப் பொறிப்பு மூலம் தமிழி 2600 ஆண்டுகள் பழமை என்ற முடிவுக்கு வர இயன்றது. ஆனால் அதற்கு பல ஆண்டுகளுக்கு முன்பே கிடைத்த ஒரு சான்று மூலம் எழுதத்தெரிந்த ஒரு இனம் தமிழ் நாட்டில் வாழ்ந்த மூத்த வரலாற்றை நிறுவும் பண்டைய சான்றுகளை சற்றே மறந்து விட்டோம்

.அதுவும் கிடைத்த அந்த எழுத்துக்கள் பானை ஓட்டில் இல்லை .பண்டயை கற் க்கோடாரியில் ஆகும் .சிந்து வெளி எழுத்தை ஒத்த எழுத்துடன் கூடிய ஒரு கற் கோடாரி ஒன்று தமிழ் நாட்டில் கி-டைத்துள்ளது

2006ஆம்ஆண்டினதுவக்கத்தில், பள்ளி ஆசிரியரான வி. சண்முகநாதன் என்பவரால் சிந்து எழுத்துக்களை ஒத்த எழுத்துகள் பொறிக்கப்பட்ட புதியகற்கால கோடாரி (கருவி) ஒன்று அவரது தோட்டத்து வாழையை தோண்டும்போது கண்டுபிடிக்கப்பட்டது. அந்த ஊர் செம்பியன் கண்டியூர் ஆகும் செம்பியன் கண்டியூர் (Sembiyankandiyur) என்பது தமிழ்நாட்டின், நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை வட்டத்தில் காவிரி ஆற்றின் வடகரையில் குத்தாலத்திலிருந்து இரண்டு கி. மீ. தொலைவில் அமைந்துள்ள ஒரு கிராமமாகும்

இந்தக் கோடாரியானது கைகளால் செய்யப்பட்ட, வழவழப்பான கல் கோடாரியாகும், இதில் நான்கு சிந்து சமவெளி குறியீடுகள் இருந்தன. இதில் உள்ள எழுத்துகளின் காலமானது கி.மு 1500 க்கு முற்பட்டது என்றுகருதப்பட்டது இந்த நூற்றாண்டின் மிகமுக்கியமான அகழ்வாராய்ச்சி கண்டுபிடிப்பு இது" என்று உலகப்புகழ்பெற்ற தொல்பொருள் அகழ்வாராய்ச்சி நிபுணர் திரு. ஐராவதம் மகாதேவன் இந்த இரண்டு கற்களைப்பற்றியும் அப்போது கருத்து தெரிவித்துள்ளார்.

சிந்து சமவெளிநாகரிக எழுத்துக்கள் தமிழ்நாட்டையும் எட்டியிருந்தன என்பதுதான் நமக்குக்கிடைக்கும் புதிய செய்தி. "நான் மிக கவனமாக இந்த இரண்டு கற்களையும் ஆராய்ந்தேன். கி.மு. 1500க்கும் கி.மு.2000க்கும் இடைப்பட்ட காலத்தைச்சார்ந்ததாக இந்த கற்கள் இருக்கவேண்டும்" என்றார் திரு ஐராவதம் மகாதேவன்.

ஒருவேளை வட இந்தியாவில் இருந்து இந்த கற்கள் வந்திருக்கலாம் என்ற சிலரின் கூற்றை திரு ஐராவதம் மகாதேவன் உறுதியாக மறுத்தார். இந்த கற்கள் முழுக்கமுழுக்க தென்னிந்திய பாறைவகையைச்சேர்ந்தது என்றும் திரு ஐராவதம் மகாதேவன் கூறுகிறார்.

கற்களினாலான இரண்டு ஆயுதங்களில் ஒன்றில் மட்டும் எழுத்துக்குறியீடுகள் காணப்படுகின்றன. நான்கு குறியீடுகளில் முதலாவது குறியீட்டில் விலாஎலும்புகளுடன்கூடிய உடலமைப்பு காணப்படுகிறது. இரண்டாவது குறியீட்டில் ஒரு ஜாடி காணப்படுகிறது. இதைப்போன்ற நூற்றுக்கணக்கான அடையாளங்கள் ஹாரப்பாவில் காணப்படுகின்றன. திரு ஐராவதம் மகாதேவன் முதல் குறியீட்டை ‘முருகு' எனவும் இரண்டாவது குறியீட்டை ‘அன்' என்றும் இரண்டு குறியீடுகளும் சேர்ந்து ‘முருகன்' என்ற சொல்லை உணர்த்துவதாக கூறுகிறார்.

பழந்தமிழ் செய்யுள்களில் முருகக்கடவுள் வேட்டையாடுபவராகவும், போர்க்கள கடவுளாகவும் சித்தரிக்கப்படுகிறார். மூன்றாவது குறியீடு சூலமாகவும் நான்காவது குறியீடு பிறையாகவும் காணப்படுகிறது.

அப்போதைய தமிழக தொல்லியல் துறையின் சிறப்பு ஆணையர் டி. எஸ். ஸ்ரீதரின் கூற்றுப்படியம் , இதில் நான்கு குறியீடுகள் அடையாளம் காணப்பட்டன. என்பதை உறுதி செய்திருக்கிறார் இந்தக் கண்டுபிடிப்பிற்கு

முன்னர், சிந்து வெளி சித்திர எழுத்துகளானது தென்னிந்திய தீபகற்பத்தில், மகாராட்டிரத்தின் கோதாவரி சமவெளியில் பிரவர ஆற்றுப் பகுதியில் கிடைத்துள்ளன.

இந்த கண்டுபிடிப்பு தொல்லியல் துறை வட்டாரங்களில் அப்போது ஒரு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. அதன் பிறகு, இந்திய தொல்லியல் ஆய்வு மையம் அதே செம்பியன்கண்டியியூரில் அகழ்வு செய்ய முடிவுசெய்தது.

கற்கோடாரி கிடைத்த இடத்தில் நான்கு குழிகள் அகழப்பட்டன. அதில், வழவழப்பான களிமண்ணால் செய்யப்பட்ட சிறிய பானைகளும், வட்டில்களும், தட்டுகளும், கிண்ணங்களும், கறுப்பு, சிவப்பு நிற மட்கலன்களும், கறுப்பு நிற மட்கலன்களும், சிவப்பு மட்கலன்களும் இவற்றில் அடங்கும். மேலும், பெண்கள் விளையாடும் வட்ட வடிவ சில்லுகளும், சில எலும்புச் சிதைவுகளும் இங்கு கிடைத்தன. முழுமையாக கிடைத்த பானைகளில் மீன், டமாரு, சூரியன், நட்சத்திரம், ஸ்வஸ்திக் போன்றவை வரையப்பட்டிருந்தன. இந்த கீறல்கள் கறுப்பு, சிவப்பு நிற மட்கலன்கள், கறுப்பு நிற மட்கலன்கள ‘போன்றவற்றில் வரையப்பட்டிருந்தன சில குறியீடுகள் மீண்டும் மீண்டும் இடம்பெற்றிருந்தன.ஆனால் எதிர்பார்த்தபடி வேறு கற் கோடாரிகள் எதுவும் கிடைக்கவில்லை .

ஆனால் கிடைத்த கற் கோடரியில் இருந்த எழுத்துக்கள் சிந்து வெளி எழுத்துக்கள் ஒத்தவை என்பதும் ஏனோ அதிக முக்கியத்துவம் இதுவரை பெறவில்லை .

ஆனால் எழுதத்தெரிந்த ஒருசமூகம் காவிரிக்கரையில் வாழ்ந்திருந்தது என்பது உண்மை ஆனால் அதை பெரிதுபடுத்தவில்லை .ஏன் என்பதும் புரியவில்லை .இவாறு வேறு எங்காவது இப்படி நடக்குமா ?

மேலும் படிக்க விரும்புவோருக்கு
http://www.tn.gov.in/misc/Archaeological_discovery.htm
http://kalyan96.googlepages.com/Sembiyankandiyurceltool.pdf

செம்பியன் கண்டியூர் அகழாய்வு அறிக்கை 2007- 2008 என்பதும் வெளியிடப்பட்டுவிட்டது .அதன் பதிப்புரையில் /முன்னுரையில் இந்த கற் க்கோடாரி கிடைத்த செய்தி அதில் இருந்த எழுத்துக்கள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது .அதன் pdf கிடைக்கிறது .

அருந்தமிழ் வளர்த்த அருளாளர்கள் XI

மகளிர் மாண்புகாத்த மாதரசி ஏமி கார்மைக்கல் அம்மையார்

பேரா. முனைவர் மோ. மைக்கேல் பாரடே,
மேனாள் தமிழ்த்துறைத் தலைவர், சென்னைக் கிறித்தவக் கல்லூரி, தாம்பரம்

உலகின் முதன்மொழியாகவும் மூத்த மொழியாகவும் கருதப்படும் நம் அன்னைத்தமிழை, அகில உலக அரங்கில் உன்னதமான பண்பாடுடைய மொழியாக உயர்த்திக் காட்ட, அயல்நாடுகளிலிருந்து பாரதம் போந்த கிறித்தவ அருளாளர்கள் ஆற்றிய அரும்பணிகளை விவரிக்கும் இத்தொடரில், தமிழ்மொழியை மட்டுமன்று, தமிழ்மக்களின் வாழ்க்கை நிலைகளை மேம்படுத்த அவர்கள் ஆற்றிய பணிகளும் விவரிக்கப்படுகின்றன. அந்தவகையில், இக்கட்டுரையில் நாம் காணப்போகும் அருளாளர், ஆங்கில நாட்டிலிருந்து இங்கு வந்து அதிசயிக்கத்தக்க புரட்சிகரப் பணிகளை நிறைவேற்றி, தம் பணிகளால் அமரத்துவமான அரும் புகழைத் தேடிக்கொண்ட ஓர் அம்மையார் ஆவார்.

‘ஏமி கார்மைக்கல்’ என அழைக்கப்படும் அவ்வம்மையாரை, மகளிர் மாண்பு காத்த மாதரசி என்று நாம் போற்றுதற்கான காரணத்தை அவர் வரலாற்றைப் படித்தால் உணர்ந்து கொள்ளலாம். ‘மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்’ என்ற மகாகவியின் வாக்கினைச் செயல்படுத்திக் காட்டிய மறத்தமிழச்சி என்று அவரைப் போற்றிப் புகழலாம். அயல்நாட்டில் பிறந்தவராயினும், தமிழகம் வந்து, வாழ்வின் இறுதி வரை தமிழராகவே வாழ்ந்து, தமிழருக்காகவே வாழ்ந்து, தமிழ் மண்ணிலேயே அடக்கமாகிவிட்ட அந்த அன்னையைத் தமிழ்ப் பெண்மணியாகவே ஏற்பதில் என்ன தவறிருக்க முடியும்? (இப்படித்தான் சீகன்பால்கு அடிகளாரைச் செருமானியத் தமிழர் என்றும் ஜி.யு.போப் அடிகளாரை அவர் விரும்பியபடியே தமிழ் மாணவர் என்றும், தந்தை ஈராஸ் அடிகளாரைஅவர்விருப்பப்படியேஐரோப்பாவிலிருந்து வந்த திராவிடர் என்றும் அழைப்பது பொருத்தமே) திருநெல்வேலிச் சீமையின் ஓர் மூலையில் அமைந்த ‘டோனாவூர்’ என்னும் கிராமத்தை, ‘டோனாவூர்

ஐக்கியம்' என்ற அமைப்பை நிறுவி, கைவிடப்பட்ட - வெறுத்தொதுக்கப்பட்ட - வஞ்சிக்கப்பட்ட - இழிவுபடுத்தப்பட்ட எண்ணற்ற பெண்களின் (ஏன் சில ஆண் சிறுவர்களின்) வாழ்விலும் கண்ணியத்தையும் நம்பிக்கையையும் சேர்த்து ஒளியூட்டி, அதன்வழி உலகப் பெருமைபெறச் செய்த உத்தமியின் வாழ்க்கைச் சாதனைகளைச் சுருக்கமாக இக் கட்டுரை வழி அறிந்து கொள்ள முற்படுவோம்.

I. அம்மையார் பிறப்பும் வளர்ப்பும்

ஏமி கார்மைக்கல் அம்மையாரின் மூதாதையர் ஸ்காட்லாந்து நாட்டைச் சேர்ந்தவர்கள். ஆனால் அவரது பெற்றோர்கள் வாழ்க்கைச் சூழல் காரணமாக, அருகிலுள்ள அயர்லாந்து நாட்டுக்குப் பெயர்ந்துவிட்டனர். அவரது தந்தை பெயர் டேவிட் கார்மைக்கல். தாயார் காதரின் ஜேன் என்பார். இருவருமே வீரமிக்க குடியைச் சேர்ந்தவர்களின் வழிமரபினர். தந்தை வழியில் மாவரைக்கும் தொழிற்சாலை நடத்தி வந்தவர்கள். வாழ்ந்த ஊருக்கே 'மில் ஐல்' (மாவரைக்கும் தொழிற்சாலை) என்றுதான் பெயர். தந்தைவழியில் சமய சுதந்தரத்துக்காகப் போராடிய 'ஒப்பந்தக்காரர்கள்' (Covananters) பிரிவினர். 'எஞ்சி நிற்கும் துண்டம் (வாளின் உடைந்த பகுதி) உண்டே' என்பது அவர்கள் குடும்பச் சின்னம். குடும்பத்தின் முகப்பு மொழி எப்போதும் ஆயத்தம்' என்பது. தாய்வழி மூதாதையர் 'டால்ஸியஸ்' எனப்படும் முடியரசுக் கோட்பாட்டினர் (Royalists) அவர்கள் குடும்ப முகப்பு மொழி 'நான் துணிவேன்' (I dare) என்பது. இத்தகு வீர மரபுக் குடும்பங்களிடையே திருமணக் கலப்பு ஏற்பட்டது. டேவிட் - காதரின் தம்பதியருக்கு ஏழுபிள்ளைகள். ஏமிதான் மூத்தவர். உடன்பிறந்தவர்கள் 2 தங்கைகள், 4 தம்பிகள், ஏமி கார்மைக்கல் 1867, டிசம்பர் 16இல் பிறந்தார். குடும்பத்தால் பக்தி மரபில் வளர்க்கப்பட்டார். இளமையிலேயே தன் உடன் பிறந்தாருடன் சாகசச் செயல்கள் புரிவதில் நாட்டம் உடையவராகக் காணப்பட்டார். முதலில் யார்க்ஷயர் என்ற இடத்தில் வீட்டிலேயே ஒரு மனை ஆசிரியரால் கல்வி கற்பிக்கப்பட்டனர். பின் அவரது பெற்றோர் அவரை ஹாரோகேட் என்ற சிறந்த பள்ளியில் சேர்த்தனர். அங்கு விடுதியில் தங்கி 3 ஆண்டுகள் படித்தார். அங்கு அவருக்கு நல்ல ஆன்மிக அனுபவம் ஏற்பட்டது. பிறகு, குடும்பத்தினர் 'பெல் ஃபாஸ்ட்' (Belfast) என்ற வேற்றூருக்குப் பயணமாகினர்.

ஏமி, சிறுவயதிலேயே ஒரு குருவானவர் வழி, இந்தியாவைப் பற்றிய கதைகளைக கேட்டு வளர்ந்ததாகக் கூறப்படுகிறது. இளமையிலேயே, ஏழைப் பெண்கள் மீதும், சிறுமியர் மீதும் கரிசனை கொண்டிருந்தார். இங்கிலாந்தில் அக்காலத்தில் 3 வகுப்பார் வாழ்ந்து வந்ததாகச் சொல்வார்கள். சற்றே செல்வ வளமுள்ள முதலிரு

வகுப்பாருக்குப்பின், வளம் குன்றிய மூன்றாவது வகுப்புப் பெண்கள் ‘துண்டுக்காரிகள்’ (Shawlies) என அழைக்கப்படுவோர். தொழிற்கூடங்களிலும் நிலக்கரிச் சுரங்கங்களிலும் பணியாற்றும் குடிசை வாழ் மக்கள் அவர்களுக்குத் தொப்பி (Cap) அணியும் வசதியின்றி, தலையில் துண்டுகளைக் கட்டி இருந்ததால், அவர்களைக் கேலியாக அப்படி அழைப்பார்களாம். அத்தகு எளிய மக்களிடை துணிந்து சென்று, அவர்களுக்குத் தன் இளமையிலேயே பல உதவிகள் செய்வார். சிறுவர்களுக்கு இரவு நேரப் பள்ளிகள் நடத்துவார். இப்பணியில் ஏமியின் தாயும் அவரோடு இணைந்து, அவருக்கு உதவினார். சிலகாலம் கழித்து, ஏமி தொழிற்கூடப் பெண்களுக்கு மறைக் கல்வியும் நற்போதனைகளும் அளிக்க, ஒரு ஜெபக் கூடம் கட்ட முனைந்தார். பிறர் உதவியுடன் ‘அன்பின் அழைப்பு’ (The welcome) என்ற பெயரில், ஒரு தொழுகைக் கூடம் கட்டி, பலருக்கு நற்போதனைகள் அளித்தார். அவ்வாறே அவர் சில காலம், இளம் பெண்கள் கிறிஸ்தவ சங்கத்திலும் (YWCA) சேர்ந்து, வாழ்வில் வழி தவறிய பெண்களை மீட்டெடுத்து, நல்வழிப்படுத்தினார்.

II. வாழ்க்கையின் திருப்புமுனை - திருப்பணி அழைப்பு

இத்தகைய காலகட்டத்தில்தான் அவருக்கு மூத்த ஊழியராகிய டாக்டர் இராபர்ட் வில்சன் அவர்களுடைய தொடர்பு கிடைத்தது. தந்தையை ஏற்கெனவே இழந்திருந்த ஏமிக்கும் அவரது தாயாருக்கும் டாக்டர் வில்சன் அவர்கள் மிக்க ஆதரவாயிருந்தார். இராபர்ட் வில்சனும் தம் மனைவியையும் மகளையும் இழக்கக் கொடுத்தவர்தான். இதனால், ஏமியின் ஆன்மிகத் தந்தையாக அவர் மாறி, ஏமிக்கு ஊழியத்தில் பயிற்சி அளித்தார். 1892, ஜனவரி 13ஆம் நாள் ஏமிக்கு மிக வித்தியாசமான முறையில் திருப்பணிக்கான அழைப்பு இறைவனிடமிருந்து வந்தது. (புறப்பட்டுப் போ) என்ற தெளிவான அழைப்பொலி கேட்டது. ஆனால், எங்கு போவது? எப்படி போவது?’ என்ற தயக்கமும் கலக்கமும் சூழ்ந்தன. பின்னர் சீனாவுக்குத் திருப்பணிப் பயணம் மேற்கொள்ள விழைந்தார். ஆனால், மருத்துவக் குழுவினர் அவருக்கு சீனா செல்ல அனுமதி தரவில்லை. பிறகு, ஜப்பான் போகத் திட்டமிடப்பட்டது. ஷாங்காய் வழியாக, கடல் பயணம் மேற்கொண்டு ஜப்பான் சென்றார் பல பிரச்சனைகள் நடுவே, அங்கு அவரால் 15 மாதங்கள் மட்டுமே பணி செய்ய முடிந்தது. உடல்நலக் குறைவால் தாயகம் திரும்ப எண்ணியவர், வரும் வழியில் இலங்கையில் சில காலம் தங்கி இருந்து திருப்பணியாற்றினார். பலருக்கு உதவிகளும் இறைப்போதனைகளும் செய்தார். அங்கிருந்தவர்கள் அவரை அங்கேயே இருக்க வேண்டிக் கொண்டாலும், தம் தாயைப் பராமரிப்பது உள்ளிட்ட காரணங்களுக்காக இங்கிலாந்து திரும்பினார். பின்னர் சிறிதுகாலம் கழித்து, அவரது தாயும் ஆன்மிகத் தந்தையும் அனுமதி தர, திருப்பணி அழைப்பேற்று தென் இந்தியாவின் பெங்களூரு மாநகருக்கு வந்து சேர்ந்தார். 1895 நவம்பர் 9ஆம் நாள் இந்தியா வந்தவர், அன்று தொடங்கி 55 ஆண்டுகள் இங்கேயே இந்தியராக - தமிழராக வாழ்ந்து, தியாக சேவை புரிந்து 1951 ஜனவரி 18 அன்று, தம் 83 ஆவது வயதில் இங்கேயே மறைவெய்தி, இங்கேயே அடக்கமானார்.

III இந்தியத் திருப்பணிகளின் தொடக்கமும் வளர்ச்சியும்

ஏமி, பெங்களூர் வந்தபோதே, ஆர்வத்துடன் தமிழ் கற்கத் தொடங்கிவிட்டார். கோடை விடுமுறைக்காக ஊட்டிக்குச் சென்றபோது, ஏற்கெனவே திருநெல்வேலிப் பகுதியில் இறைப்பணி ஆற்றி வந்த மூத்த ஊழியர் தாமஸ் உவாக்கரைச் சந்தித்தார். அவரது அழைப்பின் பேரில் திருநெல்லையிலுள்ள பண்ணைவிளை சென்று, அத்தம்பதியினருடன் இணைந்து, திருப்பணியாற்றத் தொடங்கினார். உவாக்கர் அவர்களே, ஏமிக்குத் தமிழானாசாகவும் அமைந்து, தமிழ் கற்பித்தார். 'இரட்சணிய யாத்திரிகம்' என்ற கிறித்தவக் காப்பியத்தை எழுதிய மகாகவி *H.A.* கிருஷ்ண பிள்ளை அவர்களும் அம்மையாருக்குத் தமிழ் பயிற்றியதாகக் கூறப்படுகிறது. தமிழ்நாட்டில் தமிழரிடை ஊழியம் செய்வது இங்குதான் உறுதியானது. அவரது சிறுவயது நிகழ்வு ஒன்றை ஏமி இப்போது நினைவுகூர்ந்து குறிப்பிட்டார். அதாவது, அவர் பிறக்கும்போதே அவருக்குக் கபில நிறக் (ஊதா) *(Brown eyes)* கண்கள் இருந்ததாம். தம் தாயையும் பிற ஆங்கிலேயரையும் போலத் தமக்கு நீலக் கண்கள் *(Blue Eyes)* இல்லையே என்று அவர் ஏங்கி, குழந்தையாக இறைவனிடம் தம் கண்களின் நிறத்தை மாற்றும்படி வேண்டிக் கொண்டாராம். ஆனால் அவரது வேண்டுகோளை இறைவன் மறுத்துவிட்டதை பிறகு ஏற்றுக் கொண்டாராம். இப்போதுதான் புரிந்தது அவருக்கு, தாம் இந்தியரிடை வாழப் போவதற்கு இந்தியரைப் போன்ற இந்தக் கண்களின் நிறமும் ஒரு துணையாயிருக்குமென்று இறைவன் நினைத்தாரோ என்னமோ என்று! பண்ணைவிளையில் தாமஸ் உவாக்கருடன் சேர்ந்து அவர் தீவிரமாகக் கிராம ஊழியங்களில் ஈடுபட்டார். அவரை 'அண்ணாச்சி' என்று இவர் அழைக்க, அவரும் இவரைத் 'தங்கச்சி' என்றே விளிப்பாராம். இக்கால முதல், ஏமி தமிழ்ப் பெண்ணாகவே மாறி, 'சேலை கட்டிய செந்தமிழ் மகளாகவே 'முற்றும் மாறிவிட்டார். இப்பணியில் அவரோடு படிப்படியாகப் பல பெண்கள் இணைந்து கொண்டனராம். அவர்களெல்லாம் ஏமி அம்மையாரோடு இணைந்த 'நட்சத்திரக் கூட்டங்கள்' என அழைக்கப்பட்டனர்.

அவர்களுள் குடும்பக் கொடுமைகளிலிருந்து மீட்கப்பட்ட பொன்னம்மாள், அதே நிலையிலிருந்து வந்து ஜெயமணியாக மாறிய சீதாலட்சுமி, சிறுமியாக வந்து அம்மையாரிடம் அடைக்கலம் கண்ட அருளாயி போன்றோர் முக்கியமானவர்கள்.

IV. முக்கியமான விடுதலைப்பணி - சிறுமியர், பெண்கள் மீட்பு

இக்கால கட்டத்தில்தான், அம்மையார் உவாக்கர் தம்பதிகளோடு - அதாவது 1901 இல் டோனாவூர் பகுதிக்கு வந்தார். பின்னர் அதுவே அவரது நிரந்தர ஊழியக்களமாகவும் வாழ்க்கைத்தலமுமாகி விட்டது. திருநெல்வேலியின் ஒரு கோடியில் உள்ள டோனாவூர்

என்பது ஒரு சிறிய கிராமம். பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், கௌன்ட்டோனா என்ற ஒரு ஜெர்மானியப்பிரபு, தென்னிந்தியாவில் நடைபெற்று வந்த திருப்பணிகளுக்கு நிறைய நன்கொடைகள் தந்து வந்தார். இவர் 1824ஆம் ஆண்டு ஒரு சிறிய கிராமத்தில் ஆலயம் கட்ட நிதி உதவி செய்துள்ளார். பிறகு ஆலயத்தைச் சுற்றியுள்ள அந்தக் கிராமத்துக்கே அவர் பெயரை வைத்துவிட்டார்கள்.

இந்த 'டோனாவூர்' கிராமத்தின் உருவாக்கத்தில் ரேனியஸ் என்ற மிஷனெரியும் பெரும் பங்காற்றியதாக வரலாறு கூறுகிறது. இங்கேதான், ஏமி அம்மையார் தமது சிறுவர் காப்பகத்தை நிறுவுகிறார்.

அனாதைக் குழந்தைகளுடன் கார்மைக்கேல் அம்மையார்

அம்மையாரின் வரலாற்றுப் பெரும்பணி

இங்கேதான், அம்மையார் செய்த வரலாற்றுப் பெரும்பணியான 'தேவதாசி முறை' ஒழிப்பு (அ) மீட்புப் பணியைப் பற்றி நாம் குறிப்பிட வேண்டும். ஆனால், அது பற்றி விரிவாக எழுதுதற்கு, நம் கட்டுரையின் அளவும் அமைப்பும் இடம் தராது. இது பற்றி விரிவாக அறிய, திலகவதிபால் என்பார் எழுதியுள்ள 'ஏமி கார்மைக்கல் அம்மையார்' என்ற வரலாற்று நூலையும் முனைவர் ஜான்சி பால்ராஜ் அவர்கள் எழுதியுள்ள 'தேவதாசி முறை ஒழிப்பில் ஏமி கார்மைக்கேல்' என்ற நூலையும் இத்தகு பிற நூல்களையும் படிக்க வேண்டும். பிற்காலச் சோழர்கள் காலத்தில், அவர்களால் எழுப்பப்பட்ட பெருங்கோயில்களில் நடன மங்கையராகவும், தீபமங்கைகளாக விளக்கேந்திச் செல்லவும், கோயில் மூர்த்திகட்கு வெண் சாமரை வீசவும் போன்ற பணிகளுக்காகவும் பெண்கள் தம் திருமண வாழ்வை ஒதுக்கி, கோயிற் பெண்டிராகத் தம்மை நேர்ந்துகொள்ளும் பழக்கம் ஏற்பட்டது. இத்தகு கோயில் வாழ்வுக்காக, தம் சிறு குழந்தைகளைக்கூட, 'பொட்டுக் கட்டுதல்' என்ற பெயரில் அர்ப்பணித்து விடும்

வழக்கமும் ஏற்பட்டது. ஆனால், காலப்போக்கில் இப்பெண்களும் குழந்தைகளும் புனிதமான ஆலயப்பணிகளுக்காக மட்டுமன்றி, கோயில் பூசாரிகள், அறங்காவலர்கள், கோயில்களுக்கு நிதி கொடுக்கும் பெருஞ்செல்வர்கள் முதலியோராலும் தவறாகப் பயன்படுத்தப்படும் அவல நிலைமை ஏற்பட்டது. இதற்காகக் குறிப்பிட்ட சில குடும்பங்களைச் சேர்ந்தவர்களும் ஏழை எளியப் பின்புலம் கொண்ட குழந்தைகளும் கட்டாயப்படுத்தப்பட்டு, இப்பணியில் ஈடுபடுத்தப்படும் கொடுமைகள் வளர்ந்தன. இத்தகைய அவலங்களிலும் அடிமைத்தனங்களிலும் அடக்குமுறைகளிலும் சிக்கித் தவித்த சிறுமியரையும் வளர்ந்த பெண்களையும் மீட்டெடுத்து அவர்களுக்குப் புதுவாழ்வு தரவும், நிலையான மறுவாழ்வு பெற 'டோனாவூர் ஐக்கியம்' என்ற கைவிடப்பட்ட குழந்தைகளின் சரணாலயம் கண்டதும்தான் அம்மையார் செய்த வரலாற்றுப் பெரும் பணி. இதற்காக அவர் சந்தித்த எதிர்ப்புகளும் பட்ட அவமானங்களும் செய்த தியாகங்களும் கொஞ்சநஞ்சமல்ல. இதனால்தான் அவர் மனித குல வரலாற்றில் ஒரு மாபெரும் தியாக தீபமாகத் தலைமுறைதோறும் போற்றப்படுகிறார்.

இதற்காகவேதான் அவர் முதலில் டோனா ஊரில் ஒரு சிறுவர் காப்பகம் ஏற்படுத்தி, மீட்கப்பட்ட குழந்தைகளைப் பராமரித்தார். அவரால் முதலில் மீட்கப்பட்ட குழந்தை, அல்லது அவரிடம் முதலில் தஞ்சம் புகுந்த குழந்தை தான் அம்மாவால் 'ப்ரீனா' எனப் பெயர் சூட்டப்பட்ட லட்சுமி என்ற சிறுமி. துணிவுடன் தன் ஊரையும் உற்றாரையும் விட்டு தப்பிவந்து, இன்னொரு பெண்ணின் உதவியுடன் 'அம்மா'விடம் அடைக்கலம் புகுந்த அந்த அன்பு மகளைத் தொடர்ந்து சுகந்தி, இந்திர நீலா, இன்னொரு சென்னைக் குழந்தை என எண்ணற்றோர் இந்த ஏமி அன்னையின் அரவணைப்புக்குள் வந்தனர். ஒரு விதவைத் தாயின் குழந்தை, கோயிலுக்கு விட விலை பேசப்பட்ட குழந்தை எனப் பல குழந்தைகள் ஏமி அம்மையாரால் மீட்கப்பட்டனர். பல எதிர்ப்புகளிடையே, பல உத்தி முறைகளைப் பயன்படுத்தி அம்மையார் இக் குழந்தைகளை மீட்டெடுத்தார். தாம் மீட்டு வந்த ஒவ்வொரு குழந்தை பற்றியும் அவர் ஒரு தனி நூலே 'தாமரை மொட்டுகள்' *(Lotus buds)* எனற் பெயரில் எழுதியுள்ளார். கிட்டத்தட்ட அவரது சமகாலத்தில் இந்த தேவதாசி முறை ஒழிப்புக்காக, தந்தை பெரியாரின் ஆதரவில் முத்துலட்சுமி ரெட்டி, மூவாலூர் இராமாமிர்தம் அம்மையார் போன்றோரும் அரிய பணிகள் ஆற்றியுள்ளனர். ஆனால் அவர்களெல்லாம் இக்கொடுமையைச் சட்டபூர்வமாகத் தடுத்து நிறுத்த சட்டப் போராட்டமும் அரசியல் போராட்டமும் நடத்தினர். ஆனால், அக் குழந்தைகளைத் தாமே நேரடியாகச் சென்று (தம் உடன் ஊழியருடன் இணைந்து)



சிங்கத்தின் வாயிலிருந்து பிடுங்குவது போல பிடுங்கி எடுத்து, துணிவுடன் அவர்களைத் தம் காப்பகத்தில் வைத்து கடைசி வரை பராமரித்த ஏமி அம்மையின் களப்பணிச் சாதனையை வேறெவரும் செய்திடவில்லை. எனினும், நம் நாட்டு நூல்களிலும் ஏடுகளிலும் பொது வெளியிலும் இத்தொண்டுக்காகப் பிறர் பெற்ற அங்கீகாரமும் பாராட்டும் நம் ஏமி அம்மையாருக்குக் கிடைக்கவில்லை (அண்மைக்காலம் வரை) என்பது வருந்தத்தக்க செய்தி.

V. டோனாவூர் எனும் பெண் குழந்தைகள் சரணாலயத்தின் அமைப்பும் அரும்பணிகளும்

'டோனாவூர் ஐக்கியம்' (Donavur Fellowship) என்பது 1927இல் பதிவு செய்யப்பட்ட அமைப்பாக மாறியது. அதன் முக்கியம் பகுதிகளை முனைவர் ஜான்சி பால்ராஜ், நான்காகப் பகுத்து தம் நூலில் விளக்கியுள்ளார்.

அ. எழில்மிகு காப்பகம்

இந்த எழில்மிகு சிறுவர் காப்பகம் 1901இல் தொடங்கப்பட்டாலும், 1904ஆம் ஆண்டு முதல், தேவதாசி முறைக்கு அர்ப்பணிக்கப்பட்ட குழந்தைகள் பலரும் இங்கு கொண்டு வரப்பட்டனர். சில ஆண்டுகளில் 40க்கும் மேற்பட்ட குழந்தைகள் வந்து சேர்ந்தனர். பல ஐரோப்பியப் பெண்கள், அம்மையாருக்கு இப்பணியில் பெரும் துணை செய்தனர்.

ஆ) பள்ளிக்கூடம்

1910ஆம் அண்டில் குழந்தைகளின் கல்விக்காக, இங்கு ஆரம்பப் பாடசாலை அமைக்கப்பட்டது. இதிலும் வெளிநாட்டுப் பெண்கள் பலர் பணியாற்றினர்.

தொடரும் தொண்டு நிறுவனப் பணி

இ. மருத்துவமனை

*1936*ஆம் ஆண்டில், 'பரம சுக சாலை' என்ற பெயரில் காப்பகத்தினுள்ளேயே மருத்துவமனை ஏற்படுத்தப்பட்டது. ஆரம்பத்தில் ஐரோப்பிய மருத்துவர், செவிலியர் பணியாற்ற, பிறகு உள்ளூர் பணியாளர்களும் தக்க பயிற்சி பெற்று பணியாற்றினர்.

ஈ. அழகிய வீடுகள்

இங்கே வாழ்வோருக்காக, இயற்கைச் சூழல் மிக்க பல அழகிய வீடுகள் கட்டப்பட்டன. இந்தியாவின் எல்லாப் பக்கங்களிலுமிருந்து கைவிடப்பட்ட சின்னஞ்சிறு குழந்தைகளும் பெண்களும் இங்கு வந்து அடைக்கலம் கண்டனர்.

உ. ஆண் குழந்தைகள் மீட்பு

*1918*முதல், கைவிடப்பட்ட நிலையிலிருந்த ஆண் குழந்தைகளுக்கும் காப்பகத்தில் இடம் தரப்பட்டு அவர்களைப் பராமரிக்க ஆண் ஊழியர்கள் ஏற்படுத்தப்பட்டனர்.

இந்தக் காப்பகத்தின் கிளைகளாக நெய்யூர், நரைக்காடு போன்ற இடங்களிலும் சில இல்லங்கள் நிறுவப்பட்டன.

ஊ. அம்மையாரின் அருட்பணி - கொள்ளையன் மனமாற்றம்

கைவிடப்பட்ட குழந்தைகளையும் காரிகையரையும் மீட்டெடுத்தது மட்டுமல்ல, ஒரு கொடிய கொள்ளையனையும் மனம் மாற்றி நல்வழிப்படுத்தியுள்ளமை ஒரு விந்தை வரலாறு. ஏழைகளின் காவலனாக இருந்து அவர்களை ஒடுக்குவோரிடமிருந்து கொள்ளையடித்து, அரசாங்கத்துக்கும் காவல் துறைக்கும் சிம்ம சொப்பனமாக இருந்த செம்புலிங்கம் என்ற கொள்ளையனுக்கும் அருட் செய்தியை அறிவித்து, அவனுக்குத் திருமுழுக்குத் தந்து மனமாற்றினார். அவனது கைவிடப்பட்ட குழந்தைகளைப் பராமரித்தார். எனினும், அவன் காவல் துறையால் சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டான்.

VI. அம்மையாரின் எழுத்துப்பணி - பலவகை நூல்கள்

இவ்வாறு ஓயாதுழைத்த அந்த உத்தமி, *1931*இல் களக்காடு என்ற இடத்தில் ஒரு கட்டுமானப் பணியை மேற்பார்வை செய்யச் சென்றபோது, ஒரு குழியில் தவறிவிழுந்து படுத்த படுக்கையானார். *1948*இல் இன்னொரு விபத்தையும் எதிர்கொண்டு, எழுந்து நடக்க முடியா நிலைக்குட்பட்டார்.

ஆனால் 'அதிசயப் பிறவி'யான இந்த அம்மையார், அடுத்த *20* ஆண்டுகள், படுத்த படுக்கையில் இருந்தபடியே, சுமார் *38* நூல்கள் எழுதினார் என்பது பிரமிப்பூட்டுகிறது. அவர் எழுதிய நூல்களில் தனித்தனி கடிதங்கள், தியான நூல்கள், கவிதை நூல்கள், தம்மால் மீட்கப்பட்டோரின் வரலாற்றுக் குறிப்புகள் எனப் பலவும் அடங்கும். குறிப்பாக, தங்கச்சரடு *(Gold Cord)*, தாமரை மொட்டுகள் *(Lotus Buds)* கொள்ளையர் தலைவன் ராஜ் *(Raj, the Brigand Chief)* முதலிய நூல்கள் மிகப் புகழ்பெற்றவை. நெஞ்சை உருக்குபவை.

VII அரசு தந்த அங்கீகாரம்

இத்தகு தியாக சேவை செய்த பெருமாட்டியின் பணிகளைப் பாராட்டி, அன்றைய பிரிட்டிஷ் அரசு அன்று (1919இல்) சென்னை ஆளுநர் லார்ட் பென்ட்லாண்ட் அவர்கள் வழியாக, 'கைஸரி ஹந்த் விருதினை வழங்கியது. முதலில் அதனை ஏற்கத் தயங்கிய அம்மையார், பிறரது தூண்டுதலால், தம் பிரதிநிதியை அனுப்பி அதனைப் பெற்றுக்கொண்டார்.

VIII. வாழ்வின் நிறைவு

'தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராக வாழ்ந்த பெருமாட்டி, 1951 ஜனவரி 18இல் தமது 83ஆவது வயதில் உறங்கும்போதே படுத்த படுக்கையிலேயே உயிர் நீத்தார். அவரது முடிவு இவ்வாறுதான் இருக்குமென்று இறைவன் அவருக்கு 38 ஆண்டுகள் முன்னரே தெரிவித்திருந்தாராம். அவர் புதைக்கப்பட்ட இடத்தில் அவர் சொன்னபடியே, அவருக்குக் கல்லறை ஏதும் கட்டாது, பறவைகள் நீர் அருந்தும் தொட்டி ஒன்று மட்டும் வைக்கப்பட்டுள்ளது.



அவரது தியாக வாழ்வின் வரலாற்றுக் குறிப்பை, அவரது கவிதை ஒன்றின் மொழிபெயர்ப்பைச்சுட்டி, நிறைவு செய்யலாம்.

'விண்ணில் பறக்கும் அந்தக் குயில்
கண்ணுக்குத் தோன்றா
கானமாகுதே'
கூண்டுக்குள்ளே அந்தக்குயிலும்
பூண்டிடுமன்றோ மோனவிரதம்
தோட்டத்தில் மலருதே ஒரு லீலி
வீட்டுக்குள்ளே அது வாடிடுமே'
'துள்ளித் திரியும் அந்தச் சிறுமி
முள்வேலியுள்ளே ஒடுங்கு வாளன்றோ'
- (மொழிபெயர்ப்பு: திலகவதிபால் அம்மையார்)

கோவண நாடகம்

மு. நளினி, இரா. கலைக்கோவன்
டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம்
திருச்சிராப்பள்ளி

சோழர்களின் விருப்பத்திற்கு உகந்த உறைவிடமான பழையாறையில் வாழ்ந்தவர் அமர்நீதிநாயனார். வணிக மரபில் வந்த அச்சைவப் பெருமகனார் இறையடியாருக்கு உணவிடலும் ஆடையளித்தலும் தம் கடமைகள் எனக் கருதித் தொண்டாற்றி வந்தார். பழையாறைக்குப் பக்கத்திலுள்ள திருநல்லூருக்கு விழாக் காணச் சென்றவர் அங்கு மடம் அமைத்துத் தம் தொண்டைத் தொடர்ந்தார்.

அமர்நீதியாரின் நல்ல உள்ளத்தை உலகுக்கு உணர்த்த விழைந்த இறைவன் பிரம்மசாரி வடிவெடுத்துக் கைத்தண்டில் கட்டப்பெற்ற இரண்டு கோவணங்களுடன் அமர்நீதியாரின் மடம் சேர்ந்தார். அவரை வரவேற்ற அமர்நீதி அப்பெரியாரின் வருகைக்குத் தாம் செய்த தவம் என்னவோ என வியந்து மகிழ்ந்தார். அடியாருக்கு உணவூட்டி உடையும் அளிக்கும் தொண்டு அறிந்து அமர்நீதியைக் காணவந்ததாக இறைவன் கூறினார்.

மடத்தில் உணவருந்திச் செல்லுமாறு இறைவனை அமர்நீதி வேண்ட, ஒப்பிய இறைவன் தாம் குளித்து வந்து உணவு உண்பதாகக் கூறித் தண்டிலிருந்த இரண்டு கோவணங்களுள் ஒன்றை எடுத்து அமர்நீதியிடம் தந்தார். குளித்து மாற்றத் தாம் ஒன்று கொண்டு செல்வதாகவும் ஒரு வேளை இடையில் மழைவரின் அது நனைந்து போகக்கூடும் என்பதால் மற்றொன்றைப் பாதுகாப்புக் கருதி அமர்நீதியிடம் தருவதாகவும் கூறி, 'ஓங்கு கோவணப் பெருமையை உள்ளவாறு உமக்கே ஈங்கு நான் சொல வேண்டுவதில்லை. நீர் இதனை வாங்கி நான் வரும் அளவும் ஆங்கு வைத்துத்தாரும்' என்றுரைத்துக் குளிக்கச் சென்றார். அமர்நீதியார் கோவணத்தை வாங்கிப் பாதுகாப்பாக வைத்தார்.

குளித்து வந்த இறைவனை அமர்நீதி உணவருந்த வேண்டினார். இறைவன் உடுத்திருந்த கோவணமும் தண்டுக் கோவணமும் நனைந்திருந்தன. இரண்டும் ஈரமாகிப் போனதெனக் கூறி மாற்றிக்கொள்ள அமர்நீதியிடம் தாம் தந்த கோவணத்தைக் கேட்டார் இறைவன். அமர்நீதி கோவணம் வைத்த இடத்திற்குச் சென்று பார்த்தார். கோவணத்தைக் காணவில்லை. இறைவன் அதை மறையச் செய்தமை அமர்நீதிக்குத் தெரியாமையின் திருமடம் முழுவதும் தேடினார். இருந்தால்தானே கிடைப்பதற்கு!

செய்வதறியாது திகைத்த அமர்நீதி, புதிய கோவணம் ஒன்றைக் கொணர்ந்து இறைவனிடம் தந்தார். 'வைத்தது பிழைத்தது; இது புதியது. நனைந்தது களைந்து நெய்தமைத்த இது அணிக'

என இறைவனிடம் வேண்டினார். இறைவன் நெருப்பாய்ச் சினந்தார். தாம் தந்ததை மறைத்துப் புதியதென வேறு தருவது சரிதானா என்று எள்ளினார்.

தாம் அறியாமல் நடந்த பிழை என்றுரைத்த அமர்நீதி, தாம் கொணர்ந்திருந்த கோவணத்துடன் பட்டாடைகள், மணிகள் அனைத்தும் தருவதாகக் கூறினார். தமக்குப் பொன்னும் பட்டும் வேண்டாம் எனக் கூறிய இறைவன், தம் கோவணத்திற்கு ஈடான கோவணமே போதும் எனத் தணிந்தார். அமர்நீதியார் சற்றே மகிழ்ந்து, இறைவன் கோவணத்திற்குச் சமமான கோவணத்தைத் தாம் எங்ஙனம் தருவது என்று கேட்க, தண்டில் இருந்த கோவணத்தைக் காட்டிய இறைவன், அது அமர்நீதியார் தவறவிட்ட கோவணத்திற்கு இணையானது எனக் கூறி அதன் எடைக்குச் சமமானதைத் தந்தால் போதும் என்றார்.

மிக நன்று என மகிழ்ந்த அமர்நீதி தராசொன்றை அமைத்தார். அதன் ஒரு தட்டில் தண்டிலிருந்த கோவணத்தை இறைவன் வைக்க, அமர்நீதி தம் கையிலிருந்த புதிய கோவணத்தை மற்றொரு தட்டில் இட்டார். இறைவன் தட்டு இறங்கி வரவில்லை. அது கண்டு வியந்த அமர்நீதி நாயன்மார்களுக்கு அளிப்பதற்காக வைத்திருந்த கோவணங்களை ஒவ்வொன்றாக தட்டில் இட்டார். தட்டு சமமாகவில்லை. 'உலகில் இல்லாத மாயை! இக்கோவணத்திற்குப் பல கோவணங்கள் இட்டும் ஒப்பாகவில்லையே' என்று உருகியவர், தம்மிடமிருந்த பல ஆடைகளையும் அத்தட்டில் இட்டார்; பொதிப்பொதியாக வைத்தார். தட்டு சமமாகவில்லை. அஞ்சிய அமர்நீதி தம்மிடமுள்ள பொன், பொருள் இவற்றை இடலாமா எனக் கேட்க, எது இட்டாலும் சரி; தம் கோவணத்திற்கு அது ஈடானால் போதும் என்றார் இறைவன்.

அமர்நீதி, தாம் வைத்திருந்த பொன், வெள்ளி, நவமணித்திரள் அனைத்தும் கொணர்ந்து தட்டில் இட்டார். தட்டு நேராகவில்லை. பலவகை உலோகங்களைக் கொணர்ந்து வைத்தார். தட்டு நேராகவில்லை. அச்சமும் வியப்பும் கலந்த நிலையில், 'தலைவ, யானும் என் மனைவியும் சிறுவனும் தகுமேல் துலையில் ஏறிடப் பெறுவதுன் அருள்' எனத் தொழுதார். அமர்நீதியின் நிலையைத் தராசின் வழி உலகிற்கு உணர்த்தவும் அவரை இவ்வுலகத் துன்பத்திலிருந்து விடுவிக்கவும் எண்ணிய இறைவன் அதற்கு இசைந்தார்.

'இழைத்த அன்பினில் இறைத் திருநீற்று மெய்யடிமை பிழைத்திலோம் எனில் பெருந்துலை நேர் நிற்க' என்று நல்லூர் இறைவனை வணங்கியவாறே ஐந்தெழுத்து ஓதித் தராசுத் தட்டில் ஏறி நின்றனர் அமர்நீதியாரும் அவர் மனைவியும் மகனும். இறைவன் கோவணமும் அமர்நீதியாரின் தொண்டும் ஒத்தமையால் தட்டுகள் நேராகின. இறைவன் வேடம் கலைத்து

நல்லூரில் இருக்குமாறு போலத் தேவியுடன் காட்சியளித்தார். தட்டேறிய மூவரும் கைதொழுது இறைவனை ஏத்தினர். இறைவன் அருளினால் அத்தட்டே விமானமாகி வணிகர் குடும்பம் கைலாயம் அடைந்தது.

சேக்கிழார் திருத்தொண்டர் புராணத்தில் விரிவாகக் கூறியிருக்கும் அமர்நீதிநாயனாரின் இவ்வரலாறு, 'கோவண நாடகம்' என்ற பெயரில் கி. பி. *1175*ல் நல்லூர்த் திருக்கோயிலில் நடிக்கப்பட்ட தகவலை அக்கோயிலில் டாக்டர் மா.இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மைய ஆய்வர்கள் கண்டறிந்த புதிய கல்வெட்டுகளுள் ஒன்று வெளிச்சப்படுத்துகிறது.

பாபநாசத்திற்கு அருகில் பாபநாசம் வலங்கைமான் சாலையில் உள்ள பாடல் பெற்ற ஊர் திருநல்லூர். அங்குள்ள கல்யாண சுந்தரேசுவரர் கோயில் திருவாவடுதுறை மடத்தின் ஆளுகையில் உள்ளது. மாடக்கோயிலாக வெற்றுத்தளத்தின் மீது அமைந்திருக்கும் இக்கோயிலின் இருதளத் திராவிட விமானம் பல்லவச் சாயல் கொண்டது. அதன் கருவறைப் பின்சுவரில் இறைவனும் இறைவியும் அமர்நிலையில் இருக்க, துளைப்பட்ட மேனியுடன் இலிங்கமும் உள்ளது. பக்கச் சுவர்களில் நான்முகனும் விஷ்ணுவும். இக்கோயிலில்தான் அப்பருக்குத் திருவடி சூட்டும் படலத்தை இறைவன் நிகழ்த்தியதாகச் சேக்கிழார் கூறுவார். அதை முன்னிறுத்தியே இன்றளவும் அடியவர்கட்கு இங்குத் திருவடிச் சேவை நிகழ்த்தப்படுகிறது.

அமர்நீதிநாயனாரால் புகழ் பெற்ற இக்கோயிலில் அவருக்குக் கல்லிலும் மரத்திலும் சிற்பங்கள் உள்ளன. மரச்சிற்பம் தராசுத் தட்டில் அமர்நீதியின் குடும்பம் நிற்பதைக் காட்ட, கற்சிற்பங்கள் அமர்நீதியையும் இடுப்பில் குழந்தை ஏந்திய அவர் துணைவியையும் படம்பிடிக்கின்றன.

நல்லூர்க் கோயில் இரண்டாம் கோபுரத்தின் வடபுறத் தாங்குதளத்தில் வெட்டப்பட்டிருக்கும் இரண்டாம் இராஜாதிராஜரின் பன்னிரண்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, நல்லூர் அக்காலத்தில் ஸ்ரீபஞ்சவன்மாதேவிச் சதுர்வேதிமங்கலம் என்றும் அறியப்பட்டதாகக் கூறுகிறது. நித்தவிநோத வளநாட்டின் கீழ் இணைக்கப்பட்டிருந்த இந்த பிரமதேய ஊரின் நிருவாகத்தைக் கவனித்து வந்த பெருங்குறி மகாசபையினர், நல்லூர்க் கோயில் திருவிழாவின்போது கோவணநாடகம் நடத்த இக்கோயில் தேவரடியாள் நெற்றிக்கண் நங்கைக்குக் காசு கொள்ளா இறையிலியாக இரண்டு மா முக்காணி அளவு நிலம் கோவண நாடகப்புறமாகக் கொடையளித்துள்ளனர்.

நெற்றிக்கண் நங்கை இக்கோவண நாடகத்தை வேறுயாரிடமிருந்தோ கற்று ஆடியதாகக் கூறும் கல்வெட்டில், நங்கையின் மறைவுக்குப் பிறகும் அந்நாடகம் அவரது வழித் தோன்றல்களால் தொடர்ந்து நடத்தப்பெற வேண்டும் என்று பெருங்குறி மகாசபை அறிவுறுத்தியதை அறியமுடிகிறது. வழித் தோன்றல்களால் இந்நாடகம் நடத்த முடியாத நிலை உருவாகு மானால் அவர்கள் வேறு ஆடற்கலைஞர்களை ஏற்பாடு செய்து இந்நாடகத்தைத் தொடர்ந்து நடத்திட வேண்டும் என்ற நிபந்தனையையும் பெருங்குறி மகாசபை விதித்திருந்தது.

கோவண நாடகப்புறமாக அளிக்கப்பட்ட நிலத்தின் எல்லை களைக் குறிப்பிடும்போது இருமுடிசோழ வதி, பஞ்சவன் மாதேவி வாய்க்கால் ஆகிய நீர்ப்பாசன அமைப்புகளின் பெயர்களையும் இருள்நீக்கி எனும் சிற்றூரின் பெயரையும் கல்வெட்டு முன்வைக்கிறது. 'கற்றாடுதல்', ஆடமுடியாத நிலை ஏற்படின், 'பிரதி கொடுத்தாடுதல்' போன்ற கல்வெட்டுச் சொல்லாட்சிகள் குறிப்பிடத்தக்கன. தமிழ்நாட்டு ஆடற்கலை வரலாற்றில் மிக முக்கியமான இடத்தைப் பெறும் இந்தக் கல்வெட்டு, அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவரும் இவ்வூருடன் தொடர்புடையவருமான அமர்நீதிநாயனாரின் வரலாற்றையே, 'கோவண நாடகம்' என்று குறிப்பிடுகிறது. இந்நாடகத்தை நடிக்கத் தேவரடியாள் நெற்றிக்கண் நங்கைக்குத் தரப்பட்ட நிலம் நாடகத்தின் பெயராலேயே கோவண நாடகப்புறம் என்று வழங்கப்பட்டமையும் சிறப்பிற்குரிய தரவாகும். தமிழ்நாட்டில் இதுவரையிலும் கிடைத்திருக்கும் ஆடற்கலை சார்ந்த கல்வெட்டுகள் எவற்றிலும் இது போல் கொடையளிக்கப்பட்ட நிலம் நிகழ்த்தப்பட்ட நாடகத்தின் பெயரால் அமையவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

நல்லூரில் கண்டறியப்பட்ட மற்றொரு புதிய கல்வெட்டு, கோயில் விமானக் கீழ்த்தளப் பெருமண்டபத் தூண் ஒன்றில் பொறிக்கப்பட்டுள்ளது. அம்மண்டபத்தைக் கட்டித் தந்தவராகப் பழையனூர் உடையான் திருப்பெருமணம் உடையானைச் சுட்டும் அக்கல்வெட்டு, தூணையும் அவரே தந்ததாகக் கூறுகிறது. கல்வெட்டுக் குறிப்பிடும் பெருமணம் சம்பந்தர் இறைவனோடு கலந்த இடமாகும்.

வெற்றுத்தளத்தின் தெற்குக் கோட்டமொன்றில் இடம்பெற்றிருக்கும் ஆலமர்அண்ணலின் முன் எடுக்கப்பட்டுள்ள முன்றிலின் மேற்குக் காலின் கீழ்ப்புறம், அதை எடுத்தவரின் சிற்பமும் அதைச் சுற்றி, முன்றிலை எடுத்தவர் மாதானமங்கலத்து ஸ்ரீமாகேசுவரப் பிரியனான உழியின்றி வந்தான் என்று குறிப்பிடும் கல்வெட்டுப் பொறிப்பும் காணப்படுகின்றன.

அமர்நீதிநாயனாராலும் அப்பர் பெருமானாலும் மாடக்கோயில் அமைப்பாலும் சிறப்புப் பெற்றிருக்கும் நல்லூர்க் கோயில் புதிய கண்டுபிடிப்பான கோவண நாடகக் கல்வெட்டால் மேலும் சிறப்புக்குரியதாகி இருப்பது கண்கூடு.

புதிய கல்வெட்டுகள்

முதற் கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனசக்கரவர்த்திகள் ஸ்ரீராஜாதிராஜ தேவர்க்கு யாண்டு 12வது நித்தவினோத வளநாட்டு நல்லூர் நாட்டுத் திருநல்லூரான ஸ்ரீபஞ்சவன்மஹாதேவிச்

சதுர்வேதிமங்கலத்துப் பெருங்குறி மஹாஸபையோம் உடையார் திருநல்லூர் நாயனார் கோயிற் திருநாடகம் இவ்வூர்த் திருப்புத்தூர் மாளந்தை பட்டாரகர் வடுகனான

2. உடைய பிள் . . . . கோவணநாடகங் கற்றாடின இக்கோயில் தேவரடியா - - ளமர் மதலையான நெற்றிக்கண்ணங்கைக்குக் கோவண நாடகப்புறமாக விட்ட நிலமாவது இவ்வூர் இருமுடிசோழ வதிக்குக் கிழக்குப் பஞ்சவன்மாதேவி வாய்க்காலுக்குத் தெற்கு முதற் கண்ணாற்று
3. மூன்றாஞ் சதிரத்து கௌதமன் இருணீக்கி திருவையாறுடையான் பக்கல் நாங்கள் - - விட்ட பொத்தகப்படி நிலம் . . . . . யினால் விரித்து நிலம் . . இந்நிலம் இரண்டு மா முக்காணியும் கூத்தாட இக்காணியுங் காசு கொள்ளா இறையிலியுமாக அனுபவித்து இத்தேவர் திருவிழாவிலேய்
4. இக்கூத்தாடக் கடவராகவுந் தனக்குப் பின்புந் தன் வம்சத்தால் . . . . நல்ல - - - ஆடக் கடவராகவுந் தங்களால் ஆட இயலாவிடிற் ப்ரதி குடுத்தாடுவிக்கக் கடவதாகவுஞ் சொல்லி இந்நிலமித் திருநாடகத்துக்கே கூத்தாட்டுக் காணியுங் காசு கொள்ளா இறையிலியுமாகச் சந்த்ராதித்தவற் செல்வதாக இறையிலி செய்து குடுத்தோம்
5. இப்பெருங்குறி மஹாஸபையோம் இவ்விறையிலி ஆதிசண்டேசுவர ரக்ஷை பன்மாஹேச்வர ரக்ஷை இப்படிக் கிவை இப்பெருங்குறி மஹாஸபையோம் - - ஆவணமாகக் கொண்டருளித் தேவர் தொழக் கறுத்த கண்டத்தான் தூமழையோனாகிய முக்கறுக்கத் தோன்றினான் வந்து *(தொடர்ச்சி கட்டமைப்பில் சிக்கியுள்ளது)*

இரண்டாம் கல்வெட்டு

1	ஸ்வஸ்திஸ்ரீ இ	*2*	த்திருமண்டபம்
3	செய்வித்தார் ப	*4*	ழையனூருடை
5	யான் திருப்பெரு	*6*	மணமுடையா
7	ன் கால்		

மூன்றாம் கல்வெட்டு

1	மாதாநமங்க	*2*	லமுடையான்
3	ஸ்ரீ	*4*	மா
5	ஹே	*6*	ச்வர
7	ப்	*8*	பி
9	ரி	*10*	ய
11	ன்	*12*	உழி
13	யி	*14*	ன்
15	றி	*16*	வ
17	ந்	*18*	தா
19	ன்		

எம்பார் வைபவம்!

ஜனக்புரி சீனிவாசன்
தலைமையாசிரியர் (ஓய்வு), டில்லி

தைதன்னில் புனர்பூசம் மதுரமங்கலம் அவதரித்தோன் வாழியே!
கோவிந்தன் திருநாமம் பெற்றபிரான் வாழியே!

பெரியதிருமலை நம்பி சிட்டர் பிரான் வாழியே!
ஆழ்வான்தன் குமரர்கட்குக் குருவானான் வாழியே!
அத்வைதி யாதவனின்
சூழ்ச்சி முறியடித்து
இளையாழ்வானைக் காத்தபிரான் வாழியே!
மலர்பறிக்க நந்தவனம் சென்றமயம்
தேவனவன் எம்பெருமான் தனக்கல்லால்
பூவும் பூசனையும் தகுமே என்னக் கேட்டவுடன்
அத்வைத மதத்திருந்து
ஆசார்யன் பெரிய திருமலைநம்பி அடிபணிந்தோன் வாழியே!

ஆசார்யன் படுக்கைதனைச் சீர்திருத்த படுத்துப் பார்த்து
நரகமே என்றாலும்
நலிவடையோன் வாழியே!
தேசாரும் சிச்சன் ஆசான் வடிவை
ஆசையுடன் நோக்குபவன் வாழியே!
பாம்பின்வாய் முள்ளெடுத்துப்
பரிதவிப்பு
நீக்கினோன் வாழியே!

பெரும்பூதூர் மாமுனிவன்
பிட்சை ஏற்க
கோவிந்தன் எம்பார் ஆனான் வாழியே!
ஆசார்யன் பிரிவுநிலை தாங்காது
உடல்வெளுத்து வருதல் கண்டு

விற்ற பசுவிற்குப் புல்லிடுவோர் உண்டோ என்று
ஆசார்யன் கேட்டனுப்பி வைத்தோன் வாழியே!
அனவரதமும் எம்பெருமானார் அடிபணிந்தோன் வாழியே!

ஏகாந்தவாழ்வொதுக்கி இல்லறத்தில் ஈடுபட எம்பெருமானார் கட்டளையை
எம்பெருமான் எவ்விடத்தும் நிறைந்ததனால்
ஏகாந்த வாழ்விற்கு இடமில்லை எனக்கூறி
துறவறந்தான் மேற்கொண்ட பிரான் வாழியே!
தொட்டில் குழந்தை
கூரேசர் திருக்குமரன் பரிமளிக்க
திருமந்திரப் பொருளுரைத்தோன் வாழியே!
சாயைபோலப் பாடவல்லார்
பொருளுணர்ந்தோன் வாழியே!

கோவிந்தப் பெருமாளே இருந்தீரோ என
அப்பூச்சி காட்டுதற்கு
அழகுமிகு அபிநயந்தான் காட்டினோன் வாழியே!

ஆசார்யன் செய்கை கண்டே
உளமறிந்தோன் வாழியே!
திருவாய்மொழிப் பொருளை சிந்தைமகிழ செப்பினோன் வாழியே!
எம்பெருமானார் உகந்தபடி
தலை மடியிருத்தோன் வாழியே!
பட்டரிடம் வழியுரைத்து
வைணவத்தைக் காத்த பிரான்
வாழிய வாழியவே!

எம்பெருமானார் ,எம்பார் ,ஜீயர் திருவடிகளே சரணம்.

அடியேன்
ஜனக்புரி சீனிவாசன்
இராமானுச தாசன்.

கவிஞர் அதிரனின் அம்மாவின் பூனை

நெல்லை. G. சோமசுந்தரி
கவிஞர், எழுத்தாளர்,தொல்லியல் ஆர்வலர்

ஒரு கவிதை என்ன செய்யும் என்ற கேள்விக்கு ஒரு அழகான பதிலைத் தருகிறது அம்மாவின் பூனை. எந்த மேற்கோள் கொண்டும் அடங்கி விடாத சொற்களுக்குள் மனம் சுதந்திரமாய் பாடும் ஒரு பாடலாகவும், மனிதர்களின் அகம் சார்ந்த மௌனத்தின் முடிச்சுகளை மெதுவாகக் கட்டவிழ்க்கும் அதிசய பெட்டகமாகவும், பரிணமித்து நிற்பவை கவிதைகள்..அந்த வகையில் , அம்மாவின் பூனை இதன் வரிகளைப் படிக்கும் போதே, அவை நம்மை என்ன செய்யப் போகிறது? வாருங்கள் அவற்றோடு கொஞ்சம் பயணிக்கலாம்.

“எட்டி எட்டிப் பார்க்கிறாள்
தண்டவாளத்தை
இன்னும் வரவில்லை”

“முதல்” என்ற தலைப்பில் வெளிவந்துள்ள இந்த “முதல் கவிதையின்” மூன்று வரிகளை நாம் படிக்கும் போது எந்த வயதாக இருந்தாலும், ரயில் பயணம் என்றாலே மனம் குதூகலிக்கும் தானே செய்யும். அப்படியாக, கவிதை வரிகளில் “அவள் பார்க்க நினைத்த முதல் ரயிலுக்காக” எனக் கவிஞர் முடிக்கும் போது, குழந்தைப் பருவத்தில் நாம் முதன் முதலாக அதிசயமாய் பார்த்து, அதிர்ந்து பின் லயித்த நம்முடைய ரயில் பயணத்தை நினைத்துப் பார்த்து மனம் ஏக்கம் கொள்கிறது. மேலும், பள்ளி காலங்களில் படிக்கும் போது இயற்பியல் ஆசிரியர் சொல்லிக் கொடுத்த “டாப்ளர் விளைவு” என்னும் ஒரு அறிவியல் கோட்பாட்டில் ஒலி அலைகளின் சுருதியில் ஏற்படும் மாற்றத்தை இக்கவிதையின் வரிகள் அப்படியே பதிவு செய்வதாக எனக்குத் தோன்றியது.

பிம்பம் என்கிற தலைப்பில்,

வலியையும் வறுமையும்
கடைசி வரை
எந்த ஒரு கண்ணாடியும்
பிரதிபலிப்பதாய் இல்லை.

என்பதாகச் சாலை ஓரத்தில் முகம் பார்க்கும் கண்ணாடி கடை வைத்திருக்கும் ஒரு ஏழை தொழிலாளியின் ரசம் போன வாழ்வியலை தன் வரிகள் மூலம் நம் மனதிற்குள் தைக்கிறார் கவிஞர். அதே போல "பாடுகள்" என்ற தலைப்பில் உள்ள இந்த கவிதை

மற்றவர்கள் அவரவர் பாடுகளுக்கு
யாரிடமோ யாசிப்பதற்கு
கடந்து செல்கிறார்கள்

இதில் ஒரு அழகிய முரணாய் நடைபாதையில் பாட்டுப் பாடி யாசிக்கும் பார்வை புலனற்ற தம்பதியரை, நான்கு பேரைத் தவிர மற்றவர்கள் யாரும் கவனிக்கவில்லை என்பதை வெகு நுட்பமாக சுளீரென்று சாட்டையடியால் மனித மனம் இயந்திரம் ஆகிவிட்டது என்பதை மட்டும் அல்லாமல் அவரவர் பாடுகளுக்கு யாரிடமோ யாசிப்பதற்குக் கடந்து செல்கிறார்கள் என இரண்டு பாடுகளையும் ஒப்பீட்டு யாசிப்பு என்பது ஒன்றுதான் கோணம் தான் வேறு என யோசிக்க வைத்து ஒரு நிமிடம் நம்மைக் கழட்டிப் போடுகிறார். மற்றொரு இடத்தில்,எம்ஜிஆர் அவர்களை நினைத்து ஏக்க பெருமூச்சு விடும் பாட்டியின் உணர்வுகளை "நினைவுகள்" என்ற தலைப்பில் வெகு இயல்பாகப் படிக்கும் நம்மிடம் பலாச்சுளை இனிப்பைக் கடத்துகிறார்.

"விலைபோன பூர்வீக வீடு" நீண்டநாட்களுக்குப் பின் வந்து, இப்போது பார்க்கும் போது முற்றிலும் தடம் மாறி வேறொன்றாகக் கண்கள் முன்னே நிற்கிறது. இருக்கப் பிடிக்காத அந்த வீட்டிலிருந்து வெளியேற நினைக்கும் போது பரணில் கிடைத்த ஒரு பழைய டைரியை, புதியதாக வாங்கிய வீட்டின் எஜமானி அம்மா தருகிறார்கள். அத்தனையும் அம்மாவின் கையெழுத்தில் சமையல் குறிப்பாக, அதன் பக்கங்களைத் திருப்ப, மனம் அம்மாவின் நினைவுகளை மணமாக்குகிறது. இப்போது வாசம் மாறாத அந்த வீட்டை எடுத்துக்கொண்டு வாடகை வீட்டிற்குக் கவிஞர் செல்வதாக ஒரு உணர்வு குவியலை நம்மிடம் கனமாய் சமைக்கிறார். இது கிராமத்தில் பூர்வீக வீட்டை விட்டு விட்டு நகரத்தில் வாடகைக்குக் குடியேறும் மனிதர்களின் மனதை அப்படியே பாரமாய் அழுத்தி நிற்கிறது. அடுத்து "காணுதல்" என்னும் தலைப்பில் உள்ள இறுதி வரிகள் நம்மை ஜென் நிலைக்கே இழுத்துச் செல்கிறது.

இன்னும் ஒரு இடத்தில் "அம்மாவின் பூனை" எனும் தலைப்பில் உள்ள இந்த

கவிதையைப் படிக்கும் போது இதுதான் புத்தகத்தின் தலைப்பாக நம்மிடம் உயிர்ப்பாய் பேசுகிறது . "பூரணம்" எனத் தொடங்கும் அந்த பூனையின் பெயர் கவிஞரின் அம்மாவிற்கும், அப்பூனைக்கும் இருக்கும் வெளிப்படுத்த இயலாத ஒரு அன்பின் பிணைப்பை அவர்கள் பேசிக்கொள்ளும் "மியாவ்கள்" பாஷைகளின் மூலம் உணர்ந்து கொள்ள முடிகிறது. பாரதி சொன்ன "அன்பின் உயர்நிலை" மிகவும் அழகாக அந்த அம்மாவிற்கும், பூனைக்குமான உறவினில் வெளிப்படுகிறது இது ஒரு கவிதையாக இல்லாமல் நடந்த ஒரு நிஜத்தின் பிரதிபலிப்பாக வரிகள் நம்மிடையே கதையாயாடுகிறது,

மெல்ல அவள் மடி சாய்ந்த பூரணம்
பின் எந்த அசைவும் இன்றி.......பரிபூரணமானது

இறுதியில், அம்மாவின் மடியிலேயே அந்த பூனை ஒரு நாள் அசைவின்றி மரணிக்கிறது. அதை அழுத்தமாய் அதன் அன்பியலை "பரிபூரணமானது" எனும் ஒற்றைச் சொல்லில் கவிஞர் முடித்து விடுகிறார் அதற்குப் பின்பு தான், படிக்கும் வாசகனின் மனதை வேறு உலகிற்குத் திருப்பி பயணிக்க வைக்கிற இந்த கவிதை மனதின் உள்ளே அடர்த்தியை அழுத்தமாக்குகிறது.. "அந்த அறையில் யாரும் இல்லை" அப்படியே மூத்த கவிஞர் நகுலன் அவர்களின் கவிதையைப் படித்தால் என்ன உணர்வு இருக்குமோ அப்படிப்பட்ட ஒன்றை நம்மிடம் மனதில் வரிகளாய் பின்னுகிறார் கவிஞர்.
.

கவிஞர் அதிரன்

இது மட்டுமல்ல அவசர உலகில் நாம் படித்துச் செல்லும் இரண்டு அல்லது நான்கு வரிகளுக்குள், உணர்வுகளின் குவியல்களைக் குறுங்கவிதையில் மிக எளிதாக வரிகளாய் விதைக்கிறார். அதில் ஒன்று ,

பெருமை கொள்
நீ பாரதியின் செல்லம்மாள் என்றேன்
உண்மை சொல் நீ பாரதியா? என்றாள்
எங்கோ வலித்தது
எனக்கு!

அவருக்கு மட்டும் அல்ல படிக்கும் நமக்கும் தான் மனதை என்னவோ செய்கிறது .

"மெல்ல விழுங்கையில்" எனும் வரும் தலைப்பில் சோன்பப்படிக்காரனின் மணி ஓசை கேட்கும் போதெல்லாம் ரீங்காரத்தில், கவிஞர் மட்டுமல்ல நமக்கும் துள்ளிக் குதித்துத் துளிர்க்கும்,மனதிற்குள் தூர்ந்து போன பால்யத்தின் ஏதோ ஒன்றைக் கொஞ்சம் மனதில் நினைக்க வைத்து வரிகள் நெகிழ வைக்கிறது. இதே போல் எத்தனையோ கவிதைகள் அன்றாடம் எல்லோரும் கடந்து செல்லும் சிறு நிகழ்வின் அனுபவங்களை, மிகவும் யதார்த்த உணர்வுடன் கொஞ்சம் நின்று

படித்துவிட்டு, நம்மைக் கொஞ்சம் கடந்த கால உலகிற்கு இழுத்துச் சென்று ஈர நினைவுகளில் நனைய வைக்கிறது.

கரை முழுவதும்
நிறைந்து கிடக்கின்றன
மலை பற்றிய
நதி எழுதிய
ஹைக்கூக்கள்

என்ற வரிகளை வாசிக்கும் போது தலைப்புக்கு ஏற்ப வாழ்வின் அனுபவங்கள் "கூழாங்கற்களாய்" நம்மையும் நகர வைக்கிறது.

ஒருவருக்கொருவர் பேசாமலே நகரும் தொழில்நுட்ப உலகின் "மாற்றம்" மனிதர்களின் மன உணர்வுகளை மிகவும் சுருக்கி விட்டது என்பதாக இத்தலைப்பை வாசிக்கும் போது, ஆமாம் நிதர்சனம் தானே என நம்மைக் கவிஞர் தலையாட்டவைக்கிறார். இப்படி வழியெங்கும் அனுபவத்தின் சாரல்களை விரல்களைப் பிடித்து மிக அழகாக வரிகளில் தூவி இருக்கிறார் . கவிதைகளால் இத்தனை அழகாக எதார்த்த வரிகளில் உள்வாங்கி வாசிப்பவர்களை உறைய வைக்க முடியுமா என்ற கேள்விக்கு இவரின் கவிதைகள் படிக்கும்போது பதில்களாகத் தருகிறது. இதில் இன்னும் நிறைவாக, நிறையக் கோணங்களில் கவிதைகளைப் பிரவேசித்துள்ளார். அத்தனை வரிகளிலும் நானே எழுதி விட்டால் புத்தகத்தில் படிப்பதற்கு உங்களுக்கு மிச்சம் வேண்டும் அல்லவா அதைப் புத்தகத்தில் படித்துப் பாருங்கள்



இதற்கு அணிந்துரை எழுதிய மதிப்பிற்குரிய டாக்டர் வ. வே. சுப்பிரமணியன் அவர்கள் தமக்குரிய அழகிய ரசனைகளில் வரியாகத் தந்து நம்மிடம் பேசுகின்றார் . மதிப்பிற்குரிய பாலசுந்தரம் அவர்களும் வண்ண பார்வைக்குள் வரிகளை நமக்குக் காட்சியாக்குகிறார். அதிரன் என்கிற கவிஞரின் மன இயக்கங்களின் ஊடே மின்மினிப் பூச்சிகளின் ஒளிர்தலாய், கவிதையின் வரிகள் நம்மிடம் அழகாக மிளிர்கின்றது, இந்த புத்தகத்தை குவிகம் பதிப்பகம் வெளியிட்டுள்ளது. மிக அழகான அட்டைப்படம் கனலி என்கிற ஓவியரால் மிக நேர்த்தியாக வண்ணமாகி உள்ளது. இதுதான் கவிஞருக்கு முதல் புத்தகம் என்பதைப் பார்க்கும் பொழுது அந்த கவிதைகளில் இருக்கக்கூடிய ஒவ்வொரு கருவின் வரிகளும் வாசிக்கும் போது, அடர்த்தியாக நம்ப முடியாமல், நம்மைப் பிரமிக்க வைக்கிறது.

புள்ளிவிவரங்களுக்குள்ளிருக்கும் புதிர்கள்



முனைவர் ச.அய்யம்பிள்ளை
மேனாள் பேராசிரியர், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி)

ஒருவர் புள்ளிவிவரங்களோடு பேசினால், அவர் உண்மையைத்தான் சொல்கிறார் என்று பொதுவாக மக்கள் நம்புவதாக இன்றும் தெரிகிறது. இந்தச் சூழலைப் பயன்படுத்தி, பலர், புள்ளிவிவரங்களோடு பல கட்டுக்கதைகளையும் விடுவதை இப்போது அதிகமாகக் காணமுடிகிறது. அதுவும், பலவகையான ஊடகங்கள் வந்துள்ளதைப் பயன்படுத்திப் பலர் பலவகையான கட்டுக்கதைகளை அவிழ்த்துவிடும் இன்றைய நிலையில், உண்மையை அறிவது கடினமாக இருக்கிறது. பெரும்பான்மையான சாதாரண மக்களுக்கு உண்மை தெரியாமலேயே போகிறது.

புள்ளிவிவரங்களைக் கொண்டு உண்மைகளையும் கூறலாம்; உண்மைகளைத் திரித்தும் கூறலாம் என்பதுதான் நிதர்சனமான உண்மை. எனவே, தங்கத்தை உரசிப் பார்த்து வாங்குவதைப் போல, ஒருவர் சொல்வதையும் அப்படியே நம்பிவிடாமல், பல கோணங்களில் இருந்தும் ஆராய்ந்து பார்ப்பதே சிறந்தது. பொய்யான செய்திகளை உண்மை என நம்பி ஏமாந்து போனவர்கள், ஏமாந்து போகிறவர்கள் ஏராளம். இன்று மின்னணுத் தகவல்கள் மூலம் பலரை ஏமாற்றிப் பணம் சம்பாதிப்பதை, ஒரு பெரிய தொழிலாகக் கொண்டு பிழைப்பவர்கள் பலர். பல அரசியல்வாதிகள் பொய்களைப் புள்ளிவிவரங்களோடு கூறி, மக்களை ஏமாற்றி, அதிக வாக்குகள் பெற்று வெற்றிவாகை சூடுவதையும் இன்று பரவலாகக் காணமுடிகிறது அல்லவா?

தற்போது அரசில், பதவியில், பொறுப்பில் உள்ளவர்கள், தாம் ஆளும் மாநிலமோ, நாடோ மிகச் செழிப்பாக இருக்கிறது என்றும், மிக வேகமாக வளர்கிறது என்றும் புள்ளிவிவரங்களோடு சொல்லி, மக்களை நம்பச் செய்ய முயல்கிறார்கள். முன்பைவிட, இப்போது, இது அதிகமாகவே நடந்து வருகிறது. அப்படிச் செய்வதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். பலர் உண்மையை அறிவதில்லை; சிலர் உண்மையை அறிய முயல்வதில்லை; சிலரால் உண்மையை அறிய முடிவதில்லை; சிலர் உண்மையை அறிந்தும், ஏதோ ஓர் அச்சத்தால் அல்லது ஏதோ ஒரு பலனை அடைவதற்காகப் பொய் சொல்லவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார்கள்; சிலர், திட்டமிட்டே, தொடர்ந்து புள்ளிவிவரங்களைத் திரித்துக் கூறி, அவர்கள் கூறுவதைக் கேட்பவர்களை ஏமாற்றிப் பலன் அடைகிறார்கள். .

நம் நாட்டைப் பற்றிப் பேசும்போது பலர் பலவிதமான வித்தியாசமான கருத்துக்களை, அவர்களுக்கு ஏற்ற, அவர்களே தயாரித்த புள்ளிவிவரங்களோடு சொல்கின்றனர். அவற்றை நம்புகிற, சுயமாக சிந்திக்கிற மக்களுக்குத் தெளிவு கிடைப்பதைவிட, குழப்பமே கூடி வருகிறது.

எடுத்துக்காட்டாக, நிதிநிலை அறிக்கையில், வளர்ச்சித் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணம் ரூ 140 கோடி என்று ஆளும் கட்சியினர் சொல்லி, இது ஏராளம், தாராளம் என்று வர்ணிப்பார்கள். அதையே, நம் மக்கள்தொகை 140 கோடியாக இருப்பதால், ஒரு நபருக்கு ஓர் ஆண்டுக்கு வெறும் ஒரு ரூபாய்தான், இது ஒரு பெரிய தொகையா? இந்த ஒரு ரூபாயை வைத்து என்ன செய்யமுடியும்? என்று எதிர்கட்சியினர் சொல்லி எள்ளி நகையாடுவர். மொத்தமாகச் சொன்னால், பெரியதாகத் தெரியும்; தலைவீதத்தில் சொன்னால், அற்பமாகத் தெரியும். இதுபோல், பல நேரம் நம் நாட்டில் நடந்திருக்கிறது, நடக்கிறது.

கடந்த முப்பத்தைந்து ஆண்டுகளாகவே, குறிப்பாகத் தனியார்மயம், தாராளமயம் மற்றும் உலகமயம் கொள்கைகளை அடக்கிய புதிய பொருளாதாரச் சீர்திருத்தங்களை அமல்படுத்தியதில் இருந்து, அவ்வப்போது இருந்த ஒன்றிய அரசுகள் இந்தியாவின் ஒட்டுமொத்த வளர்ச்சியையும், மாநில அரசுகள் மாநிலங்களின் வளர்ச்சியையும் போட்டி போட்டுக்கொண்டு புள்ளிவிவரங்களைக் கூறி பாராட்டி வருகின்றன. இப்போது, ஊடகங்களில் அது கொஞ்சம் அதிகமாகவே காணப்படுகிறது.

மாநிலங்களிலோ, இந்தியாவிலோ முன்னேற்றம் இல்லை என்று நிச்சயம் சொல்ல முடியாது; அப்படி யாரும் சொல்வதாகத் தெரியவில்லை. உத்தர் பிரதேஷ், மத்ய பிரதேஷ், இராஜஸ்தான், பீகார் போன்ற சில பின்தங்கிய மாநிலங்கள் உட்பட, நாம் பல மாநிலங்களிலும், துறைகளிலும் எவ்வளவோ மேம்பாடு அடைந்து இருக்கிறோம். ஆனால், அரசுகளால் வெளியிடப்படும் புள்ளிவிவரங்கள் வளர்ச்சியை மிக அதிகப்படுத்தி காட்டுகின்றன. அந்தப் புள்ளிவிவரங்களின் நம்பகத்தன்மை சற்றுக் குறைவாகவே உள்ளது. அவரவர் செயல்பாடுகளை, சாதனைகளைப் பாராட்டுவதற்குப் பொருத்தமான, பொருத்தமாகப் புள்ளிவிவரங்கள் தயாரிக்கப்படுகின்றனவோ என்கிற ஐய்யப்பாடு பலரிடம் காணப்படுகிறது.

கடந்த காலத்தில் கொண்டுவரப்பட்ட கொள்கை மாற்றங்களால், பல தரப்பட்ட மக்கள் பட்ட வேதனைகள், அவலங்கள் மற்றும் இன்றைக்கு உள்ள துயரமான நிலைமைகள் சொல்லப்படாமல் மறைக்கப்படுகின்றன. இதற்குக் காரணம்; மக்களிடம் பீதியைக் கிளப்பிவிட வேண்டாம்; நம்பிக்கையைக் கொடுக்கவேண்டும் என்ற நல்ல நோக்கமாகவும் இருக்கலாம். அல்லது, திட்டமிட்டே மக்களை ஏமாற்றும் முயற்சியாகவும் இருக்கலாம்.

பண மதிப்பழிப்பு

எடுத்துக்காட்டாக, நவம்பர் 8, 2016 அன்று ரூ.500 மற்றும் ரூ.1,000 ஆகிய பணத்தாள்களின் மதிப்பை அழித்து, நம்மிடம் இருந்த பணத்தைப் பயன்படுத்த முடியாமல் செய்து, பின்னர் ரூ2,000 மதிப்புள்ள பணத்தாள்களை வெளியிட்டு, பிறகு அதையும் வங்கிகளிடம்

ஒப்படைத்துவிடுங்கள் என அறிவித்து, ஏகப்பட்ட குழப்பங்கள் நடந்தன. அந்தக் குழப்பங்களால், மக்கள் பட்ட சிரமங்கள் ஏராளம்; ஆனால் அவை முழுவதுமாக வெளியிடப்படவில்லை. மாறாக ஏதேதோ பெரிய பலன்களை அடைந்துவிட்டதாகப் பொய்யான புள்ளிவிவரங்களைக் கூறி மக்களை நம்பச் செய்தனர்; மிகுதியான மக்களும் நம்பிவிட்டனர்.

பண்டங்கள் மற்றும் பணிகளின் வரி

அதுபோலத்தான் பண்டங்கள் மற்றும் பணிகளின் வரிவிதிப்பிலும் (Goods and Services Tax: GST) நடந்தது. நல்லது செய்வதாகக் கூறி, முதலில் அதிகமான வரிச்சுமையை மக்கள் தலையில் ஏற்றி, மக்களை அவதிக்குள்ளாக்கி, பல சிறு தொழில்களை நசுக்கி மூடச் செய்து, நடந்த அவலங்களை வெளியே தெரியாமல் மறைத்து, பின் அதை மிகக் காலதாமதமாகப் புரிந்து, எட்டு ஆண்டுகளுக்குப் பின்னர் சமீபத்தில் அந்த வரி விகிதங்கள் குறைக்கப்பட்டன.

மொத்த தேசிய உற்பத்தி

உற்பத்தி, வருமானம், செலவு ஆகியவையே மனிதர்களின் வாழ்க்கைத் தரத்தையும் வாழ்வியல் தரத்தையும் நிர்ணயிப்பதாக கருத்துருவாக்கம் செய்து, அவற்றை வைத்தே ஒரு நாடு வளர்ந்த நாடா அல்லது வளர்ந்துவரும் நாடா எனப் பிரிக்கிறார்கள். இயற்கை வள இழப்புக்கள், சமூக வலிகள், மாசுப்படுத்துதல், மக்கள் படும் துயரங்கள் போன்றவை கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுவதில்லை. எனவே, மொத்த தேசிய உற்பத்தியின் அளவில் உலக நாடுகளில் நாம் மூன்றாவது இடத்தில் இருக்கிறோம்; கூடிய விரைவில் நாம் வல்லரசு ஆகிவிடுவோம்; இந்தியா ஒளிர்கிறது; இந்தியாவின் வளர்ச்சியைக் கண்டு பிற நாடுகள் அஞ்சுகின்றன என்றெல்லாம் கூறப்படுகிறது. மக்களும் நம்பிக்கையோடு உள்ளனர். மக்களுக்கு நம்பிக்கையைக் கொடுப்பது அவசியம்தான். ஆனாலும், உண்மையை மறைக்கக்கூடாது அல்லவா?

மக்கள்தொகையில் நாம் உலகிலேயே முதல் இடத்தில் இருக்கிறோம். எனவே, மொத்த தேசிய உற்பத்தியின் அளவிலும், இயற்கை வளங்களை மேம்படுத்துவதிலும், சமூகப் பிரச்சனைகளையும் மாசுக்களையும் குறைப்பதிலும் நாம் முதல் இடம் பெறவேண்டும். அதுதான் மகிழ்ச்சியைத் தரும். ஆனால், இப்போது அப்படி இல்லை. நம்மை விட மிகச் சிறிய நாடுகள் கூட நம் தேசிய வருவாய் அளவுக்குச் சமமாக உற்பத்தி செய்கின்றன; ஒப்பிட முடியாத அளவிற்கு, கட்டமைப்புக்களில் சிறப்பாக இருக்கின்றன.

உலகச் சந்தையில் நம் ரூபாயின் மதிப்பு, தொடர்ந்து சரிந்துகொண்டே இருக்கிறது. அதைத் தவிர்க்க இந்திய மைய வங்கி ஏராளமான (3,800 கோடி அமெரிக்க டாலர் அல்லது 3,42,000 கோடி இந்திய ரூபாய்) அமெரிக்க டாலரை சமீபத்தில் பணச்சந்தையில் இறக்கியது (The New Indian Express, 27.11.2025, p.10). தலை வீத வருமானம், கல்வி, காற்று, தண்ணீர் ஆகியவற்றின் தரம், மருத்துவ வசதிகள், ஆரோக்கியம், வறுமை, பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், ஊழல் போன்றவற்றின் புள்ளிவிவரங்களைப் பார்த்தோமானால், நாம் சுமார் நூறு நாடுகளை விடப் பின்தங்கியே உள்ளோம் என்பதுதான் உண்மை. சில,

மக்கள்தொகையில் பெரிய மாநிலங்களில் உள்ள தலைவீத வருமானத்தைவிட அமெரிக்காவின் தலைவீத வருமானம் நூறு மடங்கு அதிகமாகும். இவற்றையெல்லாம் மறைத்துவிட்டு, இந்தியா உலகிலேயே மூன்றாவது சிறந்த நாடாக உயர்ந்துவிட்டது என்றும் வல்லரசு நாடாக ஆகிவிட்டது என்றும் சில பொருந்தாத புள்ளிவிவரங்களோடு பொய் சொல்வது சரியா?

ஒரு நாட்டின் சாதனைகளை, மொத்த தேசிய உற்பத்தியோடு, தலைவீத வருமானம், அந்த நாட்டில் நிலவுகிற சமூக, பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், சமூக, பொருளாதாரக் குற்றங்கள், இயற்கை வளங்கள், அங்கு கிடைக்கும் இலவசப் பண்டங்கள் மற்றும் பணிகள் ஆகியவற்றையும் கணக்கில் கொண்டு மதிப்பிடுவதே சரியான முறையாகும். ஏனெனில், இவை அனைத்தும் சேர்ந்துதான், அங்கு வாழும் மக்களின் மேம்பாடு, அமைதி, உடல் மற்றும் மன நலனை நிர்ணயிக்கின்றன; வெறும் பொருள்கள் மட்டும் அல்ல.

ஆனால், இன்றைக்கு சொல்லப்படுகிற தேசிய வருவாய்க் கணக்கில் இவை எல்லாம் சேர்க்கப்படுவதில்லை. அரசுக்குக் கணக்கில் வந்த பண்டங்கள் மற்றும் பணிகளின் சந்தை மதிப்பு மட்டுமே கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகிறது; வராதது ஏராளம், ஏராளம்.

எனவே, நம் நாட்டு வருமானம் குறைத்தே மதிப்பிடப்படுகிறது எனலாம். முதலாவதாக, நம் நாட்டில் பணம் சம்பாதிப்பதற்காக வேலைக்குச் செல்லும் பெண்களின் விகிதாச்சாரம், வளர்ந்த நாடுகளோடு ஒப்பிடும்போது, மிகக் குறைவு. சுமார் எழுபத்து ஐந்து விழுக்காடு பெண்கள் அவர்களின் குடும்பத்தினருக்கு இலவச சேவைகளை வழங்கிவருகின்றனர். இந்தச் சேவைகள் குடும்ப, சமூக நலனுக்கு மிகவும் தேவை என்பதில் ஐயமில்லை. ஆனாலும், இந்தச் சேவைகளின் சரியான பண மதிப்பைக் கணக்கிடுவதில் சில பிரச்சனைகள் இருப்பதால், அவை தேசிய வருவாய்க் கணக்குகளில் சேர்க்கப்படுவதில்லை. இதையும் சேர்த்தால், நம் தேசிய வருவாய் இப்போதுள்ளதைவிட பத்து விழுக்காடாவது அதிகமாக இருக்கும். இரண்டாவதாக, வளர்ந்த நாடுகளோடு ஒப்பிடும்போது, நம் நாடு விவசாயம் செய்வோரையும் சிறு தொழில்கள் செய்வோரையும் அதிகாமகக் கொண்ட நாடு. விவசாயம் மற்றும் சிறு தொழில்கள் மூலம் கிடைக்கிற வருமானத்தில் அதிகப் பங்கு தேசிய வருவாயில் சேர்க்கப்படுவதில்லை. இது ஒரு பத்து விழுக்காடு எனக் கொள்ளலாம். மூன்றாவதாக. நம் நாட்டில் வரிக்கும், அரசு மிரட்டல்களுக்கும், அத்துமீரல்களுக்கும் பயந்து, கணக்கில் காட்டப்படாத சொத்தும், வியாபாரமும், வருமானமும் வளர்ந்த நாடுகளோடு ஒப்பிடும்போது, மிக அதிகம். இது ஒரு நாற்பது விழுக்காடு இருக்கலாம். இந்தக் குறைபாடுகளால், நம் தேசிய வருமானத்தின் அளவு குறைவாக இருக்கிறது என்பதும் உண்மையே. மேலே கூறியவற்றைச் சரி செய்து சேர்த்தால், நம் நாட்டின் ஆண்டு வருவாய் இப்போது சொல்லப்படுவதை விட சுமார் இன்னும் அறுபது விழுக்காடு அதிகமாக இருக்கலாம்.

நம் நாட்டின் வருவாயை ஐந்து ட்ரில்லியன் அமெரிக்க டாலராக உயர்த்தப் போகிறேன் என்று நம் அரசியல்வாதிகள் நீண்ட நாட்களாகவே கூறி வருகிறார்கள். இது

முடியாமலேயே போகிறது., ஏனெனில், நம்முடைய நாட்டின் உற்பத்தி அளவு உயர்ந்தாலும், நம்முடைய ரூபாயின் மதிப்பு அமெரிக்க டாலருக்கு எதிராகத் தொடர்ந்து சரிந்து கொண்டே இருப்பதால், நம்முடைய நாட்டின் வருவாயை அமெரிக்க டாலர் கணக்கில் உயர்த்துவது சிரமமாக உள்ளது.

பணவீக்கம்

அடுத்து, பணவீகத்தைப் புரிவதிலும் சில பிரச்சனைகள் உள்ளன. எங்கு பார்த்தாலும் விலைவாசி உயர்ந்துகொண்டே செல்கிறது என்பதுதான் பொது மக்களின் கவலையாக உள்ளது. மேலே சென்ற பொருள்கள் கீழே வரும்; ஆனால் மேலே சென்ற விலைவாசி கீழே வராது என்பார்கள்.

சில சமயங்களில் (எடுத்துக்காட்டாக, நவம்பர் 2025) பணவீக்கத்தின் அளவு குறைவதாக அரசு கூறுகிறது. பணவீக்கத்தின் அளவு குறைகிறது என்றால், விலைவாசி குறைகிறது என்று மக்கள் பொதுவாக நினைக்கிறார்கள். அது அப்படி அல்ல; விலைவாசி அதிக வேகத்தில் உயர்ந்த நிலை மாறி, இப்போது குறைவான வேகத்தில் உயர்கிறது என்றே பொருள்.

அடுத்ததாக, இந்தியா முழுக்க, பல வகையான பொருள்களின் விலைகளை பல இடங்களில் சேகரித்து அவை ஒவ்வொன்றிக்கும் வெவ்வேறு வகையான முக்கியத்துவம் (weights) அளித்து பணவீக்கத்தின் அளவு மதிப்பிடப்படுகிறது. மக்கள் அனைவரும் ஒரே மாதிரி செலவு செய்வதில்லை. மக்களின் வருமானம், பழக்கம், வழக்கம், நுகர்வுமுறை ஆகியவற்றைப் பொறுத்து அவர்கள் வெவ்வேறு பொருள்களில் செலவிடும் பணத்தின் அளவு வேறுபடலாம். இதனால், விலை ஏற்றத்தின் தாக்கம் பலருக்கும் பலவாகத் தோன்றலாம். எடுத்துக்காட்டாக, வைரம், தங்கம் போன்ற பொருள்கள் மிகவும் அத்தியாவசியம் என்று சிலர் கருதினாலும், அவற்றின் விலை ஏற்றத்தை பணவீக்கக் கணக்கில் எடுத்துக்கொள்வதில்லை. மாறாக, பெட்ரோலின் விலை ஏற்றம் பணவீக்கத்தின் அளவைப் பாதிக்கும்; ஏனெனில், பெட்ரோலின் விலை ஏற்றம் பல வகையான பொருள்களின் விலை ஏற்றத்திற்குக் காரணமாக இருக்கிறது; உணவுப் பொருள்களின் விலை ஏற்றம் அநேக மக்களைப் பாதிக்கும். எனவே, உணவுப் பொருள்களின் விலை பணவீக்கக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகிறது. நம் நாட்டில், விவசாயப் பொருள்களின் உற்பத்தி அளவை இன்னும் இயற்கையே கட்டுப்படுத்துகிறது. போதுமான மழை இருந்து, நல்ல அறுவடை இருந்தால், உணவு தானியங்கள், காய்கறிகள், பழங்கள் ஆகியவற்றின் விலைகள் குறையும்; பணவீக்கத்தின் அளவும் குறைவாக இருக்கும்; ஆனால் ஆள்பவர்கள் பணவீக்கத்தைக் குறைத்துவிட்டதாக பெருமை பேசுவார்கள்.

மேலே கூறியவற்றைப் போல, இன்னும் பல செய்திகள் தவறான புள்ளிவிவரங்களோடு திரித்துக் கூறப்படுகின்றன, அல்லது புரிந்துகொள்ளப்படுகின்றன. அவற்றையும் மக்கள் அறியவேண்டும். எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு (திருக்குறள், அறிவுடைமை, 423).

Murukan and Veriyaatam

Akshayan
Australia

Tamil literature splits the landscapes of the world into five. Each region has a highly specialized grammar associated with it, including categories such as foods, music, flora, fauna and the seasons proper to each landscape. This detailed categorization, which can be seen in even the oldest of Tamil texts, also explains which Gods belong to each landscape:

- Mullai – Forest region – Maayon (now identified with Vishnu)
- Kurinchi – Mountainous region – Ceyon (Murukan)
- Mullai – Agricultural region – Ventan (now identified with Indiran)
- Neytal – Seashore region – Varunan
- Paalai – Arid region – Kottravai (now merged into the identity of Parvati/Kali)

Each landscape also has a categorization of which emotions should be associated with it. Union, and the pursuit of union occurs in the mountainous region for which the God is Murukan. However, this version of Murukan in Tamil love poetry is quite different to the typical form we see in religious literature.

For example, a poem from the Kurunthokai. Here the hero and heroine's secret love has reached a breaking point. It is about to become the talk of the town. The continued separation of the two lovers is clearly showing in the heroine's depressed mood. As she loses her lustre and charm, her mother starts getting worried.

Not knowing the true cause of her pain, the mother approaches the Velan, a spear wielding priest who can channel the spirit of Murukan. Veriyaatam (frenzied dance) and the accompanying sacrificial rituals are arranged for the night. The night will then be filled with song, dance and feasting, but most importantly it's all for no purpose. Knowing this, the heroine's confidant says the following to the priest, suggesting the true cause of the damsel's distress:

Spear wielding diviner, wise from worshipping Murukan,
control your temper! – for I have a question to ask.
If you offer many forms of food along with boiled rice,
if you kill the young of the goat
and if you touch the fragrant forehead of my friend,

will those offerings be eaten by the bright garlanded chest
of her lover, from the sky touching mountains?
(Kurunthogai 362)

In Manickavaasagar's Thirukkovaiyaar, we get extra details about the diagnosis of the heroine. In a similar situation the nursing mother, instead of going directly to the Velan, asks for a diagnosis from a priestess. Like the Velan she can also be possessed by the spirit of Murukan. She is seated in a holy place and the divination occurs by throwing paddy seeds in the air. The result is counted in groups of fours. If the count is not even, and a remainder of 1, 2 or 3 are left over, the cause of the heroine's illness is determined to be possession by Murukan. See how this scene is handled in the Thirukkovaiyaar:

With her whose voice is as sweet as the kuyil He shares His form,
Sivan, Lord of Cittrambalam, whose nature is indescribable.
Behold! Here is the peacock mounted by His valorous son.
Here is His rooster flag, and the sharp Spear,
which destroyed the demon clan.
Look – here is His form, spread amongst the paddy seeds.
(Thirukkovaiyaar 18.2o)

The first two lines describe the Ammai-Appar form where half of Sivan's body is occupied by Parvati. The rest describe Sivan's son – Murukan, as the diviner shows the onlookers that the pattern of the paddy seeds she tossed had formed images of Murugan's insignia – his vehicle the peacock, his banner the rooster and his weapon the spear.

Finally, the form of Murukan himself appears, showing beyond doubt that the girl is possessed by Murukan, leading to the mother arranging for a veriyaatam. This is a very interesting poem, where the diviner, clearly knowleadgeable about the secret love intentionally misleads the heroine's family to protect the young couple.

To expel the sickness, the Velan is arranged for, and the heroine is plunged into a predicament. If the frenzied dance goes ahead and the heroine does not show any changes, the talk of the town will surely shift to what else could be causing her distress. Eventually the secret love will be public knowledge.

If on the other hand the sacrifices do somehow work in curing the heroine, she would have to live with the knowledge that her love could not endure even this situation. Therefore, the festivities of the night must be stopped by any means possible:

In confusion the good people of this city crowd together –
choosing not to protect the head of the goat.
What is it that they intend to accomplish by frenzied dance?
To calm the damsel, who pines from her separation
one needs only to say the name hailed by Vishnu:
O faultless Lord of Senthoor,
where conch shells roar in lotus ponds!
(Kantar anthaathi – 24)

Such an episode also finds a home in the epic tale of the Silappathikaaram. I avoid recounting the whole story and pick up at the end of Madurai Kaandam. After Kannaki causes the city of Madurai to be engulfed by flame, she treks up to Vanji, ruled over by the Chera king Cenguttuvan. There, 14 days after Madurai was burned, she rejoins her wrongly executed husband, who descends to earth in a divine craft manned by Indiran. They are both then taken up to the celestial world.

Seeing this sight, the young girls of Vanji are frightened and in awe and now take Kannaki to be their village deity. They celebrate in style: sounding drums, lighting fragrant incense, and sprinkling flowers, all in accompaniment to the song and dance of the kurinchi (mountain) landscape. Murukan therefore naturally makes an appearance here too. First the girls sing the glory of his weapon, the spear:

Beautiful faces six in number and twelve hands,
He with no comparison – O this is the spear he wields!
*Mounting the peacock and praised by the King of the Heavens **
He vanquished the demon foes – O this is the spear he wields!
(Silappathikaaram – Kunrak kuravai 9)
** Indiran*

Once again the theme of veriyaatam and the Velan comes up, although Ilango Adikal handles this with much more vigour and energy compared to the previous examples.

The heroine first speaks to her maid, where here the "lord of the mountain" refers to her lover not to Murukan:

O good friend, adorned with choice jewels,
this is cause for laughter.
The Velan is truly a fool
as he comes to cure the sickness given by the chest of my lover –
lord of this mountain.
The Velan comes, yet even more foolish
would be Murukan adorned with kadappa garland
if He too comes to cure my sickness!
(Silappathikaaram – Kunrak kuravai 14)

The maid then replies to the heroine:

To the courtyard where the spear wielding priest will dance,
*the son of the God seated under the banyan tree**
*will come with bejewelled Valli**, riding the blue peacock –*
and when he comes –
we shall seek his blessings to marry the lord of the mountain!
(Silappathikaaram – Kunrak kuravai 15)
** Sivan, whose son is Murukan*
*** Valli is the consort of Murukan, and daughter of the mountain tribe*

எட்டுத்தொகைப் பத்துப்பாட்டுத் தொகுப்பு வெண்பாக்கள் ஒரு விளக்கம்

முனைவர் மு. முத்துவேலு
பேராசிரியர், இயக்குநர், உலகளாவிய சட்டத் தமிழ் மையம்
விநாயகா மிஷன்ஸ் சட்டக் கல்லூரி, சென்னை வளாகம்.

தமிழில் பல வெண்பாக்கள் மரபு வழியாகச் சொல்லப்பட்டு நம் மனத்தில் நின்று வருகின்றன. அவை தமிழ் இலக்கியங்களில் சிலவற்றைத் தொகுத்துக் கூறுகின்ற வகையில் அமைந்துள்ளன. அவற்றுள் எட்டுத்தொகைப் பத்துப் பாட்டு நூல்களைத் தொகுத்துத் தரும் வெண்பாக்கள் குறிப்பிடத்தக்கவை.

தமிழில் சங்க இலக்கியங்கள் என்பவை பாட்டும் தொகையும் என்று வழங்கப்படுகின்றன. பாட்டு என்பது பத்துப்பாட்டையும் தொகை என்பது எட்டுத்தொகையையும் குறிப்பனவாகும். அந்த வகையில் எட்டுத்தொகை நூல்களைத் தொகுத்து வழங்குகிற ஒரு பழம் வெண்பா இன்றைக்கு எல்லா இலக்கிய வரலாற்று நூலாசிரியர்களாலும் எடுத்தாளப்பட்டு வருகிறது. அந்த வெண்பாவை நாம் அனைவரும் அறிவோம். அது பின்வருமாறு அமைகிறது:

> நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்
> கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம் புறமென இத்திறத்த எட்டுத் தொகை

என்பது அந்த வெண்பா.

எட்டுத்தொகை நூல்களைத் தொகுத்து வழங்கும் வெண்பாவில் அமைந்திருக்கும் நூல்களின் வரிசை முறை எந்த முறைமையில் அமைக்கப்பட்டுள்ளது என்பதும், எந்தக் காரணங்களின் அடிப்படையில் அமைந்திருக்கிறது என்பதும் ஆராய வேண்டிய ஒன்றாகிறது. அவ்வாறு ஆய்கையில் மூன்று கருத்துக்கள் நம் முன் தோன்றுகின்றன.

ஒன்று இந்த நூல்களில் அமைந்திருக்கும் பாடல்களின் எண்ணிக்கையின்படி இவை அமைந்திருக்க வேண்டும். அந்த வகையில் பார்க்கின்ற பொழுது எட்டுத்தொகை நூல்களில் மிகக் குறைந்த பாடல்களை உடையது பரிபாடல் 22; அதற்கு அடுத்தபடியாக 80 பாடல்களைக் கொண்டது பதிற்றுப்பத்து; அதற்கு அடுத்தபடியாக 150 பாடல்களைக் கொண்டது கலித்தொகை. அதற்கு அடுத்தபடியாக 400 பாடல்களைக் கொண்டவை நற்றிணை; குறுந்தொகை; அகநானூறு; புறநானூறு; அதற்கடுத்தபடியாக நிறைவாக 500

பாடல்களைக் கொண்டது ஐங்குறுநூறு.எனவே இந்த அடிப்படையில் அமைந்திருக்குமானால் அந்த வெண்பா பரிபாடலில் தொடங்கி ஐங்குறுநூற்றில் முடிந்திருக்க வேண்டும். ஆனால் நூல்களின் பாடல்களின் எண்ணிக்கையை வைத்து இந்த வரிசை முறை அமைந்திருக்கவில்லை என்பது தெரிய வருகிறது.

அடுத்ததாக தொகை நூல்கள் அமைந்திருக்கும் ஆசிரியப்பாவின் அடிவரையறை எனப்படும் அடிகளின் எண்ணிக்கையை வைத்து இந்த வரிசை முறை அமைந்திருக்கிறதா என்று எண்ணிப் பார்ப்போம். அடிகளின் மிகக் குறைந்த அளவான மூன்றில் இருந்து ஆறு அடிகளைக் கொண்ட ஐங்குறுநூறு முதலில் இடம்பெற்றிருக்க வேண்டும். அதற்கடுத்து ஆறு முதல் ஒன்பது அடிகளைக் கொண்ட குறுந்தொகை வர வேண்டும். அதனைத் தொடர்ந்து ஒன்பது முதல் 12 அடிகளைக் கொண்ட நற்றிணை வரவேண்டும். அதற்குப் பின்னர் 13இல் இருந்து 31 அடிகளைக் கொண்ட அகநானூறு வந்திருக்க வேண்டும். இதைத்தொடர்ந்து நீண்ட பாடல் அடிகளைக் கொண்ட பரிபாடலும் பதிற்றுப்பத்தும் கலித் தொகையும் கடைசி வரிசையில் அமையலாம்.

ஆனால் இந்த வகையிலும் இந்த வரிசை முறை அமையவில்லை. ஒரு வேலை இந்த நூல்கள் தோன்றிய காலத்தின் அடிப்படையில் அமைந்திருக்கின்றனவா என்று நோக்கலாம். காரணம் எட்டுத்தொகை நூல்கள் அனைத்தும் ஒரே காலத்தில் தோன்றியவையாகத் தெரியவில்லை. பாடல்களின் நடை, சொல்லாக்கம்,சொற்கட்டு, சொற்செறிவு ஆகியவற்றை வைத்து நோக்கும் போது அகநானூறு, ஐங்குறுநூறு முதலியவை காலத்தால் முந்தியவை.எனவே அவை தொகுப்பு முறையில் முதலில் இடம் பெற்றிருக்க வேண்டும். கருத்தாலும் கவிதை நடையாலும் இடம்பெற்றிருக்கும் புராணச் செய்திகளையும் வைத்து நோக்கும்போது பரிபாடலும் கலித்தொகையும் காலத்தால் பிந்தியவையாக இருக்க வேண்டும் என்பது அறிஞர் முடிவு. எனவே அந்த வகையில் பார்க்கும்பொழுது பரிபாடலும் கலித்தொகையும் வெண்பாவின் கடைசியில் இடம்பெற்றிருக்க வேண்டும். ஆனால் ஓங்கு பரிபாடல் என்றும் கற்றறிந்தார் ஏத்தும் கலி என்றும் இவை இந்த வரிசைப்படுத்துகிற பாடலுக்கு நடுவே இடம்பெற்றிருக்கின்றன. எனவே இந்தத்

தொகுப்பு முறையானது இந்த நூல்கள் தோன்றிய காலத்தின் அடிப்படையிலும் அமையவில்லை என்பதும் நன்கு வெளிப்படுகிறது.

அடுத்ததாக இந்த நூல்களைத் தொகுத்தவர் வாழ்ந்த காலத்தையும் தொகுக்கப்பட்ட காலத்தின் அடிப்படையிலும் இந்த வெண்பாவில் இவை வரிசைப்படுத்தப் பட்டிருக்கின்றன என்று எண்ணவும் தோன்றுகிறது .ஆனால் அவ்வாறு எண்ணிப் பார்ப்பதற்கு எண்ணிப் பார்த்து முடிவுக்கு வருவதற்கு நமக்கு வரலாற்றுச் சான்றுகள் எவையும் தெளிவாக அமையவில்லை. இவை அனைத்தும் ஒரே காலத்தில் தொகுக்கப்பட்டனவா அல்லது வெவ்வேறு காலத்தில் தொகுக்கப்பட்டவா அந்தக் காலத்தின் அடிப்படையில் தான் இந்த வரிசை முறை அமைந்திருக்கின்றதா என்று உறுதியாக எடுத்துச் சொல்வதற்கு ஏற்ற வகையில் அல்லது ஏதுவான முறையில் வரலாற்றுக் குறிப்புகளும் நமக்குக் கிடைக்கவில்லை. எனவே அந்த வகையிலான வரிசை முறையையும் நாம் இந்தப் பாடலில் வழியாக அறிந்து கொள்வதற்கு வாய்ப்பில்லை என்று எண்ணத் தோன்றுகிறது.

எனினும் இது, எட்டுத்தொகை நூல்கள் முழுவதையும் படித்த ஒரு தண்டமிழ்ப் புலவர் இயற்றிய பாடல் என்பது தெரிகிறது. அவரது துய்ப்பின் அடிப்படையில் இந்த நூல்களுக்கு அவர் அறிமுகம் வழங்கியிருக்கிறார் என்பதும் புலப்படுகிறது.

ஓங்கு பரிபாடல் என்றும் கற்றறிந்தார் ஏத்தும் கலித்தொகை என்றும் அவர் வழங்கியிருக்கும் அடைமொழிகளைப் பார்க்கும் போது அந்தப் புலவருக்குப் பிற்கால நூல்களில் ஈடுபாடு மிகுந்து இருப்பது தெரிகிறது.மேலும் நல்ல குறுந்தொகை என்றும் ஒத்த பதிற்றுப்பத்து என்றும் அகப்பொருள் நூல் ஒன்றுக்கும் புறப்பொருள் நூல் ஒன்றுக்கும் முறையே அடைமொழி தந்திருப்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

சங்க இலக்கியத்தின் பாடுபொருள் அகமும் புறமும் என்பதைக் குறிப்பால் சுட்டுவதற்காக

அகப்பொருள் நூலான நற்றிணையில் தொடங்கிப் புறப்பொருள் நூலான புறநானூற்றில் நிறைவு செய்து இருக்கிறார் போலும்.

எந்த வகையில் பார்த்தாலும், எட்டுத்தொகை நூல்களுளை எளிதில் நினைவில் வைத்துக் கொள்வதற்கு ஏற்ற வகையில் அருந்தமிழ் வெண்பா ஒன்றை ஆக்கித் தந்த பெயர் தெரியாத அந்தப் பைந்தமிழ்ப் புலவரைத் தமிழ் இலக்கிய வரலாறு என்றும் நினைவில் வைத்துப் போற்றும் என்பதில் ஐயமில்லை.

இந்தப் போலவே பத்துப்பாட்டு நூல்களைத் தொகுத்து வழங்கும் வெண்பாவில் காணப்படும் வரிசை முறை குறித்தும் ஆய்ந்து காண்பதும் ஏற்றதாகும்.

அந்த வெண்பா பின்வருமாறு:

முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரை காஞ்சி _மருவினிய
கோல நெடுநல் வாடை கோல் குறிஞ்சிப்பட்டினப்

பாலை கடாத்தோடும் பத்து.
பத்துப்பாட்டு நூல்களை இவ்வாறு வகைப்படுத்திக் காணலாம்.
ஆற்றுப்படை நூல்கள் 5 அகப்பாடல் மூன்று புறப்பாடல் ஒன்று
அகமும் புறமும் ஒன்று

ஆற்றுப்படை பாடல்கள்:

திருமுருகாற்றுப்படை

பெறுநர் ஆற்றுப்படை

சிறுபாணாற்றுப்படை பெரும்பாணாற்றுப்படை

கூத்தராற்றுப்படை அல்லது மலைபடுகடாம்.

அகப் பாடல்கள்

முல்லைப்பாட்டு குறிஞ்சிப்பாட்டு பட்டினப்பாலை

புறப்பாடல்

மதுரைக்காஞ்சி

அகப்புறப் பாடல்

நெடுநல்வாடை.

பத்துப்பாட்டில் பாடு பொருள் கருதி ஆற்றுப்படை பாடல்கள் அகப்பாடல்கள் புறப்பாடல் அகப்புறப் பாடல் என்னும் இந்த வகையில் தொகுக்கப்பட்டிருக்கலாம்.

அவ்வாறு இல்லாமல் திருமுருகாற்றுப்படை என்றும் ஆற்றுப்படையில் தொடங்கி மலைபடுகடாம் என்னும் கூத்தராற்றப்படையில் இந்தத் தொகுப்பு வெண்பா முடிவடைந்துள்ளது.

அடுத்ததாக அகப்பொருள் பற்றிய பாடல்கள் முல்லைப்பாட்டுக்கு அடுத்து குறிஞ்சிப்பாட்டையும் பட்டினப் பாலையையும் வைக்காமல் இவை மூன்றும் தனித்தனியே அமைந்துள்ளன.

மேலும் புறப்பொருள் பாடல் ஒன்றும்

அகப்புறப் பாடலான நெடுநல்வாடையும் தனித்தனியே அமைந்துள்ளன.

எனவே பாடுபொருள் கருதி ஒத்த பாடுபொருள் உடைய பாட்டுக்களை தனித்தனியே தொகுத்து ஒன்றன் பின் ஒன்றாக அடுக்கி வைத்த முறை இந்த வெண்பாவில் காணப்படவில்லை.

பத்துப்பாட்டு நூல்கள் தோன்றிய காலத்தின் அடிப்படையில் இவை தொகுக்கப்பட்டு இருக்கலாம் என்று எண்ணுவதற்கும் இடம் அளிக்கவில்லை.

ஏனெனில் காலத்தால் மிகவும் பிந்தியதான பன்னிரு திருமுறைகளில் 11ஆம் திருமுறையில் இடம்பெற்று இருப்பதான திருமுருகாற்றுப் படையை முதலில் வைத்து இந்தப் புலவர் பாடி இருக்கிறார்

இது இந்தப் புலவரின் பக்தி நெறி வழிநின்ற முறைமையைக் காட்டுகிறது எனலாம். கால முறைப்படி இந்த வெண்பா பத்துப்பாட்டு நூல்களை தொகுத்திருக்கவில்லை என்பதைத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது.

அடுத்து நிலையில் பத்துப்பாட்டு நூல்கள் ஒவ்வொன்றின் அடிகளின் எண்ணிக்கையை வைத்து இந்த முறை அமைந்திருக்கிறதா என்று பார்க்கலாம் .அந்த வகையிலும் இந்த வெண்பா அமையவில்லை. அவ்வாறு பாடல் எண்ணிக்கை வைத்து அமைந்திருக்க வேண்டும் என்றால் பத்துப் பாட்டில் மிகவும் குறைந்த எண்ணிக்கையான 103 அடிகளைக் கொண்ட முல்லைப்பாட்டு முதலில் இடம் பெற்று இருக்க வேண்டும். அதிக அளவிலான 782 அடிகளைக் கொண்ட மதுரைக்காஞ்சி நிறைவாக இடம் பெற்று இருக்க வேண்டும்.

பத்துப்பாட்டு நூல்களும் அவற்றின் எண்ணிக்கையையும் பின்வருமாறு காணலாம்:

முல்லைப்பாட்டு 103 நெடுநல்வாடை 118 பொருநராற்றுப்படை 248 குறிஞ்சிப்பாட்டு 261 சிறுபாணாற்றுப்படை 269 பட்டினப்பாலை 301 திருமுருகாற்றுப்படை 317 பெரும்பாணாற்றுப்படை 500 மலைபடுகடாம் 583 மதுரைக் காஞ்சி 782.

இந்த வகையில் பார்த்தாலும் இவை பாடலின் எண்ணிக்கை அடிப்படையில் அமையவில்லை என்பதும் தெரிகிறது.

எட்டுத்தொகை நூல்களுக்குச் சொன்னது போலவே இந்தப் பத்துப்பாட்டு நூல்கள் தோன்றிய காலமோ அல்லது அது தொகுக்கப்பட்ட காலமோ கருத்தில் கொள்ளப்பட்டு இவை தொகுக்கப்பட்டனவா என்ற செய்தியை அறிந்து கொள்வதற்கும் உறுதி செய்வதற்கும் ஏற்ற வகையில் வரலாற்றுக் குறிப்புகள் எவையும் நம்மிடம் இல்லை.

எனவே இவை அந்த வகையில் அமைந்தனவா என்பதை அறிந்து கூறுவதற்கும் வாய்ப்பில்லை.

காரணம் திருமுருகாற்றுப்படை என்பது மிகவும் பிந்திய காலத்து நூலாகும்.

இந்தப் பத்துப்பாட்டு நூல்களை அடுக்கிச் சொல்லும் இந்த வெண்பாவில் ஒரு சில பாடல்களுக்கு மட்டுமே அடைமொழிகளைத் தந்திருக்கிறார் அந்த அருந்தமிழ்ப் புலவர்.

“பெருகு வளமதுரைக் காஞ்சி”,

“கோல நெடுநெல்வாடை” என வரும் அடைமொழிகள் உற்று நோக்கத்தக்கவை.

மதுரைக்காஞ்சி என்பது பாண்டிய மன்னர்களின் ஆட்சித் திறன், வணிகச் சிறப்பு,மக்கள் வாழ்வு, நாட்டு வளம், நகர்வளம் என்று பாண்டிய நாட்டின் சிறப்பியல்புகளை எல்லாம் தொகுத்து வழங்குகிற ஒப்பற்ற நூலாகும்.

அதைப்போலவே நெடுநல்வாடை என்பதும் பாண்டியன் ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன் படையெடுத்துச் செல்கிற காட்சியையும் அவன் அன்பு மனைவி அரண்மனையில் கட்டிலில் படுத்திருக்கிற காட்சியையும் சொல்வதோடு பாண்டிய நாட்டின் சிறப்பியல்புகளை எல்லாம் தொகுத்துக் கூறுகின்ற நூலாக அமைந்துள்ளது.

எனவே இந்த இரண்டும் பாண்டியர்களுக்கு உரிய நூலாக இருப்பதால் பாண்டியர்களின் பெருமைகளைப் பேசுகிற நூல்களுக்கு அடைமொழி கொடுத்திருப்பதைப் பார்க்கிற பெ… நாட்டுப் பைந்தமிழ்ப் புலவராக இருக்கக் கூடும் எ… கிறது.



பத்துப்பாட்டு நூல்களில் சரி பகுதியாக இருப்பவை ஆற்றுப்படை பாடல்கள் என்னும் குறித்தை உணர்த்துவதற்காகவே திருமுருகாற்றுப்படை என்னும் ஆற்றுப்படை நூலில் தொடங்கி மலைபடுகடாம் என்னும் கூத்தராற்றுப்படையில் வெண்பாவை நிறைவு செய்திருக்கிறார் இந்தப் புலவர் என்று எண்ணுவதற்கும் இந்த அமைப்பு முறை இடம் அளிக்கிறது.

எனவே பத்துப்பாட்டு நூல்களை மனத்தில் பதிவு இந்த வெண்பாவை இயற்றிய புலவரும் தமிழ் இலக்கிய வரலாற்றில் நிலையான இடத்தைப் பெற்று விட்டார்.

தங்கள் பெயர்களை வெளிப்படுத்தாத இந்த இரு வெண்பாக்களையும் எழுதிய புலவர்கள் ஒருவரா இருவரா என்பதும் நமக்குத் தெரியவில்லை. எனினும் இந்த இரு வெண்பாக்களும் சங்கத்தமிழ் இருக்கின்ற வரையில் நிலைபெற்று நிற்பன. எனவே இந்த வெண்பாக்களை இயற்றிய புலவர்கள் பெயர் தெரியவில்லை என்றாலும் அவர்கள் புகழும் சங்க இலக்கியங்களைப் போலவே ஓங்கி நிற்கும் என்பதில் ஐயமில்லை.

ஆசிரியத் தாழிசை

நெருப்பலையார். இராம இளங்கோவன்
பொருளாளர், பெங்களூர் தமிழ்ச் சங்கம், பெங்களூரு.

தாழிசையில் வெண்டாழிசை, ஆசிரியத் தாழிசை, வெள்ளொத்தாழிசை, குறட்டாழிசை, கலித்தாழிசை, சந்தக் குறள் வண்ணக் கலித்தாழிசை என்னும் கலிங்கத்துப் பரணிக் கலித்தாழிசை, ஈற்றடி மிகுந்தும், இடைமடக்காகவும் வரும் கலித்தாழிசை என்னும் கலியொத்தாழிசை, வஞ்சித்தாழிசைப் போன்ற பாவினங்கள் பலவும் உண்டு.

இவற்றில், ஓரடியில் நான்கு சீர்கள் கொண்டு, சீர்களில் அளவடியாய் அளவொத்து மூன்றடியாய் ஒரு பொருளின் மேல் மூன்றடுக்கி ஒழுகிய ஓசையும், விழுமியப் பொருளும், கோவைப்பட்டு வருவது தான் ஆசிரியத் தாழிசை யாகும். இதில், கலியொத்தாழிசை, வெள்ளொத்தாழிசை, வஞ்சித் தாழிசை போன்று மூன்றடுக்கி மட்டும் ஒரு பாடலாக அமையாது. ஆசிரியத் தாழிசையில் மட்டும் தனித்து மூன்றடியில் மட்டும் ஓரடுக்காகவும் சிறப்பாக அமைந்து வரும். என்று நினைவில் கொள்ளுங்கள்.

தேமா, புளிமா , கருவிளம், கூவிளம் ஆகிய இயற்சீர்கள் பெற்றும், ஒவ்வோரடுக்கிலும் முதலடியிலும் ஈற்றடியிலும் மூன்றாம் சீரும், இரண்டாம் அடியில் ஈற்றுச் சீரும், காய்ச் சீர்கள் பயின்று விரவி வரலாம். ஆசிரியத் தளைப் பயின்று ஒரு பொருளின் மேல் மூன்றடுக்கி வருவதை ஆசிரியத் தாழிசை என்று அழைப்பர். மூன்றடிகள் கொண்ட மூன்றடுக்காய் ஒரே பொருளின் மேல், மூன்று வேறு வகையில் சொல்வதால் ஒரு பொருளின் மேல் மூன்றடுக்கி வந்த ஒரு பாடலாகக் கொள்ளல் வேண்டும்.

முதலடுக்கில் அமைந்த ஆசிரியப் பாவின் சீர்களில் முதலடியில் இரண்டாம் அடியில், மூன்றாம் அடியில் வந்த அதே சீர்கள் ஒவ்வோரடியின் முதல் சீரைத் தவிர்த்து மற்றச் சீர்கள் முதலடுக்கில் அமைந்திருக்கும் சீர்கள் அப்படியே இரண்டாம் அடுக்கிலும் மூன்றாம் அடுக்கிலும் மடக்கி வருதல் வேண்டும். அப்படி மடக்கி வருவதே ஒரு பொருள் மேல் மூன்றடுக்கி வருவது என்று பொருளாகும்.

முதலடியின் இரண்டாம் அடியின் இரண்டாம், மூன்றாம், நான்காம் சீர்களும், மூன்றாம் அடியின் இரண்டாம் மூன்றாம் சீர்களும் மடக்கி வருதல் வேண்டும். இப்படி ஒரே பொருளாய் அதே சீர்களாய் மடக்கி வருவதே மூன்றடுக்கி ஒரு பொருளின் மேல் வந்த ஆசிரியத் தாழிசை யாகும். குறைந்தது ஒவ்வோரடியிலும் இரண்டு ஈற்றுச் சீர்களாவது மடக்காக வருதல் வேண்டும். ஒவ்வோர் ஆசிரியப் பாவின் மூன்றடியும் ஓரெதுகைப் பெற்று வரும். ஒவ்வோரடியிலும் முதல் சீருக்கும் மூன்றாம் சீருக்கும் பொழிப்பு மோனை அமைதல் வேண்டும். சீருக்குச் சீர் தளைப் பார்க்கத் தேவையில்லை.

ஆசிரியத் தாழிசைக்கான ஒரு பொருளின் மேல் மூன்றடுக்கி வந்த பாடலுக்கான எடுத்துக் காட்டுப் பாடலொன்றைக் கீழே காண்போம்.

பகலவன் எழுதிடும் பகலென்னும் பொழுதே
பகலாம்; நாளும் பாங்குடைச் செயலாகும்;
உகந்த நாளென உவந்துமேதான் மகிழ்வோம்!

இருளை எழுதிடும் இரவென்னும் பொழுதே
வருமே நாளும் பாங்குடைச் செயலாகும்;
அரும்நிலா நாளென உவந்துமேதான் மகிழ்வோம்!

விடியற் காலையில் விடிவெள்ளிப் பொழுதொளிப்
படிதல் நாளும் பாங்குடைச் செயலாகும்;
விடியல் நாளென உவந்துமேதான் மகிழ்வோம்!
-நெருப்பலையார்.

மேலே ஒரு பொருளின் மேல் மூன்றடுக்கி வந்த ஆசிரியத் தாழிசையின் பாடலை எடுத்துக் காட்டாகப் பார்த்தோம். அடுத்து, ஒரு பொருளின் மேல் நான்கு சீர்கள் கொண்ட அளவடிகளாக மூன்றடிகளில் ஓரடுக்கித் தனித்து வந்ததைப் பார்ப்போம். இதில், காய்ச்சீர்களைத் தவிர்த்துப் பாடல்களில் இயற்சீர்கள் மட்டுமே அமையும் படியான ஆசிரியத் தாழிசையைக் காண்போம். ஓரடுக்கித் தனித்து வரும் பாடலின் ஒவ்வோரடியின் இரண்டாம் சீரும், நான்காம் சீரும் ஐகாரத்தில் பெரும்பான்மையாக முடிதல் வேண்டும். மூன்றாம் அடி முடியும் போது ஏகாரத்தில் முடிதல் சிறப்பு. அடி தோறும் அடிமறி ஆசிரியப்பாப் போல ஒவ்வோரடியும் பொருள் முடிதல் சிறப்பாகும்.

ஓரடுக்கி வந்த ஆசிரியத் தாழிசையின் ஆறு எடுத்துக் காட்டுப் பாடல்களைக் கீழே காண்போம்: வான்புனல் மழைதனை மண்ணில் பொழிந்தனை;

ஊன்பயிர் செழித்தனை; உயிரும் செழித்தனை;

தேன்போல் மருந்தென திகழ்ந்துமே வாழ்வமே! (1)

இரவினில் விழித்தனை; எழிலொளித் தந்தனை;
அரணாய் நிலவதும் அருளொளி ஈந்தனை!
பரந்த தண்ணொளிப் படர்வதாய்ப் படர்வமே! (2)

பகலால் தந்தனை பகலவன் வெயிலினை;
அகலா உயிர்ப்பினை அள்ளியே ஈந்தனை;
நகல்போல் பகலென நாமும் ஒளிர்வமே! (3)

காடு, கடலினை, கனிந்த பொருளினை, நாடு செழித்திட நலமாய் நல்வினை பீடுற விளைந்திட பெரிதும் வேண்டுமே! (4)

காணும் திசையினைக் கனிந்த பயனை நாணும் வகைதனை
நசுக்கியே நிமிர்ந்தனை;
ஆணும் பெண்ணும் அடைவோம் அறத்தினை! (5)

நெஞ்சம் நிமிர்ந்தனை; நேர்மையை ஏற்றனை;
வஞ்சகம் மறந்தனை; வளமெனும் உண்மையை
பஞ்சமும் இன்றியே பாரில் நிறுத்துவோம்! (6)

-நெருப்பலையார்.

ஒரு பொருளின்மேல் மூன்றடுக்கி வந்த ஆசிரியத்தாழிசைப் பற்றிய இலக்கணக் குறிப்புகளுடன் ஓர் எடுத்துக் காட்டுப் பாடலையும், ஒரு பொருளின் மேல் ஓரடுக்கி வந்ததை வாய்பாட்டு விளக்கத்துடன் ஆறு பாடல்களையும் எடுத்துக் காட்டுடன் விரிவாக அறிந்தோம். அடுத்த பாடத்தில் தாழிசைப் பா வகைகளில் ஒன்றான நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பாப் பற்றி அறிவோம்.

யாப்பிலக்கணம் வளரும்..

பாண்டியர்கள் இருண்ட காலத்தை நீக்கிய வேள்விக்குடி செப்பேடுகள்!

மணியன் கலியமூர்த்தி
தொல்லியல் ஊடக ஆய்வுப் பணி
(Archaeological Journalist and Museum Reviewer)
மேற்கு மாம்பலம்,சென்னை

சங்க காலம் முதல் நீடித்து நிலைத்த பாண்டியர் வரலாற்றில், களப்பிரர் ஆட்சி செய்த காலகட்டத்தை பாண்டியர்கள் இருண்ட காலம் என்று அழைத்தனர்.

கி.பி. 3-ஆம் நூற்றாண்டு முதல் 6-ஆம் நூற்றாண்டு வரை தமிழ் நிலத்தை ஆண்ட களப்பிரர்கள் பற்றிய தெளிவான கல்வெட்டுச் சான்றுகள் குறைவாகவே இருந்தன.

வேள்விக்குடி செப்பேடுகள் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்பு, சங்க காலப் பாண்டியர்களுக்கும், பிற்காலச் சோழர்களை எதிர்த்து ஆட்சி செய்த பாண்டியர்களுக்கும் இடைப்பட்ட சுமார் 600 ஆண்டுகள் (கி.பி. 300 முதல் கி.பி. 900 வரை) குழப்பமானதாக இருந்தது. இந்தச் செப்பேடுதான் அந்தக் காலத்தைப் பற்றிப் பேசுகிறது.

வேள்விக்குடிச் செப்பேடுதான் களப்பிரர் ஆதிக்கம் பற்றி, பாண்டியர் பார்வையில் தெளிவாகக் குறிப்பிடும் மிக முக்கியமான ஆவணமாகும்.

இந்த ஆவணம், களப்பிரர்களை வெற்றி கொண்ட கடுங்கோன் முதல், மானியத்தை மீட்டளித்த பராந்தக நெடுஞ்சடையன் (முதலாம் வரகுணன்) வரையிலான பாண்டிய மன்னர்களின் பரம்பரை வரிசையைத் தெளிவாக வழங்கியது. இதுவே, “முதல் பாண்டியப் பேரரசு” என்று வரலாற்று ஆய்வாளர்கள் அழைக்கப்படும் காலவரிசையை நிலைநாட்ட அடிப்படையாக அமைந்தது. பாண்டியர்கள் ஆட்சியில் இருண்ட பக்கங்களை விலக்கி, பாண்டியப் பேரரசின் உண்மையான வரலாற்றை உலகிற்கு வெளிச்சமிட்ட ஓர் அரிய பெட்டகமே வேள்விக்குடி செப்பேடுகள்!

எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த இந்தச் செப்பேடுகள், இதுவரை கண்டெடுக்கப்பட்ட தமிழ்ச் செப்பேடுகளில் காலத்தால் மிகவும் தொன்மையானவையாகக் கருதப்படுவது இதன் தனிச்சிறப்பு.

இந்தச் செப்பேடுகள் வெறும் அரசாணைகள் மட்டுமல்லாது; இது தலைமுறைகள் கடந்த ஒரு நில உரிமை மீட்புப் போராட்டம் பற்றிய ஆவணங்களை காட்டுகிறது!

இக்கிராமம் முதலில் சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த புகழ்மிக்க பாண்டிய மன்னன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியால் ஓர் பிராமணர்களுக்கு வழங்கப்பட்ட ‘பிரமதேய’ மானியமாகும்.

களப்பிரர்கள் மதுரையைக் கைப்பற்றி ஆண்டபோது, இந்த மானியம் ரத்து செய்யப்பட்டது.

பின்னர், பாண்டிய ஆட்சி மீண்டும் நிலைநாட்டப்பட்டபோது, அசல் மானியதாரரின் வழித்தோன்றல், அன்றைய பாண்டிய மாமன்னனான பராந்தக நெடுஞ்சடையன் (முதலாம் வரகுணவர்மன்) அவர்களை அணுகி, தங்கள் மூதாதையருக்கு வழங்கப்பட்ட நிலத்தை மீண்டும் வழங்கக் கோரினார்கள்.

பாண்டிய மன்னர் நெடுஞ்சடையன், இந்த உரிமைகோரலின் உண்மைத்தன்மையை ஆராய்ந்து, அதற்கான ஆதாரங்களை உறுதிப்படுத்திய பின், வேள்விக்குடி கிராமத்தை மீண்டும் மானியமாக வழங்கி, அதனைப் பொறித்து வழங்கிய ஆவணம்தான் இந்தச் செப்பேடுகள். இதுவே பாண்டியர்களின் வரலாற்றை நிரூபிக்கும் ஒரு முக்கியச் சான்றாக அமைந்தது.

இந்தச் செப்பேடுகள் 1908-ஆம் ஆண்டு மதுரை மாவட்டத்தின் மாடக்குளம் என்ற பகுதியிலிருந்து ஆங்கிலேயர்களால் கண்டெடுக்கப்பட்டு 1908-ஆம் ஆண்டு ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இந்தச் செப்பேடுகள் இங்கிருந்து எடுத்துச் செல்லப்பட்டன.

கல்வெட்டியல் அறிஞரான டாக்டர் ஃபிலீட் (Dr. Fleet), கையால் எழுதப்பட்ட அதன் பிரதியை இந்தியத் தொல்லியல் துறையின் (ASI) திரு. வெங்கைய்யா அவர்களுக்கு அனுப்பினார். அதன் அடிப்படையில்தான் செப்பேடுகளின் விவரங்கள் வெளியிடப்பட்டன. ஆனால், வெங்கைய்யா அவர்கள் அந்தச் செப்பேடுகளைத் தான் நேரடியாகப் பார்க்கவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச்செப்பேடுகள்பற்றிய விவரங்கள்வெளியாகும்வரை, இடைக்காலப் பாண்டியர்களின் பரம்பரை வரிசை (Genealogy) மற்றும் காலவரிசை குறித்த முழுமையான தகவல்கள் தெரியாமல் இருந்தது. இந்த ஆவணம் வெளிவந்த பின்பே, பாண்டியர் வரலாறு ஒரு புதிய பரிமாணத்தை அடைந்தது.

வேள்விக்குடி செப்பேடுகள் லண்டனில், பிரிட்டிஷ் அருங்காட்சியகம் அல்லது பிரிட்டிஷ் நூலகத்தில் இருப்பதாகக் கூறப்பட்டு வந்தாலும், அதற்கான நேரடிப் புகைப்பட ஆதாரம் இல்லாமல் இருந்தது. இந்த நிலையில், அண்மையில் 'உங்கள் அன்பன்' ஹேமந்த் Ungal Anban Hemanth என்ற யூடியூபர் அந்த அருங்காட்சியகத்தை அணுகி, அந்தச் செப்பேடுகளை நேரில் பார்த்துப் புகைப்படம் எடுத்து வந்துள்ளார். இதன் மூலமாக, தமிழ் நில வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தைத் திறந்து வைத்த அசல் செப்பேடுகளை நாம் தற்போது இறுதியாகக் காண்கிறோம்!

வேள்விக்குடி செப்பேடு மொத்தம் 10 தகடுகளைக் கொண்டது. இதில் எழுத்துக்கள் இரு வேறு மொழிகளில் பொறிக்கப்பட்டுள்ளன:

சமஸ்கிருதப் பகுதி (கிரந்த எழுத்தில்):- முதல் 1 முதல் 30 வரிகள் கிரந்த எழுத்து சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்டுள்ளன. இது பாண்டிய வம்சத்தின் பழம்பெருமையையும், புராணத் தொடர்புகளையும், தானம் வழங்கிய மன்னர்களின் முன்னோர்கள் சிலரின் பெயர்களையும் கூறுகிறது.

தமிழ்ப்பகுதி (வட்டெழுத்தில்):- மீதமுள்ள வரிகள், அக்காலத் தமிழர்களின் எழுத்து வடிவமான வட்டெழுத்துகளில் எழுதப்பட்டுள்ளன. இதுவே செப்பேட்டின் மையச் செய்தியான வேள்விக்குடி மானியத்தைப் பற்றிய முழு விவரங்களையும், களப்பிரர்களால் அது பறிபோனதையும், பின்னர் பராந்தக நெடுஞ்சடையனால் அது மீட்கப்பட்ட வரலாற்றையும் விரிவாகக் கூறுகிறது.

செப்பேட்டு வாசகம்: "களப்ரனென்னுங் கலியரசன் கைக்கொண்டதனை யிறக்கிய பின் படுகடல் முளைத்த பருதிபோலப் பாண்டியாதி ராசன் வெளிப்பட்டு..."

(பொருள்: களப்பிரர்கள் எனும் கலியரசர்கள் கைப்பற்றிய நாட்டை நீக்கிய பிறகு, கடலில் தோன்றிய சூரியனைப் போல பாண்டிய அரசன் மீண்டும் வெளிப்பட்டான்.)

இந்த வாசகம், களப்பிரர் ஆட்சியை 'இருண்ட காலம்' என்று பாண்டியர்கள் கருதியதற்கும், பாண்டிய மன்னன் கடுங்கோன் (முற்காலப் பாண்டியர் ஆட்சியை மீண்டும் நிறுவியவன்) அதன் வீழ்ச்சிக்குப் பின் ஒளியைப் போலத் தோன்றியதற்கும் சான்றாகிறது.

செப்பேடு செய்திகள்படி மானியம் பெற்ற அந்தணர் (பிராமணர்) குடும்பத்தின் விவரங்கள்:-

ஆதி மானியதாரர்: சங்கம் வளர்த்த மன்னன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியிடம் முதலில் மானியம் பெற்ற அந்தணர்: கொற்கைக் கிழான் நற்கொற்றன் (அல்லது அதற்கு இணையான பெயர் கொண்டவர்).

மீட்டெடுத்த வாரிசு: களப்பிரர்களால் மானியம் பறிபோன பிறகு, பராந்தக நெடுஞ்சடையனிடம் சென்று விண்ணப்பித்து, மானியத்தை மீட்டெடுத்த வாரிசு: நரசிங்கன் என்பவர்.

பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்பவன் சங்க இலக்கியங்களில் மிகச்சிறப்புடன் போற்றப்படும் பாண்டிய மன்னர்களில் ஒருவன் ஆவான். இவன் வேள்விக்குடி செப்பேடுகளில் 'ஆதி மானியத்தை' வழங்கிய மன்னனாகக் குறிப்பிடப்பட்டிருப்பது, சங்க இலக்கியக் குறிப்புகள் வரலாற்று உண்மை என்பதை உறுதிப்படுத்த உதவுகிறது

வேள்விக்குடி மானியத்தை மீட்டெடுத்து, செப்பேடுகளை வெளியிட்டவன் முதலாம் வரகுணன் என்று அறியப்படும் பாண்டிய மாமன்னன் பராந்தக நெடுஞ்சடையன் ஆவான். இவனது ஆட்சிக்காலம் கி.பி. 768 முதல் 815 வரை ஆகும்.

இவன் களப்பிரர்களிடமிருந்து தமிழ் நிலத்தை மீட்டெடுத்த பாண்டிய மன்னன் கடுங்கோன் தொடங்கி, தன் முப்பாட்டன் வரையான ஆறு பாண்டிய மன்னர்களின் வெற்றிகளையும், பரம்பரை வரிசையையும் இந்தச் செப்பேட்டில் விரிவாகக் குறிப்பிடுகிறான்.

பராந்தக நெடுஞ்செழியன் வேணாட்டை (கேரளப் பகுதி) ஆண்ட ஆய மன்னர்களைத் தோற்கடித்தான்.

கொங்கு நாட்டின் மீது படையெடுத்து, சில பகுதிகளைத் தன்கீழ் கொண்டுவந்தான்.

மேலும், பூவலூர், குழும்பூர், பெரியலூர் போன்ற இடங்களில் பல வெற்றிகளைக் குவித்தான்.

பராந்தக நெடுஞ்சடையன் சைவ மதத்தைச் சார்ந்த பாண்டிய மன்னர்களின் வரிசையில் சற்று மாறுபட்டு, பரம வைணவனாக (விஷ்ணு பக்தன்) திகழ்ந்தான். இவன் காலத்தில்தான் வைணவ ஆழ்வார்களில் ஒருவரான பெரியாழ்வார் வாழ்ந்ததாகக் கருதப்படுகிறது.

இவனது அமைச்சரான மாறங்காரி என்பவன், மதுரைக்கு அருகில் உள்ள ஆனைமலையில் திருமாலுக்காக ஒரு குடைவரைக் கோயிலை அமைத்தான்.

வேள்விக்குடிச் செப்பேடு மட்டுமின்றி, இவனது வரலாற்றை அறிந்துகொள்ள உதவும் மேலும் ஒரு முக்கியமான ஆவணம் சீவரமங்கலச் செப்பேடு ஆகும். இவன் தன் 17-ஆம் ஆட்சியாண்டில் இந்தச் சீவரமங்கலச் செப்பேட்டை வெளியிட்டான்.

இந்த அரிய தமிழ்ப் பெட்டகமான வேள்விக்குடி செப்பேடுகள், அதன் உண்மையான புகழையும் அங்கீகாரத்தையும் பெற்று பாண்டியர்களின் வரலாற்றை மீள் பதிவு செய்து உள்ளது.

வேள்விக்குடி செப்பேடுகள் போன்ற அரிய வரலாற்று ஆவணங்கள், லண்டனில் உள்ள பிரிட்டிஷ் நூலகம் அல்லது அருங்காட்சியகம் போன்ற சர்வதேச தரத்திலான நிறுவனங்களில் இருக்கும்போது, அவற்றிற்குப் பின்வரும் கூடுதல் பாதுகாப்புகள் உறுதி செய்யப்படுகின்றன:

அந்த நிறுவனங்கள் தட்பவெப்பநிலை, ஈரப்பதம், பூச்சிகள் மற்றும் ஒளியின் தாக்கம் ஆகியவற்றைத் துல்லியமாகக் கட்டுப்படுத்தும் அதிநவீன பாதுகாப்பு வசதிகளைக் கொண்டுள்ளன. இது செப்பேடுகளை மேலும் சிதைவடையாமல் பாதுகாத்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

சந்திரோதயம் பதிப்பகம், மதுரை
நூல் விலைப்பட்டியல்

3/422, Thiruvalluvar Street, Dinamani Nagar, Madurai 625 018.
Mob: +91 7010997639

நூல்கள்		**விலை**
1.	திருவிளையாடல் புராணக்கதைகள் (எளிய உரைநடையில்)	200

கவிஞர் முத்தமிழ் விரும்பியின் கவிதை நூல்கள்

1.	உன்னோடு உரையாடுதல்	100
2.	காதல் மொழி	200
3.	பார்வையில் பூத்த நிலா	100
4.	தேனடையும் வரலாறு	100
5.	நுண்கலை மருத்துவன்	200
6.	தொடரும் புழுதிக்கால்கள்	100
7.	புரட்டாசி மூன்றாம் சனிக்கிழமை இரவு	200

முனைவர் செ. இராஜேஸ்வரியின் எம்.ஜி.ஆர். பற்றிய நூல்கள்

1.	வெற்றித்திருமகள் எம்.ஜி.ஆர்.	200
2.	எம்.ஜி.ஆர். நிழல் நிஜம் நிரந்தரம்	200
3.	சிக்கு மங்கு சிக்கு மங்கு சச்ச பப்பா (எம்.ஜி.ஆர் கற்பிக்கும் குழந்தை வளர்ப்பு முறைகள்)	200
4.	வீரமகன் போராட வெற்றி மகள் பூச்சூட	200
5.	மகளிர் போற்றும் மக்கள் தலைவர் எம்.ஜி.ஆர்	200
6.	எம்.ஜி.ஆர். ஒரு ஜீவ நதி	200
7.	எம்.ஜி.ஆர். ஒரு கலியுகப்போராளி	200
8.	ஒளி விளக்கு எம்.ஜி.ஆர்.	200
9.	வெற்றிப் படிக்கட்டில் நாடோடி மன்னன் - I	200
10.	நீங்க நல்லா இருக்கணும் (எம்.ஜி.ஆரின் திரைப்படப் பாடல்கள் - 1)	
11.	பாட்டுடைத்தலைவன். எம்.ஜி.ஆர். [எம்.ஜி.ஆரின் திரைப்படப் பாடல்கள்- II]	200
12.	இரசிகர்களின் இதய தெய்வம் எம்.ஜி.ஆர்	200
13.	முத்தமிழ்க் காவியம் மதுரை வீரன்	200
14.	இரட்டை வேடத்தில் ஜொலிக்கும் எம்.ஜி.ஆர்.	200
15.	எம்.ஜி.ஆர். படங்களில் அறிவியல் புனைவு	200
16.	படகோட்டி, மீனவ நண்பன் ஓர் ஒப்பீடு	200
17.	Unique Fandom of MGR	200
18.	எம்.ஜி.ஆர். படங்களில் தொழில் தர்மம்	200
19.	எம்ஜி.ஆர். படத்தில் சண்டைக்காட்சிகளின் சுவாரஸ்யங்கள்-1	200
20.	எங்க வீட்டுப்பிள்ளை.	200
21.	எம்.ஜி.ஆர். வீடும் விருந்தும்	

முனைவர் சந்திரிகா சுப்பிரமணியன் நூல்கள்

1.	தலைமை பொறுப்பேற்கலாம்	200
2.	இணையத் தமிழ்	120
3.	ஊடகச் சட்டங்கள்	250

4. ஆஸ்திரேலியாவில் அருந்தமிழ் 200
5. கொசு வீட்டில் பாயாசம் (சிறுவர் நூல்) 200
6. பாரதியார் 100
7. நவீன மொழி பெயர்ப்பு உத்திகள் 200
8. மாயோன் வீட்டுத் தோட்டத்தில் (சிறுவர் நூல்)
9. மாயோன் வீட்டு யானை (சிறுவர் நூல்)

பிற ஆசிரியர்களின் நூல்கள்

1. பன்முகப் பண்பாட்டு உரையாடல் - முனைவர் ஆனந்த அமலதாஸ் 200
2. மொழிபெயர்ப்புத் திறன் - பேரா. முனைவர் மு. முத்துவேலு 150
3. சிறுநல் வாழ்க்கை - முனைவர் ஜோதி எஸ். தேமொழி 200
4. ஏன்? எதற்கு? எப்படி? - முனைவர் ஜோதி எஸ். தேமொழி 150
5. உடல் நலமும் புதிய சிகிச்சை முறைகளும் - முனைவர் ஜோதி எஸ். தேமொழி 150
6. தமிழ் இறைவனார் யார் - பேரா. முனைவர் மு. முத்துவேலு200
7. கவிஞர்களும் எழுத்தாணிய - மேனகா நரேஷ் (NJ) 300
8. இலக்கிய நயங்களும் நுட்பங்களும் – மு. பழநிச்சாமி 300

Other Books

1. Concepts of Constitution - Dr. S. Kalai Arasu 300
2. Aranyani By Vijeni (English Novel Part I & Part II) 200
3. Translating Tamil Poetry - Dr. C. Rajeswari 200
4. Tie Your Hears with Words - Afrah Fathin F.N. 215

முனைவர் செ. இராஜேஸ்வரியின் சமூகப்பண்பாட்டு ஆய்வு நூல்கள்

1. பண்பாட்டு நகர்வுகள் - தமிழ் நாட்டில் இருந்து ஜப்பானுக்கு 200
2. பெண் தெய்வ வழிபாடு 200
3. தேவேந்திரன் 200
4. மருதநிலப் பெண் தெய்வங்கள் (வராகி, பிடாரி, தவ்வை) 200
5. இரு நிலத்தில் திருமுருகன் 200
6. முன்னோர் வழிபாடு (கதிரவன். காலதேவன், நாகர் வழிபாடும்) 200
7. வேளாண்மரபில் விதைப்பும் பூப்பும் 200
8. யானைக்கடவுள் 200
9. பெண் பூப்பின் புனித வழிபாடு 200
10. வழிபாட்டின் வேர்களைத் தேடி 250
11. பெண் தெய்வம் (தோற்றமும் வரலாறும்)* 300
12. உலகத்தமிழரின் ஒரே நூல் திருக்குறள் 200

சமய வழிகாட்டி நூல்கள் (7)

சாமிகளின் சரித்திரம் (வரலாறும் வழிபாடும்) 300
விரதங்களின் விளக்கம் 200
சாமிகளின் துதிகள் (27, 54, 108 போற்றி) 200
மலைக்கோயில்கள் - முருகன் (வரலாறும் வழிபாடும்) 200
மலைக்கோவில்கள் - சிவன், விஷ்ணு 250
அம்மன் கோயில்கள் (வழிபாடும் வரலாறும்) 250
திருமணத் திருத்தலங்கள் (வழிபாடும் வரலாறும்) 250
பிள்ளை வரம் அருளும் கோயில்கள் (வழிபாடும் வரலாறும்) 250

முனைவர் செ. இராஜேஸ்வரியின் கவிதைத் திறனாய்வு நூல்கள்

1.	பாடுபொருளும் பாசப்பொருளும்	*250*
2.	"பூ மர நிழலி"ன் களமும் காலமும்	*200*
3.	"2020 தைமாதத்தில் இன்று" கவிதையில் அடிக்கருத்தியல் ஆய்வு	*100*
4.	கவிஞர் முத்தமிழ் விரும்பியின் கவிதையில் காதல்	*100*
5.	கவிஞர் முத்தமிழ் விரும்பியின் பயணக் கவிதைகள்	*200*

ஆங்கிலக் கவிதைகளின் தமிழ் மொழிபெயர்ப்பு முனைவர் செ. இராஜேஸ்வரி

1.	எட்டுத்திக்கும் செல்வீர்	*200*
2.	அவன் கடவுளுக்கு நிகரானவன்	*200*
3.	செக்கச் சிவந்த ரோஜா	*200*
4.	கலீல் ஜிப்ரானின் "மணலும் நுரையும்"	*200*
5.	கலீல் ஜிப்ரானின் "பாடல்கள் 14"	*200*
6.	ஆங்கிலத் தேன் கவிதைகள்	*400*

Tamil Classics in English - (Dr. C. Rajeswari)

1.	Kurunthokai	200
2.	Purananooru	200
3.	Naaladiyaar	200
4.	Aasaarakkovai	200
5.	A Predictress from the Hill (Thiru Kutrala Kuravanchi)	200
6.	A Peasant with two Wives (Mukkudal pallu)	200
7.	Classic Tamil Poems of Poetess Avvai.	300
8.	Classic Poems of Love and Life	400
9.	Ainkurunuuru	200
10.	Pastoral Literature of Classic Tamil	300
11.	A Classic Portrait of Ancient Madurai	300
12.	The Winter's Tale in Classic Tamil (Nedu nal vaadai)	

Socio Cultural Study Series

1.	Lord Indra -The Forgonen Diet	300
2.	Serpent - The Primordial God	300

தற்காலத் தமிழில் சங்க இலக்கிய நூல் வரிசை

1.	குறுந்தொகைக் கவிதைகள்	*200*

மொழிபெயர்ப்பு ஆய்வு நூல்கள் - முனைவர் செ. இராஜேஸ்வரி

1.	மொழிபெயர்ப்பியல் ஆய்வு (ஆய்வு நூல்)	*200*
2.	கவிதை மொழிபெயர்ப்பு	*200*
3.	நவீன மொழிபெயர்ப்பு உத்திகள் (Co-author)	*200*
4.	மொழிபெயர்ப்பில் பெயரும் பொருளும்	*200*
5.	மொழிபெயர்ப்பு நுண்ணாய்வு	*400*

தமிழ் இலக்கண நூல்

1. தமிழில் வேற்றுமை உருபுகள் *200*

சிறுகதை, கவிதை

1. அமராவதியின் காதல் - சத்யப்பிரபா *200*

2. ரோஜா மொட்டு (சித்திரக்கவிதைகள்) - சத்யப்பிரபா *200*

3. மகிழ் பேரின்பம் *200*

ஜோதிட நூல்கள்

மேஷ ராசியின் சூட்சும ரகசியம் *200*

ரிஷப ராசியின் சூட்சும ரகசியம் *200*

நவரத்தினமும் உபரத்தினமும் *200*

மிதுன ராசி சூட்சும ரகசியங்கள் *200*

கடக ராசியின் சூட்சும ரகசியம் *200*

மாத இதழ்கள்

1. தமிழணங்கு மாத இதழ் *200*

2. Love Thamizh *500*

3. சக்தி (பெண்ணிதழ்

பேராசிரியர் முனைவர் தே. ஞானசேகரனின் நூல்கள்
ஆங்கிலத்தில் - முனைவர் செ. இராஜேஸ்வரி

Moonstone Publication, Madurai

1. Emerging Mallarism 200
2. Festival of lord Indra 200
3. Role of Devendirar's in Indian war of Independence 200
   (Sundaralingam Kudumbanar) 200
4. Re reading of Pallu literature 200
5. Mallariyan Literature 200
6. Frontyard without My Dad (Poem) 200

Poems of Er. Poet Muththamizh Virumbi - In English Dr. C. Rajeswari [Moonstone Publication]

1. Therapist of the Finest Art 200
2. Following Dusty Feet 200

என்.சரவணன் நேர்காணல்

சுமார் 35 ஆண்டுகாலமாக எழுத்துத் துறையில் தீவிரமாக இயங்கி வருபவர். ஆரம்பத்தில் விடிவு சஞ்சிகையில் தொடங்கிய எழுத்துப் பயணம், சரிநிகர் பத்திரிகையின் ஆசிரியர்களில் ஒருவராக இயங்கி பின்னர் 2000 இல் நோர்வேக்கு புலம்பெயர்ந்தும் தொடர்ந்தும் பல களங்களில் எழுத்தாளராகவும், செயற்பாட்டாளராகவும் இயங்கி வருகிறார்.

இதுவரை 12 நூல்களை எழுதியிருக்கும் சரவணனின் நூல்கள் சாகித்திய விருது உள்ளிட்ட இன்னும் சில விருதுகளையும் கண்டவை.

அவர் சமீபத்தில் மொழிபெயர்த்து வெளியிட்ட மகாவம்சத்தின் 6வது தொகுதி முக்கியமானது. தமிழ் இலக்கியச் சூழலில் கவனம்பெற்று வருகிறது. மகாவம்ச வரலாற்றில் உள்ளது உள்ளபடி எந்தவித மேலதிக உட்புகுத்துகையின்றி அப்படியே கொண்டுவரப்பட்ட முதல் மகாவம்சப் பிரதி எனலாம். வரலாற்றில் மூலமொழியில் எழுதப்பட்ட பிரதியிலிருந்து தமிழுக்கு கொண்டுவரப்பட்ட முதல் தொகுதியும் இதுவேயாகும்.

இலங்கையில் தேசியவாதம், தலித்தியம், இடதுசாரிய அரிசயல், பெண்ணியம் போன்ற விடயப் பரப்புகளில் எழுதிவந்த என்.சரவணன் சமீப காலமாக, அவரது படைப்புகள் இலங்கை வரலாற்றின் ஆராயப்படாத பரிமாணங்களை நோக்கி திரும்பியுள்ளன. குறிப்பாக குரலற்றோரின் குரலாகவும், பேசாப்பொருளை பேசுபொருளாக்குகிற முனைப்புகளையும் கொண்டவை. கவனிக்கப்படாத கதையாடல்கள் பலத்தையும் கவனிக்கசெய்யும் இலக்கில் அவரின் எழுத்துக்கள் அமைந்துள்ளன. அவர் மொழிபெயர்த்த மகாவம்சமும் அவ்வாறு பலரால் கவனிக்கத்தவறியதும், மூடிமறைக்கப்பட்டதுமான எழுத்தை தமிழுக்கு கொண்டு வந்துள்ளார்.

இந்த மகாவம்சம் பிரதி சர்ச்சைகளும் சலசலப்புக்கு உள்ளாகியிருந்தன. அவரிடமிருந்தே தெளிவுபடுத்திக் கொள்வோம்.

மகாவம்சம் ஏன் தமிழில் அவசியம் என்று நினைக்கிறீர்கள்?

ஐந்தாம் நூற்றாண்டில் வெளிவந்த முதலாவது மகாவம்சம் கி.மு 483 தொடக்கம் கி.பி 362 வரையான சுமார் 845 ஆண்டுகால இலங்கையின் சரித்திரத்தைக் கூறுகிறது. இவ்வாறு உலகிலேயே தொடர்ச்சியாக தன் வரலாற்றை எழுதிவரும் நாடாக இலங்கை திகழ்கிறது. பாளி மொழியில் மகாவம்சம் முதலில் எழுதப்பட்டது.

உலகிலேயே தொடர்ச்சியாக சுமார் 2600 ஆண்டுகால சரித்திரத்தை எழுதிவருகிற ஒரே நாடாக இலங்கை திகழ்கிறது. அதன் மீதான விமர்சனங்கள், சரிபிழைகளுக்கு அப்பால் அது வரலாற்று மூலதாரங்களுக்கு துணை செய்திருக்கிறது என்பது உண்மை. இலங்கையின் வரலாறு அவ்வாறு மகாவம்சத் தொகுதிகளாக இதுவரை வெளிவந்துள்ளன.

அதன் பின்னர் 19ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தான் அப்படி ஒரு வரலாற்று புனித நூல் இருப்பதை உலகின் கவனத்துக்கு கொண்டுவந்தார்கள் ஆங்கிலேய அறிஞர்கள். அதன் பின்னர் பலர் பாளி மொழியிலிருந்து மொழிபெயர்ப்பு செய்ய முயற்சித்து இருக்கிறார்கள். முதன் முதலில் 1837 ஆம் ஆண்டு ஆங்கிலத்தில் வெளிவந்தபோதும் அதன் பின்னர் அதில் உள்ள குறைகளின் காரணமாக இன்னும் சிலரால் வெவ்வேறு காலங்களில் அதன் மொழிபெயர்ப்பு வெளிவந்துள்ளது. இறுதியில் 1908 ஆம் ஆண்டு வில்ஹெம் கைகர் மொழிபெயர்த்த ஜேர்மன் மொழிபெயர்ப்பு பின்னர் ஆங்கிலத்துக்கு மொழிபெயர்க்கப்பட்டு 1912 ஆம் ஆண்டு வெளிவந்தது. இந்த மொழிபெயர்ப்பே இன்றுவரை அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரதியாக உலகெங்கிலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த பின்னணியில் வைத்தே மகாவம்சத்தை நாம் காணவேண்டியிருக்கிறது. இலங்கையின் சிங்கள பௌத்த பண்பாட்டு வரலாறு என்பது “மகாவம்ச” புனைவுகளால் கட்டப்பட்டது என்பதை எவரும் அறிவர். அதனால் தான் 2005 ஆம் ஆண்டு மாவீரர் தின உரையில் பிரபாகரன் சிங்களப் பேரினவாதமயபட்ட மக்களின் மனநிலையை “மகாவம்ச மனநில” என்று குறிப்பிட்டார்.

மகாநாம தேரருக்குப் பின்னர் மகாவம்சம் எழுதும் மரபு தொடர்ச்சியாக பேணப்பட்டு வந்திருக்கிறது. 1956 இல் அது அரசாங்கத்தின் பணியாக பொறுப்பேற்கப்பட்டு கலாசார அமைச்சினால் மகாவம்ச உருவாக்க பணியகம் ஒன்று தோற்றுவிக்கப்பட்டு இன்றுவரை தொடர்ச்சியாக அது எழுதப்பட்டு வருகிறது.

தமிழில் இதுவரை வெளிவந்ததில்லை அரசும் வெளியிட்டதில்லை. அது சிங்கள பௌத்தர்கள் அல்லாதவர்கள் மீது ஏற்படுத்தியிருக்கிற சித்தாந்த வன்முறை எத்தகையது என்பதை வரலாறு அனுபவித்து விட்டது. அப்படி என்றால் அதன் உள்ளடக்கம் என்ன என்பதை தமிழர்கள் அறிந்திருத்தல் அவசியம். அதன் உள்ளடக்கத்தை தெரியாமல் அதன் வீச்சை புரிந்துகொள்ளவும் முடியாது அதன் மீது வினையாற்றவும் முடியாது.

தமிழில் எந்த மகாவம்சத் தொகுதியும் முழுமையாக இல்லாத போது 6வதை மட்டும் மொழிபெயர்ப்புக்குத் தெரிவு செய்ததன் நோக்கம் என்ன?

6வது தொகுதி என்பது 1977 – 2010 வரையான காலப்பகுதியை பேசும் தொகுதி. இன்னும் சொல்லப்போனால் அது ஆயுதம் தாங்கிய ஈழ விடுதலைப் போராட்டம் தொடங்கி அது நிறைவுக்கு வந்த காலப்பகுதி.

இத்தொகுதியை மொழிபெயர்க்கும்படி சமீபத்தில் காலம்சென்ற மகாவம்சக் குழுத் தலைவி பேராசிரியர் மாலனி எந்தகம என்னிடம் கோரியிருந்தார். அதற்கான நேரம் தற்போது இல்லை என்று அவரிடம் அப்போது பதில் அளித்திருந்தேன். ஆனால் உண்மையில் அரசாங்க நிறுவனத்தின் கீழ் அதனை மேற்கொள்ளும் விருப்பம் எனக்கு இருக்கவில்லை. அப்படியொரு பணியை சுதந்திரமாக அங்கே செய்ய முடியும் என்றும் தோணவில்லை.

ஆனால் ஏனைய தொகுதிகளை விட இந்தத் தொகுதி தமிழில் வெளிவருதன் முக்கியத்துவத்தை அதிகம் உணர்ந்திருந்தேன். 6வது தொகுதி என்பது 1977 – 2010 வரையான காலப்பகுதியை பேசும் தொகுதி. இன்னும் சரியாகச் சொல்லப்போனால் அது ஆயுதம் தாங்கிய ஈழ விடுதலைப் போராட்டம் தொடங்கி அது நிறைவுக்கு வந்த காலப்பகுதி.

இந்தக் காலப்பகுதியை நீங்கள் கவனிப்பது அவசியம். 1978 – 2010 வரையான காலப்பகுதி என்பது சரியாக ஈழப்போராட்டம் ஆயுதப்போராட்டமாக உருவெடுத்து அப்போராட்டம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட காலமாகும்.

இதுவரை தமிழ் மக்களின் உரிமைப்போராட்டம் குறித்து அரசாங்கங்களின் கருத்துக்களை நாம் அறிந்திருக்கிறோம். ஆனால் "இலங்கை அரசின்" உத்தியோகபூர்வ விளக்கத்தை அறிந்துகொள்ள தற்போது வெளிவந்திருக்கும் 2010 வரையிலான மகாவம்சத்தின் 6வது தொகுதியை நாம் கவனத்துக்கு எடுப்பது அவசியம். இது அரசின் உத்தியோகபூர்வ கருத்தல்ல என்று அவர்கள் கூறி வருகிற போதும் அது ஏற்கக்கூடியதல்ல.



சுமார் 70 ஆண்டு காலமாக அரச நிதியில், அரச அமைச்சொன்றின் கீழ், அரச திணைக்களத்தின் ஒரு அங்கமாக தோற்றுவிக்கப்பட்டு இயக்கப்பட்டு வருவதை எவ்வாறு அரசுக்கு பொறுப்பில்லை

என்று கூற முடியும். மகாவம்சக் குழுவின் உறுப்பினர்களை நியமிப்பதும் இயக்குவதும் யார்? அதற்கான திட்டங்களை இடுவது யார்?

நமக்கு எதிரான ஒரு மகாவம்சம் என்று தெரிந்தும் இந்த மகாவம்சம் தமிழில் ஏன் நீங்கள் செய்யவேண்டும் என்கிற கேள்வி எழுப்பப்பட்டிருக்கிறதே.

நமக்கு எதிராக என்ன எழுதப்பட்டிருக்கிறது என்பதை எப்படி அறிந்திருக்கிறீர்கள்? அல்லது அறிவீர்கள்? சிங்களம், பாளி மொழியைத் தவிர வேறெந்த மொழியிலும் அவர்கள் வெளியிடவில்லை. இப்போதைக்கு அவர்கள் வெளியிடப்போவதுமில்லை. அரசொன்று தமது சொந்த மக்களுக்கு எதிராக எழுதி வைத்திருக்கும் பதிவுகளை மறைத்தே வைத்திருக்கிறது. அதை யாராவது வெளிக்கொணர வேண்டுமல்லவா?

மூலாதாரம் இல்லாமல் எப்படி நாம் வினையாற்ற முடியும்? தமிழ் பேசும் மக்களுக்கு நிகழ்ந்த எந்தக் கொடுமையும் அதில் பதிவு பெறவில்லை. அது மட்டுமன்றி பல திரிபுகளும் பொய்களும் உள்ளன. உதாரணத்துக்கு 1981 யாழ் நூலக எரிப்பு பற்றிய விபரங்களை வாசித்தால் வாசிக்கும் ஒருவருக்கு அதைத் தமிழ் மக்களே எரித்துவிட்டார்கள் என்று கருதக்கூடிய தொனியில் அது காணப்படுகிறது.

புலிகளின் விஷவாயுத் தாக்குதலுக்கு படையினர் பலியானதாக கூறுகிறது. ஆனால் இராணுவத்தினர் மேற்கொண்ட விஷவாயுத் தாக்குதலினால் பொதுமக்கள் கொல்லப்பட்டதாக பிரபல குற்றச்சாட்டு உண்டு.

இலக்கியம் பற்றிய அத்தியாயங்களில் வருடாந்தம் வழங்கப்படுகிற சாகித்திய விருதுகள், கௌரவ பட்டங்கள் பற்றிய பதிவுகள் எல்லாமே சிங்கள இலக்கியவாதிகள் பற்றி மட்டுமே உள்ளன. அவர்களுடன் அவ்விருதுகளைப் பெற்ற தமிழ் இலக்கியவாதிகள் பற்றிய பதிவுகள் எதுவும் கிடையாது. மகவம்சத்தைப் வாசித்து முடிக்கும் ஒருவர் இந்த நாட்டில் தமிழ், முஸ்லிம் மக்கள் அங்கம் தானா என்கிற கேள்வி எழாவிட்டால் ஆச்சரியமே.

அரசியல், சமூகம், ஆன்மிகம், பண்பாடு போன்ற பதிவுகளை எடுத்துக் கொண்டால் சிங்கள பௌத்ததரப்பைத்தவிர ஏனைய சமூகங்களின் விடயங்களைதவிர்த்திருக்கிறது. இருட்டடிப்பு செய்திருக்கிறது என்றும் சொல்லலாம்.

இதுவரை தமிழ் பேசும் சமூகங்களுக்கு எதிராக நிகழ்ந்த இனப்படுகொலை நிகழ்வுகளோ, வன்முறைகளோ பதிவு செய்யப்படவில்லை. மாறாக சிங்களவர்கள் இயக்கங்களால் படுகொலை செயபட்ட சம்பவங்கள் கடும் சொற்களால் பதிவாகியுள்ளன.

மகாவம்சக் குழுவோ இது வரலாற்று பதிவு மட்டுமே என்கிறது. இதில் அரசியல் கருத்துக்கள் எதுவுமே இல்லை என்கிறது. ஆனால் ஒரு இருட்டடிப்புகள் அரசியல் இல்லையா. ஒரு சாரார் மட்டும் முக்கியத்துவபடுத்துவதும் பெருமையாக்குவதும் அரசியல் இல்லையா? அதுவொரு அரசியல் நிலைப்பாடு இல்லையா? இலங்கையில் நடந்த போரை பயங்கரவாதமாக சித்திரித்திருப்பதும், தமிழ் மக்களின் அதிகாரப்பகிர்வு கோரிக்கைகள் பிரிவினைவாதமாக சகல இடங்களிலும் பதிவு செய்யப்பட்டிருப்பதும் அரசியலா இல்லையா? நிலைப்பாடா இல்லையா?

அரசியல், பொருளாதாரம், கலாசாரம், சமயம், கல்வி, சமூகம், சுகாதாரம், சூழலியல் ஆகிய தலைப்புகளில் இவை தொகுக்கப்பட்டுள்ளன. இந்த வரிசையில் இனப்பிரச்சினை என்கிற பகுதிக்கு வைக்கப்பட்டுள்ள தலைப்பு “பயங்கரவாதமும் பிரிவினைவாதமும்” என்பதைக் கொண்டு இத்தொகுதி தமிழ் மக்களின் பிரச்சினைகளை வியாக்கியானப்படுத்தியிருக்கிற விதத்தை உணர்ந்துகொள்ள முடியும்.

இவ்வாறு ஒருதொகை சிக்கல் இருப்பதைக் கண்டேன். இதை ஒரு சமூகமாக வினையாற்றவேண்டுன்றால் அது தமிழ் பேசும் சமூகங்களிடம் சென்றடைய வேண்டும். எனவே மிகுந்த சிரமங்களின் மத்தியில் அப்பணியை குறுகிய காலத்தில் செய்து முடித்தேன்.

சிறுபான்மை இனங்களின் அபிலாசை பற்றிய அரச கொள்கை, நடைமுறை, அவற்றைக் கையாண்ட விதம் என்பவற்றை மகாவம்சம் வழியாக நாம் அறிந்து கொள்வதற்காகவே இத்தொகுதி தமிழில் மொழிபெயர்த்து முடித்தேன்.

இனி வினையாற்றுங்கள்.

இதுவோர் அரச தயாரிப்பு என்கிறீர்கள்! அரச கருமமொழியான தமிழிலும் அது வெளியிடப்பட்டதில்லை என்கிறீர்கள்? அதன் தயாரிப்பு குழுவில் ஒரு தமிழர்களும் இருந்ததில்லையா?

இதுவரை எந்தத் தமிழரும் இருந்ததில்லை. மகாவம்சத்தின் 6வது தொகுதியை உருவாக்கிய குழுவில் சுமார் நூறு பேர் அடங்குகிறார்கள். அவர்களில் ஓரிருவரைத் தவிர அனைவரும் சிங்கள பௌத்தர்கள். தமிழர் ஒருவரின் பெயரும் மகாவம்ச குழுவில் இருப்பதாக நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர் பேராசிரியர் பத்மநாதன் அவர்கள். அவரிடம் அதைப் பற்றி

வினவியபோது தான் அந்தக் குழுவில் இல்லை என்று மறுத்துவிட்டார். இக்காலத்து சைவ சமயம் பற்றி அவர்கள் கேட்ட ஒரு கட்டுரையை எழுதி கொடுத்தேன் அவ்வளவு தான் என்றார்.

மற்றும்படி பல பௌத்த பிக்குமார்ர்கள், இராணுவ அதிகாரிகள், சிங்கள பௌத்த பண்டிதர்களைக் கொண்ட ஒரு குழு அது.

எனவே இதனை சிங்கள பௌத்தர்களால், சிங்கள மொழியில், சிங்கள வரலாறை, சிங்கள பௌத்த சார்பைக் கொண்டு எழுதப்பட்டதென்று கூறுவதில் எந்தத் தவறுமில்லை.

ஈழ யுத்தத்தைப் பற்றிய பதிவுகளில் உள்ள பிழைகளையும், புரட்டுகளையும் எதிர்த்து வினையாற்றுவது முக்கியம் என்கிறீர்களா?

அதற்கான வாய்ப்புகள் இலங்கையில் எங்கே இருக்கிறது. இப்போது "மகாவம்சம் – ஈழ யுத்தத்தின் பக்கங்களைத் திறத்தல்" 6வது தொகுதி (1978 - 2010) என்கிற புதிய நூலொன்று மேஜர் சரத் ஜெயவர்த்தன எழுதி வெளியிட்டிருக்கிறார். மகாவம்சத்தில் ஈழ யுத்தம் பற்றிய தகவல்களில் பல பிழைகள் இருப்பதாகவும், பல மேலதிக விபரங்கள் கட்டாயம் உள்ளடக்கப்பட வேண்டும் என்றும் பல குற்றச்சாட்டுக்களையும் அதற்கான திருத்த பரிந்துரைகளையு சுமார் 367 பக்கங்களில் எழுதி வெளிக்கொணர்ந்திருக்கிறார் அவர்.

ஏற்கெனவே சரத் பொன்சேகா பாராளுமன்றத்தில் இது போன்று மகாவம்சத் தொகுதியில் உள்ள தவறுகளை சுட்டிக்காட்டி நீண்ட உரையை ஆற்றியிருந்தார். அவற்றை திருத்தவேண்டும் என்று பாராளுமன்றத்தில் பரிந்துரைப் பட்டியலை வெளியிட்டிருந்தார்.

மகாவம்சத்தில் உள்ள பல குறைகளை தமிழ் பேசும் மக்கள் தரப்பில் இருந்து முன்வைக்குமளவுக்கு என்ன வாய்ப்பு தான் இங்கே இருக்கிறது? வைத்துவிடத்தான் முடியுமா? இங்கே நான் முன்வைகின்ற விமர்சனங்களை பகிரங்க களத்தில் எவராலும் வைத்து விட்டு நிம்மதியாக உலாவத் தான் முடியுமா?

மகாவம்சத்தின் இன முறுகலை ஏற்படுத்துவதற்கான அதன் அடிப்படை உள்ளடக்கம் என்ன என்று விளக்குவீர்களா?

அதிக சர்ச்சைகளை உருவாக்கியது முதலாவது தொகுதியான மகாநாம தேரர் வெளியிட்ட தொகுதியே. அதில் குறிப்பாக தம்மதீப கருத்தாக்கம், தமிழர்களை அந்நியர்களாகவும், எதிரிகளாகவும் வெறுப்புக்குரியவர்களாகவும் சித்திரிப்பது, அவர்கள் கொல்லப்படுவது பாவமில்லை என பௌத்த பிக்குமாரைக் கொண்டே போதிப்பது, சிங்கள பௌத்தர்களே மண்ணின் மைந்தர்கள் என்கிற கருத்துருவாக்கத்தை தோற்றுவிப்பது என பலவற்றைக் குறிப்பிட முடியும்.

இன்னும் சற்று விரிவாக ஒவ்வொன்றைப் பற்றியும் குறிப்பிட முடியுமா?

சரி தம்மதீப என்கிற கருத்தாக்கத்தைப் பற்றி பார்ப்போமே. 5000 வருடங்களுக்கு பௌத்தத்தை காக்க புத்தர் அருளிச் சென்ற தீவே இலங்கைத் தீவு என்கிற தம்மதீப சித்தாந்தத்தின் அடிப்படை மூலம் மகாவம்சத்தில் இருந்து தான் பிறக்கிறது என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

புத்தர் மரணப்படுக்கையில் பரிநிர்வாணம் அடைந்துகொண்டிருந்த விசாகபௌர்ணமி தினத்தில் விஜயனும் அவனின் தோழர்களும் இலங்கையில் காலடி எடுத்துவைத்தனர். அப்போது சாக்க என்கிற முனிவரிடம் (சக்க என்பதை இந்திரன் என்று கைகரும் குறிப்பிடுகிறார்) "சிங்கபாகுவின் மகனான விஜயன் லாலா நாட்டிலிருந்து எழுநூறு லங்காவுக்கு வருகிறார். ஒ கடவுள்களே லங்காவில் எனது சமயம் நிறுவப்படும். எனவே அவர்களையும் லங்காவையும் பாதுகாக்கவும்" என்று கூறுகிறார். விஜயனும் அவனது வழித்தோன்றல்களுமே பௌத்தத்தைப் பேணி காக்கப்போகின்றனர் என்று பரிநிர்வாணம் அடைந்துகொண்டிருந்த கௌதம புத்தர் கூறியதாக மகாவம்சம் கூறுகிறது. அதன் படி அவன் பௌத்த சிங்கள அரசமைப்பை நிறுவினான் என்றும் மகாவம்சம் கூறுகிறது.

அவ்வாறு விஜயன் இலங்கைக்கு பௌத்த தர்மத்தை தக்கவைப்பதற்கும், செழிக்கவைப்பதற்கும் புத்தபகவானால் தேர்ந்தெடுக்கப்பட்ட தீவே (Chosen Land) இலங்கை என்கிற "தம்மதீப" கோட்பாடு இதன் பிரகாரம் தான் கட்டமைக்கப்பட்டிருக்கிறது. யூதர்களின் வாக்களிக்கப்பட்ட பூமி (promise Land) என்கிற கோட்பாட்டுக்கு ஒப்பானது இந்த கருத்தாக்கம்.

இதைத்தான் "தம்மதீப" தர்மத்தை காக்கின்ற பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட தீவு என்கிற சித்தாந்தத்தின் ஊற்று இது தான். இந்த "தம்ம தீப" கருத்தாக்கத்தை புனைந்து நிறுவுவதன் மூலமே இது பௌத்த நாடென்றும், அதனைப் பாதுகாப்பதற்கான பொறுப்பை இலங்கைக்கும், சிங்களவர்களுக்கும் அளித்து விட்டுச் சென்றதாகவும் இன்றுவரை கூறப்படுகிறது.

உலகெங்கிலும் ஒரு கருத்துருவாக்கத்துக்கு புனிதத்துவ அந்தஸ்தைக் கொடுத்துவிட்டால் அதன் மீது கேள்வி எழுப்ப முடிவதில்லை. மீறினால் அது பாவமாகவும், குற்றமாகவும் நம்பவைக்கப்பட்டுவிடும். அதுவும் அச்சித்தாந்ததுக்கு மதக் கருத்தேற்றமும் செய்துவிட்டால் சொல்லவே வேண்டாம்.

இலங்கையில் தேவைப்படாத இடங்களில் எல்லாம் புத்தர் சிலைகளையும், ஈற்றில் விகாரைகளையும் நிறுவது இதன் காரணமாகத் தான். எங்குமே அரச மரங்களை வெட்ட முடியாது போவது இதன் காரணமாகத் தான். தர்மசக்கரம், புத்தரின் வடிவம் எதையும் ஆசைக்குக் கூட ஆடை வடிவமைப்பு ஓவியங்களாகக் பயன்படுத்த முடியாது போனது இதனால் தான், பௌத்த தர்மத்தை புனித நிலைக்கு உயர்த்திவிட்டால் அதன் பேரால் உள்ள அடையாளங்கள் அனைத்துமே மீறப்படமுடியாதவையாக ஆக்கபட்டுவிடுகின்றன. ஈற்றில் இன்று அரசியலமைப்பு ரீதியில் பௌத்தத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுவிட்டது. பின்னர் அதன் விளைவாக பாரபட்சட்சங்களுக்கு உள்ளாகின்ற "பௌத்தம் அல்லாத - பௌத்தர் அல்லாத" எது குறித்தும் வினையாற்றும் அருகதையை இழந்துவிடுகிறீர்கள்.

தம்மதீப கருத்தாக்கமானது; இலங்கையை ஒரு பௌத்த நாடாக; சிங்கள நாடாக – பின்னர்; சிங்கள பௌத்த நாடாக; சிங்கள தேரவாத பௌத்த நாடாக படிப்படியாக நிறுவி அதற்கு நிறுவன வடிவம் கொடுக்கப்பட்டுவிட்டது.

இத்தனைக்கும் மகாவம்சம் சொல்கிற இந்த தம்மதீப கதையையோ, அல்லது புத்தர் இலங்கைக்கு மூன்று தடவைகள் விஜயம் செய்தார் என்கிற கதைகளையோ இலங்கைக்கு

வெளியில் உள்ள எந்த பௌத்த புராதன மூல நூல்களிலும் பதிவுகள் இல்லை. திரிபீடகத் தொகுதிகளில் கூட கிடையாது.

இவ்வாறு சிங்களவர்களைத் தவிர மற்றவர்கள் அனைவரும் அன்னியர்களாக கற்பிக்கப்பட இது காரணியாக ஆகி இருக்கிறது என்கிறீர்களா?

உலகம் முழுவதும் அடையாளங்களே பெரும் பிரச்சினைகளுக்கு காரணிகளாக ஆகி இருப்பதைக் கவனிக்கிறீர்கள் அல்லவா? இலங்கைத் தீவில் இனம், மதம், மொழி, சாதி எல்லாமே அடையாளப் பிரச்சினைகள் தான். இதில் அன்னியர்கள் என்கிற கருத்தாக்கம் எங்கிருந்து உருவாகிறது என்று பாருங்கள். அதற்குப் பின்னால் இருக்கிற ஐதீகங்கள்,மாயை, புனைவு என்பவற்றை இயக்குகிற அடிப்படைகளைத் தேடித் பாருங்கள். அவ்வாறு தேடிக்கொண்டிருக்கும் போது அதற்கான மூல ஊற்று மகாவம்சத்தில் போய் நிற்பதை கவனிப்பீர்கள். வெறும் பல காரணிகள் இருப்பது மறுபதில்லை. ஆனால் மகாவம்சத்தின் வகிபாகம் அவ்வளவு இலகுவாக புறக்கணித்து விடமுடியாது.

சிங்கள பௌத்தர்களைத் தவிர ஏனையோர் கள்ளத்தோணிகள் என்கிற கதைகளை பிரபல பேரினவாதத் தரப்புகள் காலம் காலமாகக் கூறிக்கொண்டே வந்துள்ளன. ஆனால் இலங்கை தீவின் முதலாவது கள்ளத்தோணி என்பது மட்டுமல்ல, மோசமான இன சங்காரத்தை செய்து இலங்கைத் தீவை ஆக்கிரமிப்பு செய்த ஆக்கிரமிப்பாளனும் விஜயன் தான்.

விஜயன் இலங்கை வந்திறங்கியபோது விஜயன் சிங்களவனும் இல்லை, பௌத்தனும் இல்லை. விஜயன் வழியில் சிங்கள இனம் விரிவடையவுமில்லை. மகாவம்ச விபரங்களை தர்க்கத்துக்கான மூலங்களாகக் கொண்டாலும் கூட விஜயனின் வழிதோன்றல் மகியங்கனைக்குள் முடங்கிவிட்டது என்று தான் எடுத்துக்கொள்ளவேண்டும். அது குவேனி வழியாக.

இலங்கையில் இயக்கர் இன தலைவியான குவேனியை பயன்படுத்தி இயக்கர் இனத்தை மோசமாக கொன்று நசுக்குகிறான் விஜயன். குவேனியுடன்கூடி இரு பிள்ளைகள் பிறக்கின்றன. ஆனால் ஆட்சிக்கு வந்ததும் குவேனியையும் பிள்ளைகளையும் விரட்டிவிட்டு தோழர்களுடன் சேர்ந்து மதுரையில் பாண்டிய அரச குல பெண்களை மணமுடித்து அழைத்து வருகிறார்கள். ஆனால் விஜயனுக்கும் பாண்டிய இளவரசிக்கும் எந்தக் குழந்தைகளும் பிறக்கவில்லை.

அதாவது சிங்கள இனம் விஜயனால் தழைத்தோங்கவில்லை. விரட்டிவிடப்பட்ட குவேனிக்குப் பிறந்தவர்கள் மீண்டும் காடுகளுக்குள் வாழ்ந்து வேடுவர்களாக எஞ்சினார்கள் எனலாம்.

இன்னொன்றையும் கவனியுங்கள்!

மகாவம்சத்தின் பிரகாரம் இலங்கையின் முதலாவது சிங்கள இராணி மதுரை பாண்டியவம்சத்தைச் சேர்ந்த தமிழர். அதேபோல இலங்கையின் இறுதி அரசன் ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனும் இராணியும் கூட பாண்டியநாட்டுத் தமிழரே.

இன்னும் சொல்லப்போனால் எந்த "சிங்கள பௌத்தத்தின்" பேரால் ஏனையோரை அந்நியர்கள் என்கிறார்களோ அந்த சிங்களத்துக்கும் பௌத்தத்துக்கும் இலங்கையின் எந்தவித பூர்விகத் தொடர்புமில்லை. மகாவம்சத்தை மூலாதாரமாகக் கொண்டே இதனை விளக்க முடியும். பௌத்தமும் இந்தியாவில் இருந்து தான் வந்தது. சிங்கள மொழியின் உருவாக்கத்தின் உள்ளடக்கமாக இருக்கும் பாளி, சமஸ்கிருதமும் இந்தியாவில் இருந்து தான் வந்தது. சிங்கள இனமும் இந்தியாவில் இருந்து தான் வந்தது என்பதை மகாவம்சம் உள்ளிட்ட சிங்கள பௌத்த புனித வரலாற்று நூல்களில் இருந்தே ஆதாரங்களை முன்வைக்க முடியும். ஆனால் இலங்கைத் தீவு சிங்களவர்களின் தீவு, சிங்கள மக்களே மண்ணின் மைந்தர்கள், 5000 வருடங்களுக்கு பௌத்தத்தை காக்க புத்தர் அருளிச் சென்ற தீவே இலங்கைத் தீவு என்கிற தம்மதீப சித்தாந்தத்தை வளர்த்தெடுக்கவும் இதே மகாவம்சத்தைத் தான் இதுவரை பயன்படுத்தி வந்திருகிறார்கள். இன்றும் தொடர்கிறார்கள்.

அதென்ன தமிழர்கள் கொல்லப்பட வேண்டியவர்கள் என மகாவம்சத்தில் இருப்பதாகக் குறிப்பிடுகிறீர்களே!

இனப்படுகொலைக்கலாசாரத்துக்கானவரலாற்றுப்பின்னணியும்இந்தியஎதிர்ப்புவாதமும் கூட அந்த மரபில் வந்தவை தான். இலங்கையில் நிகழ்ந்த பல்வேறு இனவெறுப்பு, இனவொதுக்கல், இனவெறிக்கான அடிப்படைகள் திடீரெனத் தோன்றியவை அல்ல. அதற்கான மனவிருப்பும், செய்த- செய்து வருகிற அக்கிரமங்களுக்கான சுயசமாதானமடைதல், சுயசரிகட்டுதல் என்பற்றுக்கான மூலம் மகாவம்சத்தில் உள்ளது. ஒரு நீண்ட வரலாற்றினால் வடித்தெடுக்கப்பட்ட ஒரு வார்ப்புக்கு சிங்களத் தலைவர்கள். அறிஞர்கள், மதத்தலைவர்கள், நிறுவனங்கள், ஊடகங்கள், மக்கள் என அனைவரும் ஆளாகியுள்ளனர்.

தமிழர்கள் ஆக்கிரமிப்பாளர்களாகவும், அழித்தொழிப்பாளர்களாகவும் புனைகிற பல ஐதீகங்கள் மகாவம்சத்தில் உள்ளன.

மகாவம்சத்தில் 25வது அத்தியாயம் துட்டகைமுனுவின் வெற்றி பற்றிய அத்தியாயமாகும். அவ்வத்தியாயத்தில் 108 – 113 வரையிலான சுலோகங்கள் தமிழர்களைக் கொன்றது பாவம் இல்லை என்று பிக்குமார்களால் துட்டகைமுனுவுக்கு சமாதான சொல்லும் பகுதிகளாகும்.

அந்த மகாவம்ச சுலோகங்கள் இப்படிக் கூறுகின்றன.

> "எல்லாளனை தோற்கடித்தது, தமிழர்களைக் கொன்றது பற்றி
> மகிழ்ச்சியுறாத துட்டகைமுனுவை சமாதானப்படுத்த புவங்கு என்கிற
> தீவைச் சேர்ந்த பிக்குமார் அங்கிருந்து எட்டு பிக்குமாரை அனுப்புகிறார்கள்.

நடுச்சாமத்தில் வந்த அவர்கள், அரண்மனை வாசலில் இறங்கினார்கள். தாங்கள் அங்கே வந்திருப்பதை அறிவித்து ஆகாயமார்க்கமாகவே அரண்மனையின் மேல்தளத்தை அடைந்தார்கள். அவர்களை வரவேற்ற மகா அரசன், அவர்களை அமரச் செய்து, பல விதங்களில் மரியாதைகள் செலுத்திவிட்டு, அவர்கள் வந்ததற்கான காரணத்தை வினவினான், மனிதர்களின் அரசனே, தங்களைச் சமாதானப்படுத்த, நாங்கள் புவங்கு தீவின் மகாசங்கத்தினரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளோம். அப்பொழுது மீண்டும் அரசன் அவர்களிடம் கூறினான்: 'என்னால் இலட்சக்கணக்கானோர் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளதால், வணக்கத் திற்குரியவர்களே, எனக்கு எப்படி அமைதி கிடைக்கும்?'

'இந்தச் செயலால், நீங்கள் சுவர்க்கத்திற்குச் செல்லும் பாதையில் ஏதும் தடையில்லை. மனிதர்களின் அரசனே, தங்களால் ஒன்றரை மனிதர் மட்டுமே கொல்லப்பட்டனர். ஒருவன், மும்மணிகளிலே சரணடைந்து விட்டான்; மற்றவன், பஞ்சசீலத்தை மேற்கொண்டு விட்டான். நம்பிக்கையற்றவர்களும் தீயவர்களுமே பிறர்; அவர்கள் மிருகங்களைவிட உயர்வாக மதிப்பிடக் கூடியவரல்லர்'. ஆனால் தாங்களோ, புத்தரின் நெறிகளுக்குப் பல வழிகளிலே புகழ் சேர்த்திருக்கிறீர்கள்; அதனால், மனதிலிருந்து கவலையை அகற்றுங்கள், மனிதர்களின் அரசே!''

மிருகங்களைக் கொல்வது பாவம் என்று பௌத்த தர்மம் போதிக்கின்றது. ஆனால், மகாவம்சத்தில், தமிழர்கள் மிருகங்களைவிட மேலானவர்கள் அல்ல என்று கூறப்பட்டுள்ளது. இதன்மூலம் பௌத்த தர்மத்தின்படி மிருகங்களைக் கொல்வது பாவமேயாயினும், தமிழர்களைக் கொல்வது பாவமில்லை என்ற போதனை, மகாவம்ச நூலில் பௌத்த துறவிகள் மொழிவதன் வாயிலாகப் பதியப்பட்டுள்ளது.

.மு இரண்டாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் நடந்த துட்டகைமுனு - எல்லாளன் யுத்தத்தை, தமிழ் சிங்கள இனங்களுக்கிடையிலான இன யுத்தமாக வர்ணிக்கும் மகாவம்சத்தில், இலட்சக்கணக்கான தமிழர்கள் மடியும்படி நேரிட்டது தனக்குக் கவலையளிப்பதாக மன்னன் துட்டகைமுனு கூறுவதாகவும், அப்போது மன்னனை ஆற்றுப்படுத்துவதற்காகப் பௌத்த துறவிகள் பின்வருமாறு ஆறுதல் கூறுவதாகவும் ஓர் உரையாடல் வருகின்றது.

"இந்த செய்கையின் காரணமாக நீ சொர்க்கத்திற்குப் போகும் பாதையில் எவ்வித தடையும் ஏற்படாது" என்று துறவிகள் மன்னனுக்குக் கூறுவதுடன், அவ்வாறு கொல்லப்பட்ட இலட்சக்கணக்கான தமிழர்கள் "நமது மார்க்கத்தை நம்பாதவர்கள். தீய வாழ்வை மேற்கொண்டவர்கள். மிருகங்களை விட உயர்வாக மதிக்கப்படக் கூடாதவர்கள் எனப் பௌத்த துறவிகள் மன்னனுக்கு எடுத்துரைத்தனர்" என்று, மகாவம்சம் கூறுகிறது. மகாவம்சம் கூறுகிற அக்கருத்தைச் சிங்கள மக்கள் நம்புகிறார்கள் என்பதே கவனத்திற்குரியது. ஆயிரக்கணக்கான ஆண்டுகாலமாக சிங்கள மக்களின் மனங்களில் இக்கருத்து வேரூன்றி, தமிழர்கள் மிருகங்களைவிடக் கீழானவர்கள் என்றும், அவர்கள் கொல்லப்படவேண்டியவர்கள் என்றும் ஒரு வரலாற்று மன உணர்வு அவர்களிடம் உருவாக்கப்பட்டுள்ளது.''

அதுமட்டுமல்ல, இதன் நீட்சியாக இன்னொரு முக்கிய சிங்கள வரலாற்று இலக்கியத்தையும் இங்கே ஆதாரப்படுத்தவேண்டும்.

மகாவம்சம் வெளிவந்து ஆறு நூற்றாண்டுகளுக்குப் பின்னர் எழுதப்பட்ட சத்தர்மலங்கரா அக்கருத்தை மேலும் மெருகூட்டி உயிர்ப்பிக்கிறது, மன்னனின் கவலைகளைப் போக்குவதற்காக, அவனால் கொல்லப்பட்ட தமிழர்கள் காட்டுமிராண்டிகள், மூடநம்பிக்கை கொண்டவர்கள் மட்டுமல்ல, அவர்களின் மரணம் மாடு, நாய், எலிகளின் மரணத்திற்கு சமமானது. என்கிறது.

அதேவேளை நாரத தேரர், இப்படிக் கூறுகிறார்.

"துட்டகைமுனு மன்னன் தமிழர்களைக் கொன்று குவித்தான் அவன் மத மற்றும் சமூக நடவடிக்கைகளில் ஈடுபட்டதன் மூலம் புண்ணியத்தை அடைந்தான். இந்தப் புண்ணியங்களால் பெற்ற பலத்தால் அவனின் தீய செயல்கள் செயலற்றுபோயின.'' என்கிறார்.

ஈழயுத்த முடிவையும் இத்தோடு ஒப்பிட முடியுமா?

ஏன் முடியாது. தமிழர்கலைக் கொல்வது பாவமில்லை என்றால், அது புண்ணியச் செயல் என்றால் அந்த மகாவம்ச ஐதீகங்கள் சிங்களத் தரப்புக்கு ஆறுதலைத் தராதா?

மதத்தின் பேரால் கேள்வியின்றி எந்தவொரு பாதகச் செயலையும் ஏற்கவைக்க முடியும் என்பதற்கான சான்றுகளை புராணக்கதைகள் பலவற்றில் இருந்து நாம் சான்றுகளைப் பெற முடியும். கீதையில், மகாபாரதத்தில் யுத்தத்துக்கும், அழித்தொழிப்புக்கும் இந்து மத கர்மவினை நம்பிக்கைகளுக்கு ஊடாக எவ்வாறு நியாயங்கள் கற்பிக்கப்படுகின்றவோ அதுபோல மகாவம்சத்திலும் பௌத்தத்தில் பேரால் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதற்கான நியாயங்கள் கற்பிக்கப்படுகின்றன. துட்டகைமுனுவை அவனது குற்ற உணர்ச்சியிலிருந்து மீட்கிறது. துட்டகைமுனு அதற்கு எதுவாக இவ்வாறு குறிப்பிட்டதையும் பதிவு செய்கிறது மகாவம்சம்.

"என்னுடைய இந்த நடவடிக்கைகள் ஒருபோதும் அரசாட்சிக்கானதல்ல மாறாக என்னுடைய இந்த முயற்சிகள் அனைத்தும் புத்தசாசனத்தை ஸ்தாபிப்பதற்காகத்தானதே." (மகாவம்சம் XXV; 117) என்கிறான்.

இதற்காக இதே மகாவம்ச கொலைகார மனநிலையில் சிங்களவர்கள் வளர்த்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்று கூறவில்லை. மகாவம்சம் என்கிற ஒன்று இலங்கையில் இருக்கிறது என்பதையே 19 ஆம் நூற்றாண்டில் தான் கண்டுபிடிக்கிறார்கள்.

ஆனால் இந்த இரு நூற்றாண்டுகளுக்குள் இலங்கையில் வளர்ச்சியடைந்த சிங்கள பௌத்த தேசியவாத கருத்துநிலை படிப்படியாக மகாவம்ச புனிதப்படுத்தலுக்கு ஊடாகத்தான் வளர்ந்தெழுந்தது.

துட்டகைமுனு சிங்கள பௌத்தத்தின் பேரால் தமிழர்களை கொன்றொழித்ததைப்போல 2150 ஆண்டுகளின் பின்னர் அதே சிங்கள பௌத்தத்தின் பேரால் தமிழர்கள் கொடூரமாக கொலையுண்டார்கள். அதைப் பற்றிய முன்னெச்சரிக்கையை அதே மகாவம்சத்தை

மேற்கோள் காட்டி விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் 2005 ஆம் ஆண்டு ஆற்றிய மாவீரர் உரையில் குறிப்பட்டதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

> சிங்களத் தேசம் இன்னும் மகாவம்ச மனவுலகில், அந்தப் புராணக் கருத்துலகிற் புதைந்து போய்க் கிடக்கிறது. இலங்கைத் தீவானது தேரவாத பௌத்தத்தின் தெய்வீகக் கொடையென்றும் சிங்கள இனத்திற்கே உரித்தான சொத்துடைமை என்றும் மகாவம்சம் திரித்துவிட்ட புனைகதையிற் சிங்கள மக்கள் இன்னும் சிக்குண்டு கிடக்கிறார்கள்.
>
> அடிமனதில் ஆழமாக உறைந்து, அசைவற்றதாக இறுகிப் போன இந்தப் புராணக் கருத்து நிலையிலிருந்து சிங்களத் தேசம் விடுபடப்போவதில்லை. இந்தக் கருத்தியற் குருட்டுத்தனத்தால் இலங்கைத் தீவின் உண்மை வரலாற்றையும் அங்கு நிலவும் சமுதாய மெய்ந்நிலைகளையும் சிங்கள மக்களாலும் அவர்களது அரசியல், மதத் தலைமைகளாலும் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியவில்லை.

அப்படிப்பட்ட மகாவம்சம் என்கிற ஒன்று இலங்கைக்கு அவசியமா?

உலகில் வேறெந்த நாட்டுக்கும் இல்லாத வரலாற்று சிறப்பொன்று இலங்கைக்கு இருக்கிறதென்றால் அது மகாவம்சம் என்று நாம் ஒத்துக்கொள்வதில் தவறில்லை. அது உண்மையும் கூட. சுமார் 2600 ஆண்டுகால வரலாற்றை தொடர்ச்சியாக பதிவு செய்து வந்திருக்கிற மரபொன்று நமக்குண்டு என்பது பெருமிதமே. அதுமட்டுமன்றி அது தந்த பல விபரங்கள் நமது வரலாற்று வழித்தடங்களை தேடுவதற்கும், கிடைத்தனவற்றை உறுதிசெய்துகொள்வதற்கும் நமக்கு பேருதவியாக இருந்திருக்கிறது.

ஆனால் அது புரிந்திருக்கிற பாரபட்சம், அசமத்துவம், இன - மத வெறுப்பு, புரட்டு என்பவை ஏற்படுத்தியிருக்கிற நாசத்தை நாம் கணக்கிற் எடுக்க வேண்டும்.

அது திருத்தப்பட முடியாத பதிவுகளாக ஆகியிருக்கிறது. அது இன்னமும் தொடர்ச்சியாக எழுதப்பட்டுக்கொண்டிருக்கிறது. பாடசாலை பாடநூல்கள் தொடக்கம் பல்கலைக்கழகங்கள் வரை போதிக்கப்படுகின்றன. சகல தளங்களிலும் பரப்பப்பட்டு வருகின்றன. அதில் உள்ள வன்முறைப் பாத்திரங்கள் கொண்டாடப்படுகின்றன, வணங்கப்படுகின்றன.

அதற்கு எதிராக வினையாற்றவே பலர் தயங்குகின்றனர். உயிராபத்தை விளைவித்துவிடும் என்று பயப்படுகின்றனர். தமிழ் தரப்பிலிருந்து மாத்திரமல்ல சிங்களத் தரப்பில் இருந்தும் தான்.

மகாவம்சத்தை ஒட்டுமொத்தமாக மறுத்துவிடவோ, நிராகரித்துவிடவோ இனி முடிகிற காரியமுமில்லை. ஆனால் நடைமுறையில் அது ஏற்படுத்திய கறைகளை துடைக்க வேண்டிய தார்மீகப் பொறுப்பு அரசுக்கும், சிவில் சமூகத்துக்கும் உண்டு.

இனி அரசுக்கு இது தொடர்பில் இருக்கும் பொறுப்பு என்னவென்கிறீர்கள்?

இலங்கையின் புனித வரலாற்று நூலாக சிங்கள பௌத்தர்களால் கொண்டாடப்படும் மகாவம்சம் நூலை அதிகாரபூர்வமான வரலாற்றுப் பணியாக அரசு ஏற்றுக்கொண்டது

மகாவம்சத்தை எழுதும் பொறுப்பை 1956இல் அரசு அதிகாரபூர்வமாக ஏற்றுக்கொண்டதன் பின்னர் மகாவம்சத்தின் மூன்று தொகுதிகளை அரசு வெளியிட்டிருக்கிறது.

அதே ஆண்டு சிங்களம் மட்டும் சட்டம் கொண்டு வரப்பட்டு அதன் விளைவாக இனக்கலவரங்கள் வித்திட்ட கதையை நாமறிவோம். அதனைத் தொடர்ந்து மொழிப்பிரச்சினை மேலெழுந்து ஈற்றில் சிங்களத்துடன் தமிழும் அரச மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இறுதியாக வெளிவந்த மூன்று மகாவம்சத் தொகுதிகளும் அரசினால் மேற்கொள்ளப்பட்டவை. ஆனால் இதுவரையான ஆறு தொகுதிகளில் ஒன்றைக் கூட அரசு தமது சொந்த மக்களான தமிழ் மக்களுக்கு தமிழ் மொழியில் வழங்கியதில்லை.

உலகிலேயே எங்கும் இல்லாத நீண்ட நெடிய வரலாற்றுப் பதிவு பெற்ற பெருமை இலங்கைத் தீவுக்கே உரியது என்று பெருமை பேசிக்கொள்கிற நாடு தமது சொந்தப பிரஜைகளில் ஒரு சாராருக்கு கிடைக்காமல் வைத்திருக்கிறது.

2600 வருடகால வரலாற்றை எழுதியவர்களில் தான் தமிழர் ஒருவரும் இல்லை. அதில் தமிழ் பேசும் மக்களின் நலன்கள் பதிவு பெற்றதுமில்லை. அதில் என்ன உள்ளது என்பதையுமா தமிழ் பேசும் மக்களுக்கு மறைத்து வைக்கவேண்டும்.

ஒரு பல்லின, பல்மத, பல் கலாசார மக்களைக் கொண்ட நாட்டில் வரலாறு ஒரு சாராருக்குரியதாக படைப்பதும் பரப்புவதும் நீதியா?

சிங்கள பௌத்தர்கள் அல்லாத பல்சமூகங்களிடம் இருந்து பெறுகிற வரிப்பணத்தைப் பயன்படுத்தி அவர்களுக்கு எதிராக பயன்படுத்துவது தான் தர்மமா? அவர்களை புறக்கணித்துவிட்டு, ஓரங்கட்டிவிட்டு நாடு தான் வெல்லமுடியுமா?

சுதந்திரமும், சமத்துவமும், ஜனநாயகமும், நீதியும் மறுக்கப்பட்டதற்கு பெரும் விலையை கொடுத்திருக்கிறது இந்தத் தேசம். தமிழ் பேசும் மக்கள் சொந்த நாட்டில் சொந்த வரலாற்றை அறிவதற்கான உரிமை பறிக்கப்பட்டவர்களாக தொடர்ந்தும் வைக்கபட்டிருக்கப் போகிறார்களா இல்லையா என்பதை “மறுமலர்ச்சி” ஆட்சியெனக் கூறிக்கொள்ளும் அரசாங்கம் இனி தீர்மானிக்க வேண்டும்.

நிறுவனமயப்பட்ட சிங்கள பௌத்த பேரினவாத சித்தாந்தத்தை அவ்வளவு இலகுவாக பின்னோக்கி இழுக்க முடியாது. அந்த சித்தாந்தம் வளர்ச்சியுற்று நிலைபெற பல படிநிலைகளைக் கடந்து வந்திருக்கிறது. அச் சித்தாந்தம் பரவலாக விரவி பரவி, ஆழ வேரூன்றியுள்ளது. அந்த சித்தாந்தம் தன்னளவில் சரிசெய்ய உலகின் வேறெந்த கோட்பாடும் தேவையில்லை. புத்தர் போதித்த பௌத்த தர்மமே நமக்கு தாராளமாகப் போதும்.

Hindu lady டாக்டர் ருக்மா

சுரேஷ்குமார்
தமிழாசிரியர் , அரசுப் பள்ளி, தேனி

*1864*ல் மகராஷ்டிராவின் மராத்தி குடும்பத்தில் பிறந்தவர் ருக்மா. அப்பா ஜனார்த்தனன் பாண்டுரங்கன். ஆசாரி குடும்பத்தை சேர்ந்தவர்..அம்மா ஜெயந்திபாய்..ஒரளவு வசதியான குடும்பம்.அப்பா சிறு வயதில் இறந்து போக, அம்மா ஜெயந்தி குடும்ப சொத்துகளை மகள் ருக்மா பேரில் எழுதி வைத்துவிட்டு மனைவியை இழந்த சக்ராம் அர்ஜுன் என்ற மருத்துவரை திருமணம் செய்து கொள்கிறார்

11 வயதில் அந்த கால முறைபடி தன்னை விட *9* வயது மூத்த தாதாஜி பிகாஜி என்பவருக்கு ருக்மா திருமணம் செய்து வைக்க படுகிறார். ஆனாலும் கணவன் வீட்டுக்கு போகாமல் ஸ்டெப் பாதர் அர்ஜுன் ,தாய் ஆகியோருடன் வசித்து வருகிறார். அருகில் இருந்த கிறிஸ்துவ மிஷன் லைப்ரரியில் வாசிப்பு .அம்மாவும் பெண்ணும் ஆரிய சமாஜ கூட்டங்களுக்கும் போகிறவர்கள்.ருக்மாவின் மாமியார் இறந்து போக, தாதாஜி ருக்மாவை தன்னுடன் வாழ அழைக்கிறார்..ருக்மா தனக்கு விருப்பமில்லை என்று மறுக்கிறார்.அவர் இரண்டாவது தந்தை அர்ஜுன், ருக்மாவின் கருத்தை ஆதரிக்கிறார்.

தாதாஜி ருக்மாவின் பேரில் இருக்கும் சொத்துக்காக, அர்ஜுன் ருக்மாவை தன்னுடன் வாழ அனுப்பவில்லை என்று வக்கீல் நோட்டிஸ் அனுப்புகிறார்.. ருக்மா தான் தாதாஜியுடன் வாழ விரும்பவில்லை என்று கோர்ட் ஏறுகிறார். *1885* ல் *dadaji vs rukmabai* வழக்கு சட்ட அறிஞர்கள் *Payne,Gilbert, sajam* , தலைமையில் வழக்காகிறது.. கோர்ட் ஹிந்துதிருமண முறைக்கும், ஆங்கில சட்ட முறைக்கும் இடையில் அல்லாடுகிறது..

அறியா பருவத்தில் ருக்மாவின் நடந்துள்ளது என்று நீதிபதி Robert hill pinley தீர்ப்பு சொல்ல, வழக்கு பரபரப்படைகிறது.

ஹிந்து அமைப்புகள் ஆங்கில சட்டம் ஹிந்துக்களின் புனித தன்மைக்கு எதிரானவை என்று குற்றம் சாட்டினர். பாலகங்காதர திலகர் தன் பத்திரிக்கையில் நீதிபதியை கடுமையா விமர்சிக்கிறார். இங்கிலாந்தில் ராணிக்கு நீதிபதி குறித்து கண்டனம் அனுப்பப்படுகிறது.

இந்திய வரலாற்றில் முதன் முதலாக ருக்மா வழக்கு அப்பிலுக்கு போகிறது. பெண்ணுரிமை அமைப்புகள் ருக்மாவுக்கு ஆதரவாக களம் இறங்கின.. ருக்மா கணவருடன் வாழ வேண்டும் அல்லது 3 மாதம் சிறை தண்டனை என்று தீர்ப்பளிக்க, தான் இன்னும் அதிக பட்ச தண்டனை கூட ஏற்க தயார். ஆனால் கணவருடன் வாழ மாட்டேன் என்று கோர்டில் ரிட்டர்ன் சப்மிட் செய்கிறார்.

வழக்கு மேலும் பரபரப்பாகிறது. ருக்மாவுக்கு ஆதரவா Eva macmulan ,Walter macmulan , shivajirao , behramji malabari போன்றவர்கள் போராட தத்துவவாதி மேக்ஸ் முல்லர் எலிஸபத் ராணிக்கு நீண்ட வேண்டுகோள் ஒன்றை அனுப்புகிறார்

ஹிந்து திருமண அமைப்பு பெண்களுக்கு எதிராக உள்ளது.ருக்மா நல்ல புத்திசாலி. அவர் படிக்க வைக்கப்பட வேண்டும்.திருமண வயது குறித்து சட்டம் இயற்றப்பட வேண்டும் என்று எழுதுகிறார். ருக்மா டைம்ஸ் ஆப் இந்தியா பத்திரிக்கையில் Hindu lady என்ற புனை பெயரில் தொடர்ந்து பெண்ணுரிமைக்காக எழுதினார்.

1888 ல் ருக்மாவிற்கு எதிரான வழக்கு டிஸால்வ் செய்ய படுகிறது. தாதாஜிக்கு நஷ்ட ஈடு கொடுத்து, ருக்மா திருமணம் செல்லாது என்று அறிவிக்கப் படுகிறது.அன்றிலிருந்து ருக்மா வெள்ளை புடவை உடுத்த நிர்பந்தப்படுத்த பட்டார்.

ருக்மா தான் மருத்துவராக விருப்பம் தெரிவித்தார்...பல பெண்ணுரிமை அமைப்புகள், கிறிஸ்துவ மிஷனரிகள் பெக்ரம் மலபாரி போன்ற தனிநபர்கள் நிதி சேர்த்து தர 1889 லண்டனில் டாக்டராக படிக்க போகிறர். இங்கிலாந்த் ராணி முயற்சியால் 1891 ல் age of consent act கொண்டுவரப் படுகிறது.பெண் குழந்தைகளின் பால்ய விவாகம் தடை செய்ய படுகிறது .

ஆனந்தி பென் ஜோஷிக்கு முன்னதாக படிப்பை முடுத்து விட்டு டாக்டராக பணிசெய்ய ராஜ்கோட்டில் சேர்கிறார். 1930 வரை மும்பையில் டாக்டராக சேவை செய்தார் ருக்மா.. Purdah - the needs for its abolition என்ற சேவை மையத்தை தொடர்ந்து செயல்படுத்தினார்.

ஹிந்து மதம், இங்கிலாந்து அரசு ,ஆணாதிக்க சமுகம்.உறவுகள் என்று நாலா புறமும் தொடர்ந்து எதிர்த்த போதும் தன் உரிமைக்காக விடாது போராடி வெற்றி பெற்றார்

ஊரெல்லாம் பேர் : தமிழக ஊர்ப் பெயர்கள்

மு. பழநிச்சாமி
நாகமலை, மதுரை –19

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியராகப் பணியாற்றிய, ரா .பி. சேதுப்பிள்ளை அவர்கள் 'தமிழகம் ஊரும் பேரும்' எனும் சுவையான வரலாற்று ஆய்வுநூலை 1946-இல் எழுதி வெளியிட்டார். அதைத்தொடர்ந்து பல்வேறு எழுத்தாளர்கள் ஊர்ப் பெயர்கள் பற்றிய, பல நூல்களையும் கட்டுரைகளையும் ஆய்வேடுகளையும், துண்டு துக்காணியாகக் குறிப்புகளையும் எழுதி வெளியிட்டு வருகின்றனர். அவைகள் அனைத்தும் சுவையானவையாகவும், படிக்கப் படிக்க ஆர்வமூட்டுபவைகளாகவும் அமைந்து, மனதிற்குக் கிளர்ச்சியூட்டிக் கொண்டிருக்கின்றன. தமிழகத்தில் எண்ணிலடங்கா ஊர்ப் பெயர்கள் அங்கிங்கெனாதபடி எங்கும் பரவியுள்ளன. அவையனைத்தையும் எளிதில் ஏதாவது ஒரு சிமிழுக்குள் கொண்டு வந்து அடக்கிக் காட்டி விட முடியாது.

எனினும் அவற்றுள் சிலவற்றையாவது பகுத்துப் பார்த்து இன்பம் கொள்ளலாம். அந்த வகையில் இதுவும் ஒன்று. இத்துறையில் இறங்கி மேலும் ஆய்பவர்களுக்கு இது உதவலாம். இந்தத் தொகுப்புக்கு ஆதாரம் என்று எதைக் கூறுவது? பார்த்தது; படித்தது: ஊர்ப் பயணம் செல்லும் பொழுது உற்று நோக்கியது; இணையத்தில் எடுத்தது; நினைவில் தொடுத்தது, என்பன போன்றவையே ஆகும். இதைத் தேடித் தொகுக்கும் பணி, பெரியதொரு சவாலான பணியாகவே இருந்தது.

நிலமும் ஊர்ப் பெயர்களும்

இயற்கையோடு இயைந்து வாழ்ந்த பண்டைத் தமிழ் மக்கள் தாங்கள் குடியிருந்த பகுதிகளை 'ஊர்' என்று பெயரிட்டு அழைத்தனர். மக்கள் வாழ்ந்த நிலவகைக்கேற்ப மலையடிக்குறிச்சி, காட்டுப்புத்தூர், கடலூர், மருதூர் என ஊர்கள் தோற்றம் பெற்றன. மலையும் மலை சார்ந்த இடமும் 'குறிஞ்சி நிலம்' என்று அழைக்கப்பட்டது. மலை மற்றும் அதன் அருகில் உள்ள ஊர்கள் நாகமலை, ஆனைமலை, திருவண்ணாமலை, விராலி மலை என வழங்கப்படுகின்றன. தரை மட்டத்திலிருந்து உயர்ந்த நிலப்பகுதியை 'மலை' எனவும், உயரத்தில் குறைந்ததை 'குன்று' எனவும், குன்றிலிருந்து குறைந்ததை 'கரடு', 'பாறை' எனவும் பெயரிட்டு அழைத்தனர் குறிஞ்சிநில மக்கள். குன்றத்தூர், குன்றக்குடி, வால்ப்பாறை, பூம்பாறை, சிப்பிப்பாறை ஆகிய ஊர்ப்பெயர்கள் முறையே குன்று மற்றும்

பாறை ஆகிய பெயர்களுக்கு எடுத்துக்காட்டுகளாக அமைகின்றன. காடும் காடு சாந்த பகுதியும் முல்லை நிலமாக அறியப்படுகிறது. அடர்ந்தக் காடுகள் மற்றும் மரங்கள் சூழ்ந்த பகுதிகளுக்குக் குடிபெயர்ந்தத் தமிழக மக்கள் காடும் மற்றும் மரங்களின் பெயர்களை ஊர்ப்பெயர்களாக்கினர். ஆலங்காடு, களக்காடு, மாங்காடு, பனையூர் எனப் பெயரிட்டனர். நெய்தல் நிலமான கடற்கரையில் அமைந்திருந்த பேரூர்கள் பட்டினம் என்றும் சிற்றூர்கள் பாக்கம் எனவும் பழங்காலத்தில் வழங்கப்பட்டது. கடற்கரையை ஒட்டிப் பரதவர் வாழ்ந்த ஊர்கள் கீழக்கரை, கோடியக்கரை என அழைக்கப்பட்டன. திசைகளை அடிப்படையாகக் கொண்ட கீழூர், மேலூர், தென்பழஞ்சி, வடபழஞ்சி முதலான ஊர்ப் பெயர்கள் பழங்காலத்திலிருந்து இக்காலம் வரை வழக்கில் உள்ளன. ஆரப்பாளையம், இராஜபாளையம், கோரிப்பாளையம், கோபிச்செட்டிப்பாளையம் மேட்டுபாளையம், மேலப்பாளையம் ஆகிய ஊர்கள் நாயக்க மன்னர்கள் தமிழகத்தைப் பாளையங்களாகப் பிரித்து அரசாட்சி செய்ததன் அடிப்படையில் உருவானதாகும்.

மனித இனம் மட்டும் இந்த பூமிப் பந்தில் தோன்றி வளர்ந்து வாழ்ந்து வருகிறது என்று கொள்ள முடியாது. மற்ற உயிரினங்களான நடப்பன, ஊர்வன, ஓடுவன, பறப்பன, நகர்வன, நீந்துவனவாகிய ஆடு, மாடு, குரங்கு, மந்தி, வானரம், மான், பன்றி, கீரி, ஓணான், பாம்பு, நாகம், எறும்பு, முதலை, மயில், குயில், கழுகு, காக்கை, கொக்கு, நாரை, குருவி, வண்டு, கிளி, கீரி, கோழி, சேவல், ஈ, புறா, போன்ற உயிரினங்களோடு மட்டுமன்று; புல், பூண்டு, மரம், செடி, கொடிகளான ஆல், வேம்பு, பனை, இலுப்பை, புங்கு, மா, பலா, விளா, மூங்கில், பனை, ஈச்சை, கடம்பு, நெல், புல், புளி, இஞ்சி, நெல்லி மல்லி, நொச்சி, கள்ளி, உசிலை, கருவேப்பிலை, முருங்கை, வெள்ளரி, சுரைக்காய், தேங்காய், தோப்பு, சோலை, விளையும்வயல், ஆகிய இவை நம் வாழ்வோடும் வளத்தோடும் நெருங்கி உறவாடிக் கொண்டிருக்கின்றன. இந்த உணர்வு பூர்வமான உறவால், மனித இனம், தன் வாழிடங்களுக்கு அதன் பெயர்களையும் சூட்டி மகிழ்ந்து இன்புறுகிறது. வாருங்கள்; பார்ப்போம் அவற்றை.

விலங்குகளோடும், ஊர்வன, பறப்பன ஆகியவற்றோடும் தொடர்பு பட்ட ஊர்கள்.

அத்திப்புலியூர்

ஆனையூர்

ஆனைமலை

ஆனைமேடு

ஆனைக்கட்டம்

ஆனைகட்டி

ஆனைக்குடி

ஆனைக்கொட்டம்

ஆனையம் பட்டி யானைக்கவுனி
எருமையூர்
எருமைப்பட்டி
எருமைக்காரன் பாளையம்
எருமைவெட்டி பாளையம்
எருமாடு
ஒத்தக்குதிரை
ஓணான்குட்டை
ஓமாம்புலியூர்
கரடிப்பட்டி
கரடிகுளம்
கரடிக்கல்
கரடியணை
கரடியூர்
கரடிவாவி
கரடிக்கூட்டம்
காகம்
காகம் அணுகாமலை
காக்காதோப்பு
காக்காவாடி
காக்காவேலி
காக்கையூர்
காடையாம்பட்டி
காளையார் கோயில் காளையார் குறிச்சி
காளைமலை
சிங்கபுரம்
சிங்கம்புணரி
சிங்கர்குடி
சிங்கம்பட்டி
சிங்கப்பெருமாள் கோயில்
சிங்களாந்தபுரம்
விக்கிரம சிங்கபுரம்
நரசிங்கபுரம்
சிங்கத்தூண்
புலியூர்
புலியூர் நத்தம்
கீழப்புலியூர்
பெரியபுலியரசி
பெரும்புலிப்பாக்கம்
புலிவலம்
புலிக்குத்தி
புலியகுளம்
குறும்புலியூர்
பெரும்புலியூர்
திருவாடானை
திருப்பாதிரிப்புலியூர்
எருக்கத்தம்புலியூர்
நரிமேடு
நரிக்கட்டியூர்
நரிக்குடி
நரிப்பாளையம்
நரிப்பள்ளி
நாயூர்
கிடாரிப்பட்டி

கீரிப்பட்டி

கீரிப்பாறை

கீரிப்பாளையம்

கீரியூர்

பசுமலை

பசுவந்தனை

பசுவபட்டி

பூனைக்குத்திக்காடு

பூனையூர்

வடமாடு

மாட்டுத்தாவணி

வெள்ளாட்டுமங்கலம்

ஆடுதுறை

வானரம்பட்டி

குரங்கணில் முட்டம்

குரங்கணி

குரங்குத்துறை

குரங்குக்கா

குரங்குநாதன்கோயில்

மந்தித்தோப்பு

மந்தியூர்

குதிரை மொழி

குதிரையாறு

குதிரைமலை

கழுதைப்பட்டி

மானூர்

மான்தோப்பு

புள்ளிமான் கோம்பை

வெளவால்தோப்பு

மாயமான்குறிச்சி வலங்கைமான்

துவரிமான்

மாயமான்கரடு

பொய்மான் கரடு

பன்றிமலை

பண்ணிக்குண்டு

பாம்புக்கோயில்

பாம்பூர்

பாம்பாட்டி

பாம்பாறு

நாகமலை

சுள்ளெறும்பு

எறும்பூர்

திருவெறும்பூர்

எறும்பியூர்

எறும்புக்காடு

எலியூர்

முதலைக்குளம்

முதலைமடு

முதலைப்பட்டி

மயில்ரங்கம்

மயிலாப்பூர்

மயிலாடி

மயிலாடுதுறை

மயிலாடும்பாறை

யானைக்கல்

குயிலுக்குப்பம்

குயிலாலந்துறை

கழுகுமலை

கழுகூர்

காக்களூர் (காக்கை)

கொக்கூர்

கொக்கர குளம் (கொக்கு)

கொக்குகுளம்

நாரையூர்

நாரைக்கிணறு

குருவிகுளம்

குருவித்துறை

குருவிக்கரம்பை

வண்டுவாஞ்சேரி

காக்காபாளையம்

ராஜாளிபட்டி

கிள்ளை

கிளியனூர்

கிளியாநகர்

கிளியூர்

கிள்ளைவனம்

கீரிப்பட்டி

கோழியூர்

கோழிகுத்தி

குறுங்கோழியூர்

கோழிக்கோடு

ஈரோடு (ஈ)

ஈக்காட்டுத்தாங்கல் (ஈ)

புறாவூர்,

காக்கையூர்

வானரமுட்டி

தாவரங்களின் பெயர் பெற்றுத் திகழும் ஊர்கள். சோலை,தோப்பு, வயல் உட்பட...

ஆலந்தளிர்

ஆவாரம்பட்டி

ஆவாரம்பாளையம்

கம்பூர்

திருநெல்வேலி

நெய்வாசல்

நெற்குன்றம்

நெற்குப்பை

நெல்வேலி

நெய்வேலி

நெய்க்குப்பை

நெய்யூர்

ஆலம்பட்டி

ஆலமரத்துப்பட்டி

கடம்பூர்

கடம்பத்தூர்

கடலையூர்.

கத்திரி (ஈரோடு மாவட்டம்)

கத்திரிமலை

கத்திரிநத்தம்
கம்பூர்
தாமரைக்குளம்
இலுப்பூர்
வாகைக்குளம் இலுப்பக்கோரை
கள்ளிக்குடி
மல்லிக்குட்டை
இஞ்சிக்கொல்லை
பருத்தியூர்
மல்லித்துண்டம்
மல்லிகுந்தம்
மல்லிக்கல்
பூந்தோட்டம்
பூந்தமல்லி
மல்லிப்பட்டினம்
சித்தமல்லி
சுத்தமல்லி
நெல்லிக்குப்பம்
நெல்லியானம்
திரு நெல்லிக்கா
நொச்சியம்
நொச்சிகுப்பம்
பழந்தின்னிபட்டி
புளியங்குடி
புளியங்குளம்
புளியங்காடு
புளியந்தோப்பு

புளியம்பட்டி
புளியமரத்துப்பட்டி
புளியடி
எண்டப்புளி
படர்ந்தபுளி
புங்கம்பாடி
உசிலம்பட்டி
பாகல்பட்டி
முருங்கபப்பட்டி
வெள்ளரிஓடை
வெள்ளரிப்பட்டி
சுரக்காயூர்
மஞ்சத்தோப்பு
மாங்காடு
மாங்குளம்
வரகூர்
வாகைக்குளம்
வேப்பங்காடு
வேப்பங்குளம்
வேப்பம்பட்டி
வேப்பந்தட்டை
விளாம்பட்டி
வேப்பிலைப்பட்டி
வேப்பேரி
குறும்பலாப்பேரி
வேம்பார்பட்டி
நல்லமரம்

ஈச்சங்குடி

ஈஞ்சம்ளையம்

கருங்காலி

கருவேப்பிலங்குறிச்சி

மூங்கில் ஊரணி

கீரைத்துறை

தென்னங்குடி

வெண்ணாவல்குடி

ஓலப்பாளையம் (ஓலைப் பாளையம்)

ஓலைக்குன்னம்

பனைக்குளம்

பனையூர்

பனைமடல்

பனங்காடு

பனங்காட்டூர்

பனையபுரம்

பனையகோட்டை

தேங்காய்ப்பட்டினம்

பருத்திக்கோட்டை

பொய்கைநல்லூர்

பனைமரத்துப்பட்டி

முருங்கப்பட்டி

ஒத்தப்பனை

ஆலம்பட்டி (இந்தப் பெயரில் ஐந்து ஊராட்சிகள் உள்ளன)

ஆலமரத்துப்பட்டி

இலுப்பூர்

கரும்பூர்

உப்பூர்

மருதூர்

தண்டந்தோட்டம்

தோப்பூர்

புல்லூர்

மந்தித்தோப்பு

செண்பகத்தோப்பு

சேத்தியாதோப்பு

தோட்டக்காடு

நெல்லித்தோப்பு

தலைச்சோலை

திருவளர்சோலை

திருமாஞ்சோலை

திருமாலிருஞ்சோலை

சோலைஅழகுபுரம்

தேவர்சோலை

மதிகெட்டான் சோலை

மாஞ்சோலை

பொன்னாலம்மன்சோலை

பூஞ்சோலை

பூமலைக்குண்டு

புளியஞ்சோலை

வயலூர்

நெடுவயல்

நெல்வயல்

புதுவயல்

சிறுவயல்
பிள்ளையார்வயல்
கோவில்வயல்
உலகளந்தான்வயல்
மணிவிளான்வயல்
முன்னூத்தான்வயல்
சிறுநாட்டான்வயல்
தர்மராஜன்வயல்
பாட்டவயல்
பிராமணவயல்
பிலியாவயல்
ராயன்வயல்
பள்ளத்திவயல்
பிள்ளைவயல்
கள்ளி வயல்
கார்கா வயல்
காரவயல்
கொடிவயல்
கூத்தாடிவயல்
வெட்டிவயல்
ஏகனிவயல்
மனவயல்
மண்வயல்
மைவயல்
மேலவயல்
அல்லரை மேலவயல்
ஆராவயல்
எழுத்தாணிவயல்
எண்ணைவயல்
எட்டிவயல்
ஏகனிவயல்
கட்டிவயல்
செட்டி வயல்
கோவில்வயல்
சிறுநாட்டான்வயல்
சிராவயல்
தர்மராஜன்வயல்
திருமணவயல்
நம்பிவயல்
நெடுவயல்
பசுவயல்
பள்ளத்திவயல்
பிள்ளையார்வயல்
மண்வயல்
மணவயல்
மணிவிளான்வயல்
மரண்வயல்
மன்றக்குடிவயல்
முத்துக்குழிவயல்
வெட்டிவயல்
வேங்கை வயல்
வேலிவயல்
தளக்காவயல்
பிரம்பு வயல்

நீர் நிலைகள்

ஏரி, ஏந்தல் தாங்கல், ஊருணி, கேணி,கிணறு, குண்டு, குட்டம், குழி, பள்ளம், கால், கரை, ஊத்து, சமுத்திரம் என்பன நீர் நிலைகளோடு தொடர்பு பட்ட ஊர்களாகும்.

ஏரி :

ஏர்த் தொழிலுக்குப் பயன்படும் வகையில், சுற்றிலும் நிலத்தால் சூழப்பட்ட, பெரிய கொள்ளளவைக் கொண்ட நீர்நிலை ஏரி எனப்படும். மழைக்காலத்தில் ஆறுகள் ஓடைகள் மூலம் வரும் மிகையான நீரைத்தேக்கி வைத்து விளைச்சலுக்கு வகை செய்யும் அமைப்பு இது." ஏரி நிறைந்தனைய செல்வகண்டாய்" எனப்பாடுவார் நாவுக்கரசர்.

«பூசல் வன்கரைக் குளங்களும் ஏரியும் புகுவ" *(பெரியபுராணம் : 1027.4)*

ஏந்தல்- தாங்கல்.

ஏரிக்கு இன்னொரு பெயர் ஏந்தல் என்பதாகும். சிற்றேரி என்பது தற்காலத்தில், ஏந்தல், தாங்கல், கண்மாய், என்னும் பெயரில் வழங்கப்படுகின்றது.

ஊருணி, கேணி, கிணறு.

ஊருணி என்னும் சொல்லும் பொருளும் தொன்மை வாய்ந்தவை. குளம், ஏரி முதலான நீர் நிலைகளில் இயற்கையின் கொடையாகிய நீரைச் சேமித்தது போல, ஊருணி என்னும் நீர் நிலையிலும் நீரைச் சேமித்தனர்.

"ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு". (குறள் 215)

என, ஊரணியை உலகவருக்குப் பயன்படும் செல்வந்தரோடு சேர்த்துப் பேசுகிறது குறள்.

"ஊருணி நிறையளவும் .. மறுக்கின்றார்கள் யார்" (கம்ப.மந்திரப் படலம்: 82)
"ஊருண் கேணி மயுண்டுறைத் தொக்க"(குறுந்தொகை: 399)
"ஊருணியின் நிறையவு முதவுமாடுயர்" (கம்பராமாயணம் : 1480)
"ஊருண் கேணி பகட்டிலைப் பேசி" (புறநானூறு :)
"ஊருணி நீர் நிறைவுண்டே யுறுபுனல்" (நீலகேசி : 614. 3)
ஊருணியுற்றவர்க்கு"(திருக்கோவையார் : 400)
"ஊரணிப்பற்று" (குற்றாலக் குறவஞ்சி: 81)

ஊத்து (ஊற்று)

பூமியின் மேற்பரப்பில் நீரோடுவது போல பூமியின் அடிப்பரப்பில் நீரோட்டங்கள் உண்டு. அதிலிருந்து ஊறி எழுந்து வெளிப்பட்டு வரும் நீரே ஊற்று நீர்.

"இறைப்பவர்க்கு ஊற்று நீர் போல மிகும்" (திருக்குறள்: 116)

மடை

மடை அல்லது மதகு என்பது குளம், ஏரி, மற்றும் கண்மாய்களில் உள்ள நீரை, விளை நிலங்களின் பாசனத்திற்குத் திருப்பி விடும் கதவு போன்ற அடைப்பும் திறப்பும் உள்ள ஒரு ஏற்பாடாகும். கிராமங்களில் நீர்க்கட்டி என்பவர் தான் இதனை கையாள்வதற்கு உரிமை படைத்தவர்.

சமுத்திரம்

பெருங்கடல் போல் மிகுந்த நீரை உடைய நீர்நிலையை சமுத்திரம் எனும் பெயரால் அழைத்தனர். கடல் போல் மிகுந்த நீர்ப்பரப்பை உடைய நீர்நிலையை - சமுத்திரம் எனும் பெயரால் முன்னோர் அழைத்தனர். இனி இது தொடர்பான ஊர்ப் பெயர்களைப் பார்ப்போம்.

‘சமுத்திரம்’ என்ற பெயர் கொண்டு முடியும் ஊர்கள்.

அப்பா சமுத்திரம்

அழகப்பா சமுத்திரம்

அழகு சமுத்திரம்

அப்பம்மாசமுத்திரம்

அமணசமுத்திரம்

அம்பாசமுத்திரம்

அரங்க சமுத்திரம்

அன்ன சமுத்திரம்

ஆண்டவராயர் சமுத்திரம்

ஆழிமல்ல சமுத்திரம்

இரவணசமுத்திரம்

இராமசமுத்திரம்

உடையணசமுத்திரம்

ஏகேசமுத்திரம்

ஒபாசமுத்திரம்

எக்கு சமுத்திரம்

கங்கை சமுத்திரம்

கருணா சமுத்திரம்

காமசமுத்திரம்

காளாசமுத்திரம்

கிருஷ்ணசமுத்திரம்

கிரிசமுத்திரம்

குப்ப சமுத்திரம்

கெங்கா சமுத்திரம்

கொண்டசமுத்திரம்

கோபாலசமுத்திரம்

கெட்டிசமுத்திரம்

கெம்பசமுத்திரம்

கொண்டசமுத்திரம்

கோணசமுதத்திரம்

கோபாலசமுத்திரம்

சங்கம்மாசமுத்திரம்

சவேரியார் சமுத்திரம்

சிங்க சமுத்திரம்

சின்னசமுத்திரம்

சின்ன வெங்கடசமுத்திரம்

சின்னபாபுசமுத்திரம்

செகசமுத்திரம்

செட்டி சமுத்திரம்

செல்வ சமுத்திரம்

சீவலசமுத்திரம்

சென்ன சமுத்திரம்

சேஷசமுத்திரம்

சோமசமுத்திரம்

ஞானசமுத்திரம்

தளபதிசமுத்திரம்

தர்ம சமுத்திரம்

தாச சமுத்திரம்

தாண்டவசமுத்திரம்

திம்மசமுத்திரம்

திருமலைசமுத்திரம் தியாகசமுத்திரம்

திம்மதாயசமுத்திரம்

திப்பசமுத்திரம்

திருமலைராய சமுத்திரம்

தீட்ச சமுத்திரம்

தெற்கு சமுத்திரம்

நமணசமுத்திரம்

நல்லம்மாள் சமுத்திரம்

நாக சமுத்திரம்

பள்ளர் சமுத்திரம்

பாலசமுத்திரம்

பாண சமுத்திரம்

பாலா சமுத்திரம்

பூமாசமுத்திரம்

பெத்தா சமுத்திரம்

பெரியநாயகி சமுத்திரம்

பெரியபாபுசமுத்திரம்

பெரிய வெங்கட சமுத்திரம்

பொம்ம சமுத்திரம்

மல்லசமுத்திரம்

மன்னாசமுத்திரம்

மாலசமுத்திரம்

முத்தா சமுத்திரம்

முத்துசமுத்திரம்

மூலசமுத்திரம்

மேல் ரங்க சமுத்திரம்

ரகுநாத சமுத்திரம்

ரங்க சமுத்திரம்

ரெங்கசமுத்திரம்

லிங்க சமுத்திரம்

வடக்கு சமுத்திரம்

வடமலைசமுத்திரம்

வசுவா சமுத்திரம்

வாலசமுத்திரம்

விளந்திட சமுத்திரம்

வேங்கடசமுத்திரம்

வில்லந்திடசமுத்திரம்

ஜங்கம சமுத்திரம்

ஸ்ரீராம சமுத்திரம்

‘சமுத்திரம்’ என்ற பெயர் கொண்டு முடியும் ஊர்கள்

அப்பம்மாசமுத்திரம்

அமணசமுத்திரம்

அம்பாசமுத்திரம்

அரங்க சமுத்திரம்

இரவணசமுத்திரம்

இராமசமுத்திரம்

காமசமுத்திரம்

கிருஷ்ணசமுத்திரம் கிரிசமுத்திரம்

கொண்டசமுத்திரம் கோபாலசமுத்திரம்

கெட்டிசமுத்திரம்

கொண்டசமுத்திரம்

கோணசமுதத்திரம்

சங்கம்மாசமுத்திரம்

சமுத்திரம்

சின்னசமுத்திரம்

சின்னபாபுசமுத்திரம்

செகசமுத்திரம்

சேஷசமுத்திரம்

சோமசமுத்திரம்

தளபதிசமுத்திரம்

தாண்டவசமுத்திரம்

திம்மசமுத்திரம்

திருமலைசமுத்திரம் தியாகசமுத்திரம்

திம்ம சமுத்திரம்

திம்மதாயசமுத்திரம்

திப்பசமுத்திரம்

திருமலை சமுத்திரம்

நமனசமுத்திரம்

பாலசமுத்திரம்

பூமாசமுத்திரம்

பெரியபாபுசமுத்திரம்

மன்னாசமுத்திரம்

மாலசமுத்திரம்

முத்துசமுத்திரம்

மூலசமுத்திரம்

ரெங்கசமுத்திரம்

வடமலைசமுத்திரம்

வாலசமுத்திரம்

வேங்கடசமுத்திரம்

வில்லந்திடசமுத்திரம்

ஐங்கம சமுத்திரம்

ஸ்ரீ ராம சமுத்திரம்

ஏரி, ஏந்தல், தாங்கல்...

ஊருணி, கேணி,கிணறு, குண்டு, குட்டம், குழி, பள்ளம், கால், கரை, ஊத்து, சமுத்திரம் என்பன நீர் நிலைகளோடு தொடர்பு பட்ட ஊர்களாகும். ஏரிக்கு இன்னொரு பெயர் ஏந்தல் என்பதாகும். சிற்றேரி என்பது தற்காலத்தில், ஏந்தல், தாங்கல், கண்மாய், என்னும் பெயரில் வழங்கப்படுகின்றது

ஏரி என்ற பெயர் கொண்டு முடியும் ஊர்கள்

கடங்கனேரி

சீவலப்பேரி

நாங்குநேரி

பழமானேரி

பாகனேரி

புத்தனேரி

மாறனேரி

வீரபாண்டியனேரி

வேப்பேரி

ஏந்தல் என்ற பெயர் கொண்டு முடியும் ஊர்கள்.

அழகரேந்தல்

அவனிக்கோனேந்தல்

அரசனேந்தல்

அன்னியனேந்தல்

இளயரசனேந்தல்

உசிலனேந்தல்

ஒருமணியேந்தல்

கங்கானரேந்தல்

களியனேந்தல்

கடச்சனேந்தல்

கண்ணனேந்தல்

காட்டியனேந்தல்

குணப்பனேந்தல்

குருதனிவாரியேந்தல்

சரவணனேந்தல்

சிவிலியேந்தல்

சீலவராயனேந்தல்

சீவலராயனேந்தால்

சீவனேந்தல்

சுந்தனேந்தல்

செந்தட்டியேந்தல்

செல்லப்பனேந்தல்

தலவனேந்தல்

தவத்தாரேந்தல்

தவசியேந்தல்

திரணியேந்தல்

நல்லனேந்தல்

வாவியாரேந்தல்

வில்லியாரேந்தல்

பனையனேந்தல்

பிச்சைப்பிள்ளையேந்தல்

புருசபட்டிஉடையாரேந்தல்

மங்களனேந்தல்

லாடனேந்தல்

பறையனேந்தல்

பிள்ளையாரேந்தல்

பெத்தனேந்தல்

புத்தேந்தல்

மழவராயேந்தல்

முள்ளியாரேந்தல்

வளவனேந்தல்

வளையனேந்தல்

வல்லாரேந்தல்

வாணியேந்தல்

வேளாரேந்தல்

வேதியாரேந்தல்

விழவடியேந்தல்

வீரனேந்தல்

தாங்கல் என்ற பெயர் கொண்டு முடியும் ஊர்கள்

ஈக்காட்டுத்தாங்கல்

செட்டித்தாங்கல்

பிண்டிதாங்கல்

பின்னதாங்கல்

வடுகந்தாங்கல்

வேடந்தாங்கல்

கிணறு, கேணி, என்ற பெயர் கொண்டு முடியும் ஊர்கள்

சிறுக்கிணர்

பண்ணைக்கிணறு

பூலாங்கிணறு

மல்லாங்கிணறு

திருவல்லிக்கேணி

வெட்டுவான்கேணி

ஊரணி என்ற பெயர் கொண்டு முடியும் ஊர்கள்

கருப்பாயூரணி

கல்லூரணி

செக்கானூரணி

பேராவூரணி

மயிலூரணி

வகுரூரணி

குளம் என்ற பெயர் கொண்டு முடியும் ஊர்கள்

அழகன் குளம்

ஆலங்குளம்

உடைகுளம்

கரிசல் குளம்

கழுநீர்க்குளம்

கொடிக்குளம்

சம்பக்குளம்

சாத்தான்குளம்

துத்திகுளம்

நெடுங்குளம்

பருத்திகுளம்

பாப்பான்குளம்

புளியங்குளம்

புலிக்குளம்

பூக்குளம்

மாங்குளம்

வாகைக்குளம்

விளாத்திகுளம்

வெள்ளான் குளம்

குருவிகுளம்

மடை என்ற பெயர் கொண்டு முடியும் ஊர்கள்

கடைமடை

காரமடை

பத்தமடை

பள்ளிமடை

‘துறை’ என்ற பெயர்கொண்டு முடியும் ஊர்கள்

அம்பாத்துறை

அவல்பூந்துறை

ஆடுதுறை

ஆலந்துறை

ஆலாந்துறை

எருக்கந்துறை

ஏலந்துறை

ஓடத்துறை

கடம்பந்துறை

கருமந்துறை

கீழாந்துறை

கீரைத்துறை

குரங்காடுதுறை

குரங்குத்துறை

குருவித்துறை

குறுக்குத்துறை

குழித்துறை

கூக்கல்துறை

கொற்கைத்துறை

சாலைத்துறை

செந்துறை

சாலைதத்துறை

சிந்துபூந்துறை

சோற்றுத்துறை

திருப்பராய்த்துறை

திருமாந்துறை

திருவட்டத்துறை

திருவண்டுதுறை

திருவாவடுதுறை

திருப்பந்துறை

திருமாந்துறை

தொட்டித்துறை

நெல்லித்துறை

பாலைத்துறை

புங்கந்துறை

பூந்துறை

பெருந்துறை

மயிலாடுதுறை

மாந்துறை

முண்டந்துறை

மேப்பந்துறை

‘குண்டு’ என்ற பெயர் கொண்டு முடியும் ஊர்கள்.

கடமலைக்குண்டு

கரிசனேட்குண்டு

குசவன்குண்டு

குல்லலக்குண்டு

கூத்தியார்குண்டு

கொசுக்குண்டு

சூரக்குண்டு

தப்புக்குண்டு

தும்மக்குண்டு

பண்ணிக்குண்டு

பொன்குண்டு

பூமலைகக்குண்டு

மயிலன்குண்டு

மரிக்குண்டு

மாரிக்குண்டு

வத்தலக்குண்டு

பழைய வத்தலக்குண்டு

வண்ணாங்குண்டு

வெள்ளிக்குண்டு

‘பள்ளம்’ என்ற பெயர் கொண்டு முடியும் ஊர்கள்

ஆசாரிப்பள்ளம்

ஆலம்பள்ளம்

எருக்கம்பள்ளம்

சாரப்பள்ளம்

தூராப்பள்ளம்

பாலப் பள்ளம்

பூதிப்பள்ளம்

பெரும்பள்ளம்

முள்ளிப்பள்ளம்

வரட்டுப்பள்ளம்

‘கால்’ என்ற பெயர் கொண்டு முடியும் ஊர்கள்.

இடகால்

காரைக்கால்

கொள்ளேகால்

கோடங்கால்

தோணுகால்

தைக்கால்

மணக்கால்

மேலக்கால்

வடகால்

வெள்ளகால்

வேங்கிக்கால்

‘கரை’ என்ற பெயர் கொண்டு முடியும் ஊர்கள்.

அமைந்தகரை

அணைக்கரை

ஆற்றாங்கரை

ஊத்தங்கரை

ஏரிக்கரை

கதவுக்கரை

கீழக்கரை

கும்பக்கரை

கெடிலக்கரை

கேக்கரை

கோடியக்கரை

கிருஷ்ணன் குளக்கரை

சேதுக்கரை

திருவக்கரை

தொப்பலக்கரை

நீலாங்கரை

நெல்முடிக்கரை

புல்வாய்க்கரை

மதுக்கரை

மணக்கரை

மணலிக்கரை

வாகரை

கல்கரை

‘பள்ளம்’ என்ற பெயர் கொண்டு முடியும் ஊர்கள்.

இவையும் நீர் ஆதாரத்தோடும் நீர் நிலைகளோடும் தொடர்புபட்ட ஊர்களே.

ஆசாரிப்பள்ளம்

ஆலம்பள்ளம்

எருக்கம்பள்ளம்

கொடிப்பள்ளம்

சாரப்பள்ளம்

சூரப்பள்ளம்

தூராப்பள்ளம்

பாலபள்ளம்

பெரும்பள்ளம்

முள்ளிப்பள்ளம்

வரட்டுப்பள்ளம்

’குழி’ என்ற பெயர் கொண்டு முடியும் ஊர்கள்

அல்லிக்குழி

ஊற்றுக்குழி

கருங்குழி

பள்ளக்குழி

பூமியின் மேற்பரப்பில் நீரோடுவது போல பூமியின் அடிப்பரப்பில் நீரோட்டங்கள் உண்டு. அதிலிருந்து ஊறி எழுந்து வெளிப்பட்டு வரும் நீரே ஊற்று நீர்.

> “இறைப்பவர்க்கு ஊற்று நீர் போல
> மிகும்” *(திருக்குறள் : 116)*

அடியனூத்து

அந்தியூத்து

அதியனூத்து

அப்பனூத்து

ஏகனூத்து

கல்லூத்து

கண்ணூத்து

கூவனூத்து

தன்னூற்று

தாழையூத்து

தொட்டானூத்து

தோட்டனூத்து

நக்கலூத்து

நரியூத்து

பள்ளியூத்து

பலக்கனூத்து

பாப்பானூத்து

பாலூத்து

பெரிய பாப்பானூத்து

புல்லூத்து

பொட்டனூத்து

மருனூத்து

மாவூத்து

மாறனூத்து

மானூத்து

முசுவநூத்து

மொட்டனூத்து

TAMILMAGAN's Gene Notes in Vengai Anchor

Dr. C. Rajeswari M.A., M.Phil., Ph.D
Translator, Publisher, Madurai

Chapter 10

2017 A.D. Malaysia

An article on the dreams of John Wilfer Keiser was authored by a neurologist and published in the magazine The Gene, 2037.

John lived twenty years back in America. He was a psycho-killer. The next line astonished Dr. Maran because it was written that he was a Tamil fanatic. He was an American by birth. He didn't know a word about Tamil; he had never been to Tamil Nadu either. His Tamil fanaticism prompted him to kill a professor. It was a cold-blooded murder. This news about John was shocking for Dr. Maran. He fed that article into his All Tab and started reading it. He put the article in simple mode to make it easier to read. This helped him to remove some technical terms.

Dev was lying in a white dress in the Neuro control physics division. He has to be fixed in the machines in that division for another half an hour. Maran was just going through other articles in that magazine. Maran has asked others to send him articles related to the case of Dev, so this issue was full of articles on peculiar dreams. London Library Journal had collected the articles from its centenary publication and sent them to Maran.

In 2017, American magazines enjoyed publishing about John Keiser who suffered from a chain of thoughts about race.

Dev is also sailing on the same boat. John is an American and Dev is a Tamilian, that is the only difference.

Dev didn't sleep. He was shaking his head left to right, the whole night. He was disturbed, so he couldn't sleep. Now it is dawn. He couldn't call it a dream but we are used to that nomenclature.

Dev thought, "A myth is the big dream created by the history and the dream of a man is the continuation of history." His dreams are in fragments. It was not coherent. It is difficult for him to put them in order. A dream's continuation of the early night may come before the dawn. His mind is putting them in order and trying to get them coherently. He is feeling he is doing the work of two people. He used to work on his computer in reality and his mind will be traveling on a ship as a sailor. When he is driving

a car and his mind will be reading an inscription on himself. He experienced the life of two people. It was like a triple personality disorder. He couldn't tolerate the other man traveling on his shoulders.

Maran has started to find the changes in Dev's brain through a pet test in the hypocombus part of his brain. His brain is beyond many births. As a scientist, it was ridiculous to coin the word 'beyond births'. He couldn't understand how language affinity has come into the genetic ladder. A honey bee takes honey from the flowers and stores it in the hive. No one teaches that. Similarly, the Tamils have a deep and divine love for their language. They honor their language as their life, soul, and spirit. How and Why? Crossing the hurdles of caste and class Tamils love their language in common. People who follow English customs and language in their homes do not treat English as their soul but as pride only.

Tsunami had affected the hypocombus part of Dev's brain and made him suffer with dreams and thoughts in the history of the Tamil language. It is a disease. He spoke about the Indus Valley civilization, then he started speaking about Adichanalluur, kiilti, Puumpukaar, Swarnadweep, Nakkavaram [Nikobar Islands], China. Egypt, Greece, and travel north to south and east to west in his thoughts. Maran could understand it as the route of the ancient language. He has felt that there must be a generation interested in history for his naming too.



John Keiser's story is different. It starts from the Early Chola period. He asks 'Where is Venkai anchor?'. What happened to the ship headed by a Greek captain? He murmurs the name Vennikuyaththi often. He said that his forefather, who was born to a couple of Tamil ladies and a Greek man, told him everything about the Thiramida country on his deathbed. Did he kill the professor for speaking irresponsibly about the traditional cock fight? The language gene dormant for two thousand years has now become active in him.

John Keiser’s shoutings are shocking. Once he said the Sumerian civilization is the Tamil civilization.

He listed out linguistic matches from both languages. Sumerian ‘thukul’ is thukilin Tamil. This thukil [peacock feather] was exported from TamilNadu to Egypt. El enney [sesame oil] is called as il enney by the Sumerians. Aadu in Tamil is uudu in Sumeria. Uur[city] is the same in both the languages.

John narrated the epic story of Gilgamesh and proved the similarity between both civilizations. Gilgamesh, an epic hero’s story, has proof of this fact. It says the forefathers of the Sumerians came to Egypt from the south, crossing the oceans in their ships.

Maran raised a question ‘Is ‘Tamil is our life’ is a thought and belief of this linguistic community embedded in their brain?’. He couldn’t find an answer to this. Will there be a record of their language in their brain? Does the brain teach them or motivate them to love their mother tongue and fight for its antiquity and rights?

A dog knew to mate and give birth to its offspring. A baby elephant as soon as it is born, starts to suckle. No one teaches or trains them in this regard. Similarly, do the Tamils honor their language as their life?

In this world, if there is no flower, then the honey bee may become extinct. If there is no water, the fish may perish, and likewise, if there is no Tamil, will the Tamils die.

Sex is stimulated by hormones, but how come this language affinity is stimulated in the Tamils?

Dev’s activities show that the love for their language is in the brains of the Tamils. It is genetically embedded in their chromosomes. Why Ramanathan told that the hating and vengeance of Tamil are also three thousand years old. Who wanted to take vengeance upon the Tamil language? Why did they hate this language and the people?

Maran sent his article, including Dev’s dreams and John Keisers' story, to the Nobel Academedia forum in which many scientists are members. He sent a copy of that to the Nobel laureate Dr. Renauld. He is a neuroscientist who deals with the neurological problems of men.

‘Ok, let me see how this problem goes on?’ Maran told himself and waited eagerly.

Many scientists linked to this forum for that discussion. Maran thought the Israelian man who threatened Maran the other day also may get linked.

புதிய வெளியீடுகள்





சந்திரோதயம் பதிப்பகம், மதுரை -18.
போன் 7010997639